விலை: 30.00
பக்கங்கள் : இருபத்து நான்கு
website : www.valampurii.lk
Viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
# Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

கல்யாண மாலை
[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005

இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
பதிவுக்கட்டணம்
1000/= + 300/= மட்டுமே

சங்கு 20 வள்ளுவர் ஆண்டு 2050 சித்திரை 17 செவ்வாய்க்கிழமை (30.04.2019) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 132

கட்டாய விடுப்பில் அனுப்பப்பட்ட பூஜித

## பதில் பொலிஸ்மா அதிபராக விக்ரமரத்ன நியமனம்!



(கொழும்பு)
பதவி விலக மறுத்து வந்த பொலிஸ்மா அதிபர் பூஜித ஜயசுந்தர கட்டாய விடுப்பில் அனுப்பப்பட்டு, அவருக்கு பதிலாக, பதில் பொலிஸ்மா 24

இராணுவத்தின் பெயரில்

## முன்னாள் போராளிகளுக்கு தொலைபேசி அழைப்பு

(யாழ்ப்பாணம்)
இராணுவத்தினரின் பெயரில் முன்னாள் போராளிகளுக்கு அழைப்பு விடுக்கப்பட்டமை தொடர்பில் முன்னாள் போராளிகள் அச்சமடைந்துள்ளனர்.

முன்னாள் போராளிகளை நேற்று மாலை 4 மணிக்கு யாழ். நகரத்தில் உள்ள கஜபாகு 23

## தென்மராட்சியில் வாள்வெட்டு குடும்பஸ்தர் படுகாயம்

பெறுமதியான உடைமைகள் சேதம்

(சாவகச்சேரி)
தென்மராட்சி கெற்பேலி மேற்கில் முகத்தை மூடிக் கட்டியவாறு கெல்மட் அணிந்து உழவு இயந்திரத்தில் சென்ற 15க்கும் மேற்பட்ட கும்பல் வீடு ஒன்றினுள் புகுந்து வீட்டையும் தளபாடங்களையும் வீட்டில் இருந்த பெறுமதியான பொருட்களையும் ஆறு மோட்டார் சைக்கிள்களையும் அடித்தும் வெட்டியும் சேதமாக்கியுள்ளனர்.

இதனைத் தடுக்கச் சென்ற குடும்பஸ்தர் க.கனகசிங்கம் (வயது 35) என்பவர் வாள் வெட்டுக்கு இலக்காகி படுகாயமடைந்துள்ளார். இந்த சம்பவம் தொடர்பாக கொடிகாமம் 24

# தேசிய தௌஹீத் ஜமாத்தின் கீழ் 45 பள்ளிகள் உள்ளன

- தற்போது 139 உறுப்பினர்கள் உள்ளனர்
- 45 பேர் சிரியாவில் பயிற்சி பெற்றவர்கள்
- பெண்களும் உள்ளடங்குகின்றனர்
- இராணுவ புலனாய்வில் தகவல்

(கொழும்பு) தேசிய தௌஹீத் ஜமாத் அமைப்பில் சிரியாவில் பயிற்சி பெற்ற 45பேர் உள்ளிட்ட 139 உறுப்பினர்கள் இருப்பதாகவும் புனித குரானை பின்பற்றும் தேசிய தௌஹீத் ஜமாத் அமைப்பின் கீழ் 45 பள்ளிவாசல்கள் உள்ளதாகவும் புலனாய்வுப் பிரிவின் அண்மைய ஆய்வில் தெரியவந்துள்ளது. (23-ம் பக்கம் பார்க்க...)

சமூக வலைத்தளங்கள்

## இலங்கையில் செயற்பாட்டை நிறுத்த முடிவு?

(கொழும்பு)
இலங்கையில் சமூக வலைத்தளங்களை நிறுத்த 24

## தௌஹித் ஜமாத் உறுப்பினர்கள்

12பேர் மன்னாரில் கைது

(மன்னார்)
இலங்கையில் தடை செய்யப்பட்ட அமைப்பான தௌஹித் ஜமாத் அமைப்பின் உறுப்பினர்கள் என்ற சந்தேகத்தின் பெயரில் நேற்று காலை தொடக்கம் மாலை 24

இலங்கைக்கு அனுப்ப

## தயார் நிலையில் 100 கறுப்பு பூனை சென்னையில்

(சென்னை)
உள்ளூர் தீவிரவாத அச்சுறுத்தல்களுக்கு எதிரான விசாரணைகளுக்கு, இந்தியாவின் தேசிய காவல்படையின் 23



## தாக்குதலை உத்தியோகபூர்வமாக பொறுப்பேற்றது ஐ.எஸ்.ஐ.எஸ்

5வருடங்களின் பின்னர் ஐ.எஸ் தலைவர் வீடியோ ஒன்றின் ஊடாக அறிவிப்பு

(கொழும்பு) இலங்கையில் இடம்பெற்ற பயங்கரவாத தாக்குதலை உத்தியோகபூர்வமாக பொறுப்பேற்று ஐ.எஸ்.ஐ.எஸ். பயங்கரவாதிகளின் தலைவர் அபூபக்கர் அல் பக்தாதி அறிவித்துள்ளார். கடந்த 5 வருடங்களுக்கு பின்னர் முதல் தடவையாக வீடியோ ஒன்றினை 23

## இராணுவ சீருடையில் 5 இடத்தில் தாக்குதல்!

பாதுகாப்புத் தரப்பு எச்சரிக்கை

(கொழும்பு)
உயிர்த்த ஞாயிறன்று தற்கொலை தாக்குதல் நடத்திய பயங்கரவாதிகள், விரைவில் தமது 23

போனி சூறாவளி

## இலங்கையை தாக்கலாம்!

(கொழும்பு)
இலங்கைக்கு அருகில் கடற்பரப்பில் உருவாகியுள்ள போனி சூறாவளியானது மேலும் வலுவடையும் என்று வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வு கூறியுள்ளது.

இதன்காரணமாக எதிர்வரும் மே மாதம் 3ம் திகதி வரையில் நாட்டின் பல பாகங்களி 23

## மண்கும்பானில் அமெரிக்க இராணுவ உபகரணம் மீட்பு

பள்ளிவாசல் தலைவர் கைது



(யாழ்ப்பாணம்)
யாழ்.மண்கும்பான் பகுதியில் பாதுகாப்பு தரப்பினர் நேற்று நடத்திய சோதனையில், இராணுவ பயன்பாட்டு பொருள்கள் சில மீட்கப்பட்டுள்ளன.

இரகசிய தகவலையடுத்து நேற்று காலையில் இரா்ணுவம், 24

## முஸ்லிம் உணவகத்தில் ஆபத்தான ஆயுதங்கள் மீட்பு



வவு.கனகராயன் குளத்தில் சம்பவம்

(வவுனியா) வவுனியா கனகராயன்குளம் முஸ்லிம் 24

சுற்றுலாத்துறை மீளக்கட்டியெழுப்பப்படும்

## பயங்கரவாதத்தை தோற்கடிப்பதற்கான ஆற்றல் எமக்கு உண்டு - ஜனாதிபதி

(கொழும்பு)
அண்மையில் ஏற்பட்ட பயங்கரவாத தாக்குதல்களினால் வீழ்ச்சியடைந்துள்ள நாட்டின் சுற்றுலாத் துறை மற்றும் ஹோட்டல்கள் சார்ந்த வர்த்தக துறையை மீண்டும் கட்டியெழுப்பி அதனை இயல்பு நிலைக்குக் கொண்டு வருவதற்கு அர சாங்கம் மிகுந்த பொறுப்புடன் செயற்பட்டு வருவதாக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

சுற்றுலாத்துறையின் மேம்பாட்டிற்காக எதிர்காலத்தில் மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பில் கண்டறிவதற்கான அமைச்சரவை உப குழு 24



## முப்படை, பொலிஸார் இணைந்து புதிய கூட்டு நடவடிக்கை!

பாதுகாப்பு கட்டமைப்பில் புதிய மாற்றம்

(கொழும்பு)
மேல் மாகாணம் மற்றும் புத்தளம் மாவட்டத்தை இணைத்து கூட்டு நடவடிக்கை தலைமையகம் நிறுவப்பட்டுள்ளது. இராணுவம், கடற்படை, விமானப்படை, பொலிஸ் பிரிவுகள் இந்த கூட்டு நடவடிக்கை தலைமையகத்தின் கீழ் செயற்படும்.

அண்மைய பயங்கரவாத தாக்குதலின் பின்னர், இல 23

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# யாழிலுள்ள வர்த்தக நிலையங்களில் வாள்முனையில் கொள்ளை

## வர்த்தகர்கள் பெரும் அச்சம்

யாழ்ப்பாணம் நாவலர் வீதியில் அமைந்துள்ள வர்த்தக நிலையங்கள் சிலவற்றில் வாள்முனையில் பெறுமதி வாய்ந்த பொருட்கள் மற்றும் பெருமளவிலான பணத்தையும் கொள்ளையடித்துச் சென்ற கொள்ளைக்கும்பலால் அப்பகுதியில் பதற்றம் ஏற்பட்டது.

இச்சம்பவம் நேற்று மாலை வேளை இடம்பெற்றுள்ளது.

முகத்தினை கறுப்புத் துணியால் கட்டியவாறு இலக்கத் தகடுகளற்ற மோட்டார் சைக்கிளில் வந்த கொள்ளைக்கும்பல் ஒன்று நாவலர் வீதியிலுள்ள கடைகள் சிலவற்றுக்குச் சென்று அங்கு வாள்களைக் காட்டி கடைகளுக்கு வந்தவர்களை அச்சுறுத்தி வெளியேற்றியுள்ளதோடு கடை உரிமையாளரையும் அச்சுறுத்தி வெளியேறுமாறு கூறியுள்ளதோடு வெளியேறாவிட்டால் வாளால் வெட்டுவோம் என அச்சுறுத்த, பயம் காரணமாக அவர்களும் வெளியேறியுள்ளனர்.

இதனைச் சாதகமாகப் பயன்படுத்திய கொள்ளைக்கும்பல் சிகரட் மற்றும் பெறுமதி வாய்ந்த பொருட்கள் மற்றும் பெருமளவிலான பணம் என்பனவற்றை கொள்ளையடித்துக் கொண்டு தப்பிச் சென்றுள்ளது.

கடந்த சனிக்கிழமை பிறவுண் வீதி மற்றும் கந்தர்மடம் பகுதியிலுள்ள கடைகளில் கொள்ளைக் கும்பல் வாளினைக் காட்டி அச்சுறுத்தி பணம் மற்றும் பொருட்கள் என்பனவற்றை களவாடிச் சென்றுள்ள நிலையில் நாவலர் வீதிகளிலுள்ள கடைகளிலும் இவ்வாறு வாள் முனையில் கொள்ளையடித்திருப்பது யாழிலுள்ள வர்த்தகர்களை பெரும் அச்ச நிலைக்கு உள்ளாக்கியுள்ளது.

இச்சம்பவம் தொடர்பாக யாழ்ப்பாணம் பொலிஸார் சம்பவ இடத்துக்கு சென்றுள்ளதோடு விசாரணைகளையும் மேற்கொணடு வருகின்றனர். (ம-78)

## தௌஹீத் ஐமாத் அமைப்பின் குளியாப்பிட்டி அமைப்பாளர் கைது

தடைசெய்யப்பட்ட தேசிய தௌஹீத் ஜமாத் அமைப்பின் குளியாப்பிட்டி பிரதேச அமைப்பாளரை நேற்று மேல் மாகாண உளவுப் பிரிவினர் கைதுசெய்துள்ளனர்.

மேல் மாகாண உளவுத்துறைக்கு கிடைகப் பெற்ற தகவல் ஒன்றுக்கு அமைவாக அவரது எத்துன்கஹகொட்டுவ வீட்டை சோதனை செய்து அவரைக் கைது செய்ததாகவும் சந்தேக நபர் 42 வயதான இரு பிள்ளைகளின் தந்தை எனவும் பிரதேசத்தின் மௌலவி ஒருவர் எனவும் பொலிஸார் கூறினர். (ம-3)

## தடுப்புக்காவல் சந்தேகநபர் கொலை

# 5 பொலிஸாருக்கு எதிரான வழக்கு ஜூன் 14 வரை ஒத்திவைப்பு

(யாழ்ப்பாணம்)

சுன்னாகம் பொலிஸ் நிலையத்தில் சந்தேகநபரைத் தடுப்புகாவலில் வைத்து சித்திரவதை செய்த பின் கொலை செய்தனர் என்ற குற்றச்சாட்டில் முன்னாள் பொறுப்பதிகாரி சின்தக பண்டார உள்ளிட்ட 5 பொலிஸாருக்கு எதிரான வழக்கை வரும் ஜூன் 14ஆம் திகதிவரை யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றம் ஒத்திவைத்தது.

இந்த வழக்கு யாழ்ப்பாணம் மேல் நீதிமன்ற நீதிபதி அன்னலிங்கம் பிரேமசங்கர் முன்னிலையில் நேற்று விசாரணைக்கு வந்தது.

எதிரிகள் ஐந்து பேரையும் அநுராதபுரம் சிறைச்சாலை உத்தியோகத்தர்கள் மன்றில் முற்படுத்தினர். அவர்கள் சார்பில் சட்டத்தரணிகள் முன்னிலையாகினர்.

வழக்குத் தொடுநர் சார்பில் அரச சட்டவாதி மாதினி விக்னேஸ்வரன் முன்னிலையானார்.

வழக்கை வரும் ஜூன் 14ஆம் திகதி வரை ஒத்திவைத்து யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றம் உத்தரவிட்டது.

திசாநாயக்க முதியன்சேலாகே சின்தக நிஷான்த பிரியபண்டார, ராஜபக்ச முதியன் சேலாகே சங்ஜீவ ராஜபக்ச, கோன்கலகே ஜயன்த, ஞானலிங்கம் மயூரன் மற்றும் வீரசிங்க தொரயலாகே ஹேமசந்திர வீரசிங்க ஆகிய ஐந்து முன்னாள் பொலிஸ் உத்தியோகத்தர்களும் மனித குலத்துக்கு எதிரான சித்திரவதைக் குற்றத்துக்கு தலா 10 ஆண்டுகள் சிறைத் தண்டனையை அநுராதபுரம் சிறைச்சாலையில் அனுபவித்து வருகின்றனர்.

அவர்கள் ஐவருக்கும் எதிராக சிறிஸ்கந்த ராஜா சுமணனை ராமநாதபுரம் என்னுமிடத்தில் வைத்து தண்டனைச் சட்டக் கோவை 140ஆம் பிரிவின் கீழ் தண்டிக் கூடிய காயம் விளைவித்த குற்றச்சாட்டும் மற்றும் அதே இடத்தில் வைத்து அவரைக் கொலை செய்தமைக்காக 296ஆம் பிரிவின் கீழ் தண்டிக்கப்படக் கூடிய கொலைக் குற்றச்சாட்டும் என 3 குற்றச்சாட்டுக்களின் கீழ் யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றில் குற்றப் பத்திரிகை சட்ட மா அதிபரால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

குற்றப்பத்திரிகையில் 10 சிவில் சாட்சிகள், 2 இராணுவ அதிகாரிகள் மற்றும் சட்ட மருத்துவ அதிகாரி உட்பட மொத்தம் 40 சாட்சிகள் இணைக்கப்பட்டுள்ளனர்.

குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தைச் சேர்ந்த பொலிஸ் பரிசோதகர் நிசாந்த டி சில்வாவும் சாட்சிப் பட்டியலில் உள்ளடங்குகின்றார். (ம-3)

# ஜயந்த சந்திரசிறி ஜயசூர்ய பிரதம நீதியரசராக நியமனம்



நாட்டின் 47ஆவது பிரதம நீதியரசராக ஜயந்த சந்திரசிறி ஜயசூர்ய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன்வால் நேற்று நியமிக்கப்பட்டார்.

புதிய பிரதம நீதியரசர் ஜயந்த சந்திரசிறி ஜயசூர்ய நேற்று முற்பகல் ஜனாதிபதி முன்னிலையில் உறுதியுரை எடுத்து பதவியேற்றார். (ம-3)


# பதில் சட்டமா அதிபராக டப்புல்ல டி லிவேரா நியமனம்



சொலிஸ்ரார் ஜெனரல் டப்புல்ல டி லிவேரா. பதில் சட்ட மா அதிபராக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவால் நியமிக்கப்பட்டுள்ளார்.

புதிய சட்ட மா அதிபருக்கான பெயரை அரசியலமைப்புச் சபைக்கு ஜனாதிபதி பரிந்துரைக்காத நிலையிலேயே இந்த பதில் சட்ட மா அதிபர் நியமனம் இடம்பெற்றுள்ளது. (ம-3)

# நாவாந்துறை, ஐந்து சந்திப் பகுதிகளுக்கு ஆளுநர் சுரேன் ராகவன் விஜயம்



(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் நாவாந்துறை மற்றும் ஐந்து சந்தி பகுதிகளுக்கு ஆளுநர் கலாநிதி சுரேன் ராகவன் நேற்று முற்பகல் திடீர் கண்காணிப்பு விஜயத்தினை மேற்கொண்டார்.

இதன்போது நாவாந்துறை பொதுச்சந்தைக்கு விஜயம் செய்த ஆளுநர், அங்குள்ள வியாபாரிகளுடனும் பிரதேச மக்களுடன் சுமூகமான கலந்துரையாடலை மேற்கொண்டார்.

அத்துடன் ஐந்து சந்தி பகுதிக்கும் விஜயம் செய்த ஆளுநர் அப்பகுதி மக்களுடன் சுமூகமான கலந்துரையாடலை மேற்கொணடார்.

மேலும் குறித்த பகுதிகளில் வாழும் மக்களின் பாதுகாப்பு தொடர்பில் கேட்டறிந்து கொண்டதுடன் பாதுகாப்பு தரப்பினர் மேற்கொள்ளும் நடவடிக்கைகளுக்கு பூரண ஒத்துழைப்பினை வழங்குமாறும் ஆளுநர் பிரதேச மக்களிடம் கேட்டுக் கொண்டார். (ம-3)

# பொன்சேகாவை சட்ட ஒழுங்கு அமைச்சராக நியமிப்பதற்காக

## தனது அமைச்சுப் பதவியை துறக்கின்றார் அர்ஜூன ரணதுங்க

அமைச்சர் அர்ஜூன ரணதுங்க தனது அமைச்சு பதவியை துறக்க முடிவு செய்துள்ளதாக ஐ.தே.கவின் பாராளுமன்ற உறுப்பினர் அஷுமாரசிங்க தெரிவித்துள்ளார்.

பாராளுமன்ற உறுப்பினர் சரத் பொன்சேகாவை சட்டம் ஒழுங்கு அமைச்சராக நியமிப்பதற்காகவே அவர் இந்த முடிவை எடுத்துள்ளார் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

அரசாங்க குழுக் கூட்டம் நேற்று திங்கட்கிழமை இடம்பெற்றபோதே அவர் இந்த முடிவை எடுத்திருந்ததாக ஐ.தே.கவின் பாராளுமன்ற உறுப்பினர் அஷு மாரசிங்க தெரிவித்துள்ளார்.

அந்தவகையில் சரத் பொன்சேகாவை சட்டம் மற்றும் ஒழுங்கு அமைச்சராக நியமிக்க வேண்டும் என கோரிக்கை விடுத்து ஐக்கிய தேசியக் கட்சி உறுப்பினர்கள் ஜனாதிபதி மைத்திரியிடம் கடிதம் ஒன்றினையும் கையளித்துள்ளனர்.

19 ஆவது அரசியலமைப்பு திருத்தத்தின் படி, அமைச்சரவையில் 30 அமைச்சர்களே இருக்க முடியும். இதில் மற்றொரு உறுப்பினர் இராஜினாமா செய்தால் மட்டுமே சரத் பொன்சேகா அமைச்சு பதவியை பெற்றுக் கொள்ள முடியும் என்பதும் குறிப்பிடத்தக்கது. (ம-3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வெசாக், பொசன் உற்சவங்களுக்கு இடமளிக்க வேண்டாம்

# 50 விகாரைகளில் தற்கொலைத் தாக்குதல்!



## ஞானசார தேரர் அதிர்ச்சித் தகவல்

(கொழும்பு)

**வெசாக், பொசன் என எந்தவொரு உற்சவங்களையும் நாட்டில் நடத்துவதற்கு இடமளிக்க வேண்டாம். ஏனெனில் 50 பௌத்த விகாரைகளில் தற்கொலைக் குண்டுத் தாக்குதல்கள் மேற்கொள்ள திட்டமிடப்பட்டுள்ளமை குறித்து தகவல்கள் கிடைத்துள்ளதாக பொது பலசேனா அமைப்பின் பொதுச் செயலாளர் கலகொட அத்தே ஞானசார தேரர் எச்சரிக்கை விடுத்துள்ளார். இதேவேளை, இது தொடர்பான மேலதிக தகவல்களைப் பெற்றுக் கொள்ள வேண்டுமாயின் தன்னை சந்திக்குமாறும் அவர் கேட்டுக்கொண்டுள்ளார்.**

காணாமல் போன ஊடகவியலாளர் பிரகீத் எக்னெலிகொடவின் மனைவி சந்தியா எக்னலிகொடவை அச்சுறுத்தியமை தொடர்பாக முன்வைக்கப்பட்டுள்ள குற்றச்சாட்டு தொடர்பான வழக்கு நேற்று திங்கட்கிழமை ஹோமாகம நீதவான் நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது

இதன் பின்னர் ஊடகங்களுக்குக் கருத்து தெரிவிக்கையிலேயே ஞானசார தேரர் மேற்கண்டவாறு எச்சரித்தார்.

நாட்டில் மேற்கொள்ளப்பட்ட இந்தத் தொடர் குண்டுத் தாக்குதல்கள் வெசாக் தினத்திலும் இடம்பெறுவதற்கு இடமளிக்க வேண்டாம்.

50 பௌத்த விகாரைகளுக்கு வெசாக் தினத்தில் தாக்குதல் நடத்தப்படவுள்ளதாக தகவல்கள் கிடைக்கப் பெற்றுள்ளன. எனவே உற்சவங்கள் நடத்தப்படக் கூடாது எனவும் அவர் கேட்டுக்கொண்டார். (இ-7)

## கர்தினால் ஆண்டகைக்கு குண்டு துளைக்காத கார்கள்



(கொழும்பு)
பேராயர் கர்தினால் மல்கம்

ரஞ்சித் ஆண்டகை உள்ளிட்ட சகல கத்தோலிக்க மதத் தலைவர்களினதும் பாதுகாப்பை பலப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

நாட்டின் பாதுகாப்பு நிலையைக் கருத்திற்கொண்டு கர்தினால் ஆண்டகைக்கு, பிரதமருக்கு வழங்கப்பட்டுள்ள குண்டு துளைக்காத கார்கள் இரண்டை வழங்குவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-7)


## மரண அறிவித்தல்



### கார்த்திகேசு சந்திரவரதன்
(சவுதி அரேபியா)

பொன்னாலையைப் பிறப்பிடமாகவும், கொழும்பு வெள்ளவத்தை மற்றும் பறாளாய் வீதி சுழிபுரத்தை வசிப்பிடமாகவும் கொண்ட கார்த்திகேசு சந்திரவரதன் 20.04.2019 அன்று சனிக்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கார்த்திகேசு-சின்னம்மா தம்பதியரின் கனிஷ்ட புதல்வனும், காலஞ்சென்றவர்களான ஆறுமுகம்-அன்னபூபதி தம்பதியரின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற செல்வரத்தினம்(ஆச்சி)(கொழும்பு இராமநாதன் இந்து மகளிர் கல்லூரி)-(ஓய்வு நிலை ஆசிரியை) அவர்களின் அன்புக் கணவரும், சஸ்மிலா (லண்டன்), சதுஷ்ஷா, சிந்துஷன் ஆகியோரின் பாசமிகு தந்தையாரும், கிரிதரன் (லண்டன்), கோபிதாஸ் (Krishna Cooling Point) ஆகியோரின் அன்பு மாமனாரும், காலஞ்சென்றவர்கான சந்திரபூபதி, சந்திரரசா (முன்னாள் பிரதேச செயலர் சங்கானை) மற்றும் சந்திரபாலன் (ஓய்வுநிலைப் பிரதிக் கல்விப் பணிப்பாளர்-வலிகாம வலயம்) ஆகியோரின் அன்புச் சகோதரனும், சு.கணபதிப்பிள்ளை (ஓய்வுநிலைப் பிரதிக்கல்விப் பணிப்பாளர், சங்கீதம்), ச.சகலகலாவல்லி (ஓய்வுநிலை ஆசிரிய ஆலோசகர்), அமரர். இராஜேஸ்வரி, அமரர். செல்வநாதன் மற்றும் செல்வமணி, செல்வராணி, செல்வசிங்கம் (கனடா), செல்வராசா (கனடா) ஆகியோரின் அன்பு மைத்துனரும், செல்வரஞ்சிதம் (ஓய்வுநிலை அதிபர்-பொன்னாலை வரதராஜப் பெருமாள் வித்தியாசாலை) அவர்களின் பாசமிகு மருமகனும், அஸ்ரனின் (லண்டன்) அன்பு பேரனும் காலஞ்சென்ற பரமானந்தன் மற்றும் லோகமாதா, காலஞ்சென்ற பாலகிருஷ்ணன் மற்றும் பாமாதேவி தம்பதியரின் அன்புச் சம்பந்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (30.04.2019) செவ்வாய்க் கிழமை, பிற்பகல் 2.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பிற்பகல் 3.00 மணியளவில் பொன்னாலை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.


இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள், அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

(8612)

ஆச்சி வாசம்,
பறாளாய் வீதி, சுழிபுரம்

தகவல்: குடும்பத்தினர்
076 687 7767


## முஸ்லிம் கிராமத்தில் விமானங்களை தாக்கியழிக்கும் குண்டுகள் மீட்பு



(களுத்துறை)

வெலிப்பன ராம்யா வீதி பிரதேசத்தின் முஸ்லிம் கிராமமொன்றிலிருந்து நேற்றுக் காலை விமானங்களை தாக்கி அழிக்கும் 5 குண்டுகளும் டெட்டனேட்டர் ஒன்றும் மீட்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேல் மாகாண புலனாய்வுப் பிரிவு அதிகாரி ஒருவருக்கு, கிடைத்த தகவலுக்கமைய இக்குண்டுகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளதுடன் இந்தக் குண்டுகள் 8 அங்குலம் நீளமான (5-0) ரக குண்டுகள் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை களுத்துறைப் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.(இ-7)

## தீவிரவாதத் தாக்குதல்களைத் தடுக்கவில்லை

# ஜனாதிபதி, பிரதமருக்கு எதிராக உயர்நீதிமன்றில் மனுத் தாக்கல்

(கொழும்பு)

புலனாய்வுத் தகவல்கள் கிடைத்திருந்த போதிலும், கொழும்பு மற்றும் மட்டக்களப்பு ஆகிய பிரதேசங்களிலுள்ள கிறிஸ்தவ தேவாலயங்கள், நட்சத்திர ஹோட்டல்கள் மீது நடத்தப்பட்ட தாக்குதல்களைத் தடுக்க முடியாமற் போனதால் பொது மக்களின் அடிப்படை உரிமைகள் மீறப்பட்டுள்ளதாகக் குறிப்பிட்டு, உயர் நீதிமன்றத்தில் நேற்று அடிப்படை உரிமை மீறல்மனு வொன்று தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

மூன்று வருடகாலத்துக்கு, நீதிமன்றத்தில் சட்டத்தரணியாக வாதிட முடியாத வகையில் தடை விதிப்புக்கு இலக்காகியுள்ள சட்டத்தரணி நாகானந்த கொடிதுவக்குவினாலேயே, இந்த மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

மனுவின் பிரதிவாதிகளாக, ஜனாதிபதி, பிரதமர், முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் ஹேமசிறி பெர்னாண்டோ, எதிர்க்கட்சித் தலைவர், பொலிஸ்மா அதிபர், சட்டமா அதிபர், தொலைத் தொடர்புகள் ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழுவின் பணிப்பாளர் நாயகம் உள்ளிட்ட 10 பேரின் பெயர்கள் குறிப்பிடப்பட்டுள்ளன. (இ-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# விளாசல் வீரர் வோர்னர்

## பிளே–ஓவ் வாய்ப்பை நெருங்கும் ஹைதராபாத்

ஐ.பி.எல்., தொடரில் பஞ்சாப் அணி 'ஹட்ரிக்' தோல்விய டைந்தது. லீக் போட்டியில் 45 ஓட்டங்கள் வித்தியாசத் தில் ஹைஐதராபாத் அணி யிடம் வீழ்ந்தது. லோகேஷ் ராகுலின் அரைச்சதம் வீணா னது.


56 பந்துகளில 81 ஓட்டங்களை விளாசிய ஹைதராபாத்தின் டேவிட் வோர்னர்

இந்தியாவில், ஐ.பி.எல்., கிரிக்கெட் தொடரின் 12வது சீசன் நடக்கிறது. ஹைதரா பாத்தில் நடந்த லீக் போட்டி யில் ஹைதராபாத் - பஞ்சாப் அணிகள் மோதின.

பஞ்சாப் அணியில் மன் தீப் சிங், ஹார்டஸ் வில் ஜோயன், அன்கித் ராஜ்பூத் நீக்கப்பட்டு பிரப்சிம்ரன் சிங் (அறிமுகம்), முஜீப் உர் ரஹ் மான், அர்ஷ்தீப் சிங் சேர்க்கப்பட்டனர். ஹைதராபாத் அணியில் சகிப் அல் ஹசன், தீபக் ஹூடா, சித்தார்த் கவுல் ஆகியோருக்கு பதிலாக மொஹமட் நபி, அபிஷேக் சர்மா, சந்தீப் சர்மா தேர் வாகினர்.

நாணயச்சுழற்சியில் வென்ற பஞ்சாப் அணித் தலைவர் அஷ்வின், களத்தடுப்பை தேர்வு செய்தார்.

**சகா நம்பிக்கை**

ஹைதராபாத் அணிக்கு டேவிட் வோர்னர், விரிதிமன் சகா ஜோடி நல்ல ஆரம்பம் கொடுத்தது. அர்ஷ்தீப் சிங் வீசிய முதல் ஓவரில் 2 பவுண்டரி அடித்த வோர்னர், முஜீப் உர் ரஹ்மான், அஷ்வின் பந்தில் தலா ஒரு சிக்சர் விளாசினார். இவருக்கு ஒத்துழைப்பு கொடுத்த சகா, மொஹமட் ஷமி வீசிய 5ஆவது ஓவரில் தொடர்ச்சியாக ஒரு பவுண்டரி, ஒரு சிக்சர் அடித்தார். முதல் விக்கெட்டுக்காக 78 ஓட்டங்கள் சேர்த்தபோது முருகன் அஷ்வின் 'சுழலில்' சகா (28) சிக்கினார்.

**வோர்னர் அபாரம்**

அடுத்து வந்த மணிஷ் பாண்டே, அஷ்வின், முருகன் அஷ்வின் பந்தில் தலா ஒரு பவுண்டரி அடித்தார். ஷமி பந்தை பவுண்டரிக்கு அனுப்பிய வோர்னர், ஐ.பி. எல்., அரங்கில்தனது 44ஆவது அரைச் சதத்தை பதிவு செய் தார். இரண்டாவது விக்கெட்டுக்காக 82 ஓட்டங்கள் சேர்த்த போது அஷ்வின் வீசிய 16வது ஓவரில் மணிஷ் பாண்டே (36), வோர்னர் (81) ஆட்டமிழந்தனர்.

முஜீப் வீசிய 18வது ஓவரில், அணித் தலைவர் வில்லியம்சன் தொடர்ச்சியாக ஒரு சிக்சர், ஒரு பவுண்டரி அடித்தார். இந்த ஓவரில் மொஹமட் நபி, தன்பங்கிற்கு 2 சிக்சர் விளாச, 26 ஓட்., கிடைத்தது. ஷமி 'வேகத்தில்' வில்லியம்சன் (14), நபி (20) வெளியேறினர். ரஷிட் கான் (1) ஏமாற்றினார்.

20 ஓவர்களில் ஹைதராபாத் அணி 6 விக்கெட்டுக்களை இழந்து 212 ஓட்டங்களை எடுத்தது. விஜய் சங்கர் (7), அபிஷேக் சர்மா (5) ஆட்டமிழக்காமல் இருந்தனர்.

பந்துவீச்சில் பஞ்சாப் சார்பில் ஷமி, அஷ்வின் தலா 2 விக்கெட்டுக்களைக் கைப் பற்றினர்.

**கெய்ல் ஏமாற்றம்**

கடின இலக்கை விரட்டிய பஞ்சாப் அணிக்கு கிறிஸ் கெய்ல் (4) ஏமாற்றினார். கலீல் அகமட், சந்தீப் சர்மா பந்தில் தலா ஒரு சிக்சர் விளாசினார் லோகேஷ் ராகுல். மயாங்க் அகர்வால் (27), நிக்கோலஸ் பூரன் (21) சோபிக்கவில்லை. ரஷிட் கான் 'சுழலில்' டேவிட் மில்லர் (11), அணித் தலைவர் அஷ்வின் (0) வெளியேறினர்.

மொஹமட் நபி வீசிய 14வது ஓவரில் தொடர்ச்சியாக 2 சிக்சர் விளாசிய லோகேஷ் ராகுல், அரைச்சதம் கடந்தார். தொடர்ந்து அசத்திய இவர், புவனேஷ்வர், சந்தீப் சர்மா பந்தில் தலா ஒரு சிக்சர் பறக்கவிட்டார். பொறுப்பாக ஆடிய ராகுல் (79) ஆறுதல் கொடுத்தார். சந்தீப் சர்மா வீசிய 20வது ஓவரில் சிம்ரன் சிங் (16), முஜீப் உர் ரஹ்மான் (0) ஆட்டமிழந்தனர்.

20 ஓவர்கள் நிறைவில் பஞ்சாப் அணியால் 8 விக்கெட்டுக்களை இழந்து 167 ஓட்டங்களை மட்டுமே எடுக்க முடிந்தது. முருகன் அஷ்வின் (1), ஷமி (1) ஆட்டமிழக்காமல் இருந்தனர்.

பந்துவீச்சில் ஹைதராபாத் சார்பில் கலீல் அகமட், ரஷிட் கான் தலா 3 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.

சமீபத்தில் டில்லி, பெங்களூர் அணிகளிடம் வீழ்ந்த பஞ்சாப் அணி, தொடர்ந்து 3ஆவது தோல்வியை பெற்றது.

போட்டியின் நாயகனாக ஹைதராபாத் அணியின் டேவிட் வோர்னர் தெரிவானார்.

# 'பவர்' பண்ட்யாவா 'சுப்பர் ஹீரோ' ரசலா?

ஈடன் கார்டனில் நடந்த ஐ.பி.எல்., லீக் போட்டியில் ரசலுக்கு சற்றும் சளைத்தவர் அல்ல என்பதை நிரூபித்தார் ஹர்திக் பாண்ட்யா. ஒருகட்டத்தில் ரசலையே மிஞ்சினார். இருவரும் வாணவேடிக்கை காட்ட, ரசிகர்கள் உற்சாகத்தில் மிதந்தனர்.

கொல்கத்தா ஈடன் கார்டன் மைதானத்தில் நடந்த ஐ.பி.எல்., லீக் போட்டியில் கொல்கத்தா அணி (232/2), மும்பையை (198/7) வீழ்த்தியது. இதில், கொல்கத்தா சார்பில் மிரட்டிய ரசல் 40 பந்தில் 80 ஓட்., (8 சிக்சர், 6 பவுண்டரி), 2 கட்ச், 2 விக்கெட் வீழ்த்தி வெற்றி நாயகனாக ஜொலித்தார். இவருக்கு நிகராக மும்பை வீரர் ஹர்திக் பாண்ட்யாவும் அதிரடியாக ஆடினார். 34 பந்துகளில் 91 ஓட்டங்கள் (6 பவுண்டரி, 9 சிக்சர்) விளாசிய போதும், அணியை கரைசேர்க்க முடியவில்லை.


ஹார்திக் பாண்ட்யா

பாண்ட்யா களமிறங்கும் போது மும்பை வெற்றிக்கு 70 பந்துகளில் 175 ஓட்டங்கள் தேவைப்பட்டது. 18வது ஓவரில் இவர் ஆட்டமிழந்தபோது, 12 பந்துகளில் 48 ஓட்டங்கள் என நிலை மாறியது. மே.தீவுகளைச் சேர்ந்த ரசலின் 'ஸ்டிரைக் ரேட்' 200.00 என்றால், பாண்ட்யாவின் 'ஸ்டிரைக் ரேட்' 267.64 ஆக இருந்தது. உலக கிண்ணம் நெருங்கும் வேளையில் பாண்ட்யாவின் 'சுப்பர் போர்ம்' இந்திய ரசிகர்களுக்கு உற்சாகத்தை கொடுத்துள்ளது.

இது குறித்து ரசல் (வயது-31) கூறுகையில், "நான் ஹொலிவுட் திரைப்படமான 'அவெஞ்சர்ஸ்' ரசிகன். இதில் 'சுப்பர் ஹீரோக்கள்' சாகசம் நிகழ்த்துவர். இதே போல என்னையும் 'சுப்பர் ஹீரோ' என ரசிகர்கள் அழைத்தால் மகிழ்ச்சி அடைவேன். அதிரடியாக ஓட்டங்கள் சேர்க்க வேண்டுமானால் கை-கண் ஒருங்கிணைப்புடன் நல்ல வேகத்தில் 'துடுப்பைக்' கொண்டு விளாசுவது அவசியம். உடலின் சமநிலையும் முக்கியம். நான் தோள்பட்டை பகுதியில் இருந்து அதிக சக்தியை பயன்படுத்தி விளாசுவேன். நல்ல உயரத்தில் 'ஷொட்' அடிப்பதற்கு வலிமையான உடல், சிறப்பான உடற்தகுதி தேவை. 'வைட்' அல்லது 'ஸ்லோ போல்' வீசி பந்துவீச்சாளர்கள் மிரட்டினால், அவர்களுக்கு அதிர்ச்சி அளிக்கும் வகையில் 'ஷொட்' அடிக்க வேண்டும். பாண்ட்யா அச்சுறுத்திய நேரத்தில், அமைதியாக இருந்து எங்களது திட்டங்களை சரியாக செயற்படுத்தினோம்.

அடுத்து வரும் இரு போட்டிகளில் கொல்கத்தாவுக்கு சாதகமான முடிவு வந்தால், அது எனது 'ரி20' வாழ்நாளின் சிறந்த தருணமாக இருக்கும்," என்றார்.

பாண்ட்யா கூறுகையில், "பெரிய இலக்கை விரட்டும்போது எதை பற்றியும் சிந்திக்க முடியாது. முதல் பந்தில் இருந்தே அடித்து விளையாட வேண்டிய கட்டாயம் ஏற்படும். மிகவும் உற்சாகமாக விளையாடினேன். தனிஒருவனாக சாதிப்பது மிகவும் கடினம்," என்றார்.




# 'கிங்' கிளைவ் லொயிட்


கிளைவ் லொயிட்

மூன்று உலக கிண்ணத் தொடரில் (1975, 79, 83) விளையாடிய பெருமை மிக்கவர் கிளைவ் லொய்ட். அசைக்க முடியாத 'சகலதுறை வீரரான' இவர், இடதுகை துடுப்பாட்ட வீரராகவும் வேகப்பந்து வீச்சாளராகவும் ஜொலித்தார். 1975ல் நடந்த முதலாவது உலகக் கிண் ணத் தொடரில் மே.தீவுகள் அணியின் தலைவராக களமிறங்கினார்.

லோர்ட்ஸில் நடந்த அவுஸ்திரேலியாவுக்கு எதிரான இறுதிப் போட்டியில் 102 ஓட்டங்கள் விளாசி, அணிக்கு முதல் சம்பியன் பட்டம் பெற்றுக் கொடுத்தார். பின் 1979ல் கிண்ணத்தைத் தக்கவைத்து வரலாறு படைத்தார். மொத்தம் 17 உலக கிண்ணப் போட்டிகளில் ஒரு சதம், 2 அரைச்சதம் உட்பட 393 ஓட்டங்கள் (சராசரி 43.66 ஓட்.,) எடுத் தார். இவர் 87 ஒருநாள் போட்டிகளில் ஒரு சதம், 11 அரைச்சதம் உட்பட 1,977 ஓட்டங்கள் (சராசரி 39.54) எடுத்தார். கடந்த 1971ல் 'விஸ்டன்' சிறந்த வீரராக தேர்வு செய்யப் பட்டார். கடந்த 1985ல் ஒருநாள் போட்டி களில் இருந்து ஓய்வு பெற்றார். பின் பயிற்சி யாளர், வர்ணனையாளர், ஐ.சி.சி., "போட்டி மத்தியஸ்தர்" (2001-2006) என, கிரிக்கெட் சேவையை தொடர்ந்தார்.

**'நோபோல்' சர்ச்சை**

**கண்ணாடி பின்னணி**

கிளைவ் லொய்டின் தோற்றமே எதிரணி வீரர்களை அச்சுறுத்தும். நல்ல உயரம் (6.4 அடி) கொண்ட இவர், அடர்த்தியான மீசை வைத்திருப்பார். எப்போதும் கண்ணாடி அணிந்து களமிறங்குவார். பள்ளி பருவத்தில் இரு நண்பர்களுக்கு இடையே நடந்த சண்டையை விலக்கச் சென்ற போது இவரது கண்ணில் அடிபட்டது. இதையடுத்து கண்ணாடி அணிய வேண்டிய நிலைக்கு தள்ளப்பட்டார்.

## இந்தியன் பிறிமியர் லீக் - 2019 புள்ளிகள் பட்டியல்

| நிலை | அணி | போட்டி | வெற்றி | தோல்வி | புள்ளி |
|---|---|---|---|---|---|
| Q1 | டில்லி கப்பிட்டல்ஸ் | 12 | 8 | 4 | 16 |
| Q2 | சென்னை சுப்பர் கிங்ஸ் | 12 | 8 | 4 | 16 |
| 3 | மும்பை இந்தியன்ஸ் | 12 | 7 | 5 | 14 |
| 4 | சன்ரைசர்ஸ் ஹைதராபாத் | 12 | 6 | 6 | 12 |
| 5 | கொல்கத்தா நைட் ரைடர்ஸ் | 12 | 5 | 7 | 10 |
| 6 | கிங்ஸ் XI பஞ்சாப் | 12 | 5 | 7 | 10 |
| 7 | ராஜஸ்தான் றோயல்ஸ் | 12 | 5 | 7 | 10 |
| 8 | பெங்களூர் றோயல் சலஞ்சர்ஸ் | 12 | 4 | 8 | 8 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிசாத், ஹிஸ்புல்லா, அசாத்சாலி ஆகியோரை பதவி நீக்குமாறு ஜனாதிபதியிடம் கோரிக்கை

## சிங்கள ராவய களத்தில்



(கொழும்பு)

அமைச்சர் றிசாட் பதியுதீன், கிழக்கு மாகாண ஆளுநர் எம்.எல்.ஏ.எம்.ஹிஸ்புல்லா மற்றும் மேல் மாகாண ஆளுநர் அசாத் சாலி ஆகியோரை பதவிகளில் இருந்து நீக்க வேண்டும் என ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. பயங்கரவாத எதிர்ப்பு தேசிய ஒன்றியம் இந்த கோரிக்கையை விடுத்துள்ளது.

இது குறித்த கடிதம் ஒன்றை நேற்று ஜனாதிபதி செயலகத்தில், கையளித்துள்ளதாக, சிங்கள ராவய அமைப்பின் பொதுச் செயலாளர் மாகல்கந்தே சுதந்த தேரர் தெரிவித்துள்ளார். (இ-7)

# ஈரம் தோய்ந்த விழிகளுடன் பரிதவிக்கும் முதலாம் ஆண்டு நினைவுகூரல்



**தோற்றம்** 27.02.1999 **மறைவு** 11.05.2018

அருமை மகனே எங்கள் ஆருயிரே. நீ எம்மை விட்டு பிரிந்து ஓர் ஆண்டுகள் நகர்ந்து போய்விட்டது அய்யா. ஆனால் உமை பிரிந்த ஓர் ஆண்டில் உம் நினைவில் கண்ணீரிலே உருள்கின்றோம். மகனே எங்கள் மூத்த மகனே உம்மை மறக்க முடியுமோ எங்கள் கண்ணே எங்களுக்கு மாறாத மருந்தல்லவோ மூத்த மகனே உம் முகம்.

ஆண்டுகள் எத்தனை சென்றாலும் நீஎம்முடன் வாழ்ந்த ஆண்டுகளே வாழ் நாளில் இன்பமான ஆண்டுகள். வாழப்போகும் அத்தனை ஆண்டுகளும் துன்பமான ஆண்டுகளே. நரகமான இந்த ஆண்டுகளைக் கடந்து உம்மை வந்து சந்தித்து முகமுகமாய் காணுவது உண்மையே என்ற அழியாத நம்பிக்கையில் ஆறுதல் அடைவதை தவிர எமக்கு யாது செய்ய முடியும். விதி மதியிலும் வலியது என்ற உண்மையே எமக்கு மெய்ப்பித்து விட்டு வாழ்க்கையின் நிலையாமையை எமக்கு உணர்த்தி விட்டு வானகத்தில் வண்ண விளக்காய் ஒளிரும் அன்பு மகனே!

அமரர்.
**சிறிமோகன் கபில்ராஜ் (கபில் குட்டி)**
(சிறிமோகன் தரணிகா தம்பதியரின் அன்பு புதல்வன்)

இல. 555, ஆனந்தபுரம் கிழக்கு,
நாகதம்பிரான் வீதி.

(C-6239)

077 147 0537

உம் பிரிவால் துயருற்றிருக்கும்
உன் அன்பு அம்மா, அப்பா, தங்கச்சி

# இராசி பலன்

**மீனம்:** குடும்பத்தில் மகிழ்ச்சி அதிகரிக்கும், உறவினர் விவகாரங்களில் தலையிடுவதைத் தவிர்ப்பது நல்லது, வழிபாட்டால் வளர்ச்சி காண வேண்டிய நாள்.

**மேடம்:** உறவினர் வருகையால் குடும்பத்தில் குதூகலம் தரும் சம்பவங்கள் இடம்பெறலாம், முக்கிய பிரமுகர் ஒருவர் தொலைபேசியில் தொடர்பு கொண்டு பேசலாம்.

**இடபம்:** வாழ்க்கை தரம் உயர வழிவகை செய்வீர்கள், உறவினர்கள் வழியில் ஒத்துழைப்புக்கள் கிடைக்கும், ஆரோக்கியமான நாள், வருமானம் திருப்தி தரும்.

**மிதுனம்:** உங்களின் கடின உழைப்பை மற்றவர்கள் வியப்பாக பார்ப்பர், பொல்லாதவர்கள் உங்களை விட்டு விலகலாம், எதிலும் அவசரத்தை தவிர்ப்பது நல்லது.

**கும்பம்:** புதிய பொறுப்புக்களால் வேலைச்சுமை கூடும், உறவினர் வருகையால் திடீர் செலவுகள் ஏற்படலாம், ஆரோக்கியத்தில் அக்கறை காட்டுவீர்கள்.

| | | | |
|---|---|---|---|
| சுக் | சூரி, புத | செவ் | ராகு |
| சந் | இராசி பலன் கிரகநிலை | | |
| | சந்திராஷ்டமம் பூசம் | | |
| சனி, குரு, கேது | | | |

**30.04.2019**

சித்திரை 17, செவ்வாய்க்கிழமை

சூரிய உதயம் காலை 6.02 மணிக்கு

ஏகாதசி பின்னிரவு 12.53 மணிவரை

சதயம் முற்பகல் 8.58 மணிவரை

சுபநேரம் 10.28-11.58 மணிவரை

இராகுகாலம் 2.58-4.28 மணிவரை

ஏகாதசி விரதம்

வளவன்

**கடகம்:** உதவுவதாகச் சொன்னவர்கள் உங்களை விட்டு விலகலாம், ஆரோக்கியததில் அச்சுறுத்தல் தோன்றி மறையலாம், பிரயாண பயமுண்டு.

**மகரம்:** தொலைபேசி வழியில் சுப தகவல்கள் வந்து சேரலாம், கல்யாணக்கனவுகள் நனவாகலாம், காணாமல் போன பொருளொன்று மீண்டும் கைக்கு கிடைக்கும்.

**சிம்மம்:** சந்தித்த நண்பர்களால் சந்தோசம் கிடைக்கும் நாள், பொருளாதார நிலையில் முன்னேற்றமுண்டு, எடுத்த காரியத்தில் எளிதில் முன்னேற்றம் காண்பீர்கள்.

**தனுசு:** மனதில் புதிய சிந்தனைகள் தோன்றும், உடன்பிறப்புக்கள் அனுசரணையாக நடந்து கொள்வர், பொருளாதார நிலையில் முன்னேற்றமுண்டு, பயணங்களால் பலனுண்டு.

**விருச்சிகம்:** வளர்ச்சிப்பாதையை நோக்கி அடியெடுத்து வைப்பீர்கள், இல்லத்தில் இனிய சம்பவங்கள் இடம்பெறுவதற்கான அறிகுறி தோன்றும், பயணங்களால் பலனுண்டு.


**துலாம்:** பிள்ளைகளின் கல்வி நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள், நல்லவர்களின் தொடர்புகள் கிடைக்கும் வாய்ப்புண்டு, தாழ்ந்த கௌரவமுண்டு.

**கன்னி:** குடும்பத்தில் உங்களின் செல்வாக்கு மேலோங்கும், கூட்டு முயற்சிகள் எளிதில் கைகூடும், உடல் நலன் சீராகும், கொடுக்கல்-வாங்கல்கள் ஒழுங்காகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நுங்குக்காக பனங்காய் வெட்டுவது தமிழர் பொருளாதார அழிப்பே!

## பனை அபிவிருத்திச் சபை எதிர்ப்பு



தமிழர் பாரம்பரியத்தின் சின்னமாகவும் வடக்கு-கிழக்கு மாகாணங்களின் மதிப்பிட முடியாத பொக்கிசமாகவும் விளங்கும் கற்பக விருட்சமான பனை வளத்தை அழியவிடாது பாதுகாக்க வேண்டிய தார்மீகக் கடமை சமூக அக்கறையுள்ள அனைவரையும் சார்ந்துள்ளது.

பனை வளத்தை வாழ்வாதாரமாகக் கொண்டுள்ள பல்லாயிரக்கணக்கான குடும்பங்களுக்கும் நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கும் பெரும் பங்காற்றி வரும் பனை வளத்தை வருடாந்தம் பல்வேறு காரணங்களைக் காட்டி அழிக்கின்றமை மிகவும் மன வேதனைக்குரிய விடயமாகும்.

இந்நிலையில் ஏப்ரல்- மே மாதக் காலப்பகுதியான நுங்கு பருவ காலத்தில் பெருமளவான நுங்குகள் அற்ப தேவைக்காகப் பருவம் பாராது வெட்டி அழிக்கப்பட்டு வருகின்றமையை காணக் கூடியதாகவுள்ளது. இங்கு ஒரு விடயத்தைக் குறிப்பிட்டாக வேண்டியுள்ளது.

நுங்கு பாரம்பரியமாக எம்மவர்களால் விரும்பி சுவைக்கப்படும் ஒரு குளிர்ச்சி நிறைந்த உணவாகும். பொதுவாக பனை மரங்களிலிருந்து அணில் கொறித்து விழும் நுங்குகளே எம்மவர்களால் அதிகம் சுவைக்கப்பட்டது. வெப்ப நோய்களைக் குணப்படுத்துவதற்காகவும் பறிக்கப்பட்டன.

இருப்பினும் தற்போது வியாபார நோக்கம் கருதி தங்களுக்குச் சொந்தமில்லாத பொதுச் சொத்தான மரங்களிலும் வகை தொகையின்றி வெட்டப்படுகின்றமையைக் காணமுடிகின்றது.

இச்செயல் ஒரு பகற்கொள்ளை என்பதை சிறிய இலாபத்திற்காக இச் செயலில் ஈடுபடுபவர்கள் விளங்கிக் கொண்டு இவ்வகையான செயற்பாடுகளைக் கைவிட முன்வரவேண்டும்.

நுங்குக்காக வெட்டப்படும் பனங்காய்களின் மூலம் பெறும் பயன்கள் இல்லாமல் போகின்றமையை நாம் கண்டு கொள்வதில்லை. அலட்சியமாக விட்டு விடுகின்றோம். இதனால் பனையின் வளர்ச்சி (நாற்று உற்பத்தி பனங்கிழங்கு, ஒடியல், ஒடியல் மா, பனங்களி போன்றவற்றின் உற்பத்தியில் வீழ்ச்சி ஏற்படும் நிலை உருவாகும். இவ் உணவுப் பண்டங்களின் போசணைச் சத்துக்கள் ஏராளமாகவுள்ள இம் மருத்துவ குணமுடைய உணவுகளை எம் முன்னோர் விரும்பி உண்டதால் தேக ஆரோக்கியத்துடனும் நீண்ட ஆயுளுடனும் வாழ்ந்தனர் என்பதை நாம் மறுப்பதற்கில்லை.

எனவே நுங்குக்காகப் பனங்காய்களை அழிக்கும் செயற்பாடுகளை நாம் இயன்றவரை தடுத்து நிறுத்த வேண்டியுள்ளது. இதனால் எமது பனைப் பொருளாதார வளம் பாதிப்படையாது தடுக்கப்படும் என்பதை யாவரும் புரிந்து கொண்டு பொறுப்புணர்ச்சியுடன் செயற்பட வேண்டும் என பனை அபிவிருத்திச் சபையின் அபிவிருத்திப் பிரிவு அறிவுறுத்தியுள்ளது. (இ

# எந்தவொரு பயணத்தின் போதும் தேசிய அடையாள அட்டை அவசியம்

## பொதுமக்களுக்கு பொலிஸ் பொறுப்பதிகாரி அறிவுரை

(சாவகச்சேரி)

**எந்தவொரு பயணத்தின் போதும் தேசிய அடையாள அட்டை/ கடவுச் சீட்டு/ சாரதி அனுமதிப்பத்திரம் ஆகியவற்றில் ஏதாவது ஒன்றைக் கூடவே வைத்திருக்குமாறு சாவகச்சேரிப் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி கே.எம்.ஏ.கே. கோனார பொதுமக்களுக்கு அறிவுரை வழங்கியுள்ளார்.**


பொதுமக்களின் பாதுகாப்பு தொடர்பாக வினவிய போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

வீட்டிற்கு அருகாமையில் இருக்கும் கடைக்குச் செல்வதாக இருந்தால் கூட உங்கள் அடையாளத்தை உறுதிப்படுத்திக் கொள்ள மேற்கூறப்பட்ட ஆவணங்களில் ஒன்றை எடுத்துச்செல்ல வேண்டும். அத்துடன் சாவகச்சேரிப் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட 31 பாடசாலைகளுக்கும் பாதுகாப்பின் நிமித்தம் பொலிஸ் உத்தியோகத்தர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

இது தொடர்பாக சகல பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள் மற்றும் பெற்றோர்களுக்கும் அறிவுறுத்தல்களை வழங்கியுள்ளோம். பெற்றோர்களும் பிள்ளைகளின் பாதுகாப்பின் பொருட்டு கண்காணிப்பில் ஈடுபட வேண்டும்.

பாடசாலைகள் ஆரம்பிப்பதற்கு முன்னராகச் சகல பாடசாலைகளுக்கும் பொலிஸார் சென்று பாதுகாப்பினை உறுதிப்படுத்திய பின்னரே பாடசாலைகள் ஆரம்பமாகும். எந்தவொரு வாகனமும் பாடசாலைக்கு முன்பாக நிறுத்து



வதற்குத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

ஆகவே மாணவர்கள் எந்த வித பயமுமின்றி தமது கல்வி நடவடிக்கைகளைத் தொடர முடியும்.

பாடசாலை மாணவர்களின் பாதுகாப்பிற்கு சகல பொலிஸ் உத்தியோகத்தர்களும் ஒத்துழைப்பு வழங்குவார்கள். பொலிஸார் மற்றும் படையினர் இணைந்து தற்போது அரச கட்டடங்கள், பொது இடங்கள், நகர்ப் பகுதிகள் மற்றும் வீதிகளில் சோதனைச் சாவடிகள் அமைத்து சோதனைகளுக்குட்படுத்தி முழுமையான பாதுகாப்பு வழங்குகின்றனர். சந்தேகத்துக்கு இடமான நபர்களின் நடமாட்டம், சந்தேகத்திற்கு இடமான பொதிகள் தொடர்பாக உடனடியாகப் பொலிஸாருக்குத் தகவல் வழங்கப்பட வேண்டும்.

சாவகச்சேரி பொலிஸ் பிரிவுக்குள் இடம்பெறும் அசம்பாவிதங்கள் தொடர்பாக பொதுமக்கள் 021 227 0722 என்ற தொலைபேசி இலக்கத்திற்கு அறிவிக்க முடியும். தற்போது பயணங்களின் போது முடிந்தவரை பொதிகள், முதுகுப் பைகள் கொண்டு செல்வதைத் தவிர்க்கவும்.

பாடசாலை மாணவர்களும் புத்தகங்கள், கொப்பிகள் வெளியே தெரியக் கூடிய வகையிலான பைகளைப் பயன்படுத்துவது நல்லது. அத்துடன் பெற்றோர் ஒவ்வொரு நாள் காலையிலும் பிள்ளைகளை பாடசாலைக்கு அனுப்பும் முன்பாக பிள்ளைகளின் புத்தகப் பொதியை ஒன்றிற்கு இரண்டு தடவைகள் பரிசோதிக்க வேண்டும் எனவும் சாவகச்சேரி மக்கள் பாதுகாப்பாகவே உள்ளனர்.

பொலிஸார் மற்றும் படையினர் இணைந்து தென்மராட்சியில் நாவற்குழி, கனகம்புளியடி மற்றும் சங்குப்பிட்டிப் பகுதிகளில் சோதனைச் சாவடிகள் அமைத்து பொதுமக்களுக்கு பாதுகாப்பு வழங்கி வருவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (இ-5-30)

# கூட்டுறவுத்துறையை பயனுள்ளதாக்க பல்வேறு முன்மொழிவுகள் சமர்ப்பிப்பு

வடமாகாணக் கூட்டுறவுத்துறையை பயனுள்ள ஓர் துறையாக மாற்றும் திட்ட முன்மொழிவுகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாக வடமாகாண கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர் பொ.வாகீசன் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில், வடமாகாணத்தில் கூட்டுறவுச் துறையுடன் மக்களை ஒன்றுசேர்ப்பதற்கும் துறை சார் உற்பத்தியாளர்கள் மேலும் வளர்ச்சியடையச் செய்யும் நோக்கில் குறித்த திட்ட முன்மொழிவுகள் சமர்ப்பிக்கப்பட்டதாகவும் அதற்கான அங்கீகாரம் வெகுவிரைவில் கிடைத்துவிடும் எனத் தான் நம்புவதாகத் தெரிவித்தார்.

கடந்த வருடம் (2018) கூட்டுறவுத் துறையை வளர்ச்சிப்பாதையில் கொண்டு செல்லும் திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டு செயற்படுத்தப்பட்டுவரும் நிலையில் இதன் தொடர்ச்சி இவ் வருடமும் இடம் பெறவுள்ளது.

குறிப்பாக கூட்டுறவு உற்பத்தியாளர்களான வெதுப்பக உற்பத்தியாளர்கள், அரிசி ஆலை முயற்சியாளர்கள் மற்றும் மீன்பிடிக் கூட்டுறவுசார் உற்பத்தி நடவடிக்கைகள் மற்றும் விற்பனைச் சங்கங்களின் செயற்பாடுகளை ஊக்குவித்தல் ஆகிய திட்டங்கள் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்படும். மேலும் கடந்த வருடம் (2018) ஆரம்பிக்கப்பட்ட கூட்டுறவு அரவணைப்புத் திட்டத்தின் கீழ் செயற்படுத்தப்படும் நுண்கடன் நிதி வழங்கும் திட்டத்திற்காக 500 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டது. இந்நிதியில் இருந்து கடந்தவருடம் (2018) 300 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீட்டின் மூலம் கூட்டுறவு கிராமிய வங்கி சிக்கனக் கூட்டுறவு சமாசம் ஆகியவற்றின் மூலமாக இலகு தவணைக் கடன்திட்டம் வெற்றிகரமாகச் செயற்படுத்தப்பட்டது.

இந்த வருடம் (2019)மிகுதி 200 மில்லியன் ரூபாவை பயன்படுத்தும் நோக்கில் சம்பந்தப்பட்ட துறையினருடன் ஆலோசனை நடத்தி அபிவிருத்தி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட இருப்பதாக அவர் மேலும் தெரிவித்தார். (இ-4)

# போதியளவு அத்தியாவசியப் பொருட்களை கையிருப்பில் வைத்திருத்தல் வேண்டும்

## யாழ்.வணிகர் கழகம் அறிவுறுத்தல்

தற்போது நாட்டில் நிலவும் அசாதாரண சூழ்நிலையைக் கருத்திற் கொண்டு வர்த்தகர்களுக்கு ஏற்படக்கூடிய அசௌகரியங்களைத் தவிர்க்கும் பொருட்டும் தங்களது பாதுகாப்பை உறுதிப்படுத்தும் பொருட்டும் பின்வரும் அறிவுறுத்தல் பின்பற்றுமாறு யாழ்.வணிகர் கழகம் கேட்டுக் கொண்டுள்ளது.

01. உங்கள் வர்த்தக ஸ்தாபனத்தில் போதியளவு அத்தியாவசியப் பொருட்கள் கையிருப்பில் வைத்திருத்தல் வேண்டும்.

02. உங்கள் வர்த்தக ஸ்தாபனத்தில் பணிபுரியும் பணியாளர்களின் சகல விபரங்களும் பேணப்பட வேண்டும்.

03. உங்கள் வர்த்தக ஸ்தாபனங்களில் அறிமுகமில்லாதவர்களை வேலைக்கு அமர்த்துவதையும் தங்குவதற்கு இடமளிப்பதையும் தவிர்த்துக் கொள்ள வேண்டும்.

04. உங்கள் வர்த்தக ஸ்தாபனத்திற்கு வருபவர்கள் மீது அவதானமாக இருத்தல் வேண்டும்.

05. உங்களது கடைகளுக்கு வெளிப்புறமாகப் பொருட்களைக் காட்சிப்படுத்துவதைத் தற்போதைய சூழ்நிலையைக் கருத்தில் கொண்டு தவிர்த்துக்கொள்ள வேண்டும்.

06. தங்களது வர்த்தக ஸ்தாபனத்துக்கு முன்னால் நிறுத்தப்படும் வாகனங்கள் தொடர்பில் அவதானமாக இருத்தல்வேண்டும்.

தங்கள் வர்த்தக ஸ்தாபனங்களிலோ, அல்லது அதற்கு முன்னாலோ ஏதாவது அசம்பாவிதம் நடக்கும் பட்சத்தில் நீங்கள் பொறுப்பாளியாவதைத் தவிர்ப்பதற்காக இந்த அறிவுறுத்தல்களைப் பின்பற்றுமாறு யாழ். வணிகர் கழகம் கேட்டுக்கொண்டுள்ளது. (இ-7)

# ஆறு வர்த்தகர்களுக்கு 54,000 ரூபா அபராதம்

(யாழ்ப்பாணம்)

பாவனையாளர் அதிகார சபை சட்டத்தை மீறிய ஊர்காவற்றுறை, காரைநகர் வர்த்தகர்களுக்கு நேற்றுத் திங்கட்கிழமை ஊர்காவற்றுறை நீதவான் நீதிமன்றத்தால் 54 ஆயிரம் ரூபாய் தண்டம் விதிக்கப்பட்டதாக வடமாகாண பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபை [illegible] தெரிவித்தார்.

பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபையினால் மேற்கொள்ளப்பட்ட திடீர் சுற்றிவளைப்பில் குற்றம்சாட்டப்பட்ட குறித்த இரு பிரதேசங்களைச் சேர்ந்த 6 வர்த்தகர்களுக்கெதிராக நீதிமன்றத்தால் மேற்படி அபராதத் தொகை விதிக்கப்பட்டதாக அவர் மேலும் தெரிவித்தார். (இ-10)




# மேதினக் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் சர்வதேச மாக்சிய குழுவின் சர்வதேச பாட்டாளி வர்க்க மே தினக் கூட்டம் நாளை முதலாம் திகதி புதன்கிழமை மாலை 4 மணியளவில் D.H.I தொழில்நுட்பப் பிரிவு (இலுப்பை யடிச் சந்திக்கு அண்மையில்) சொ. சிவபாலன் தலைமையில் நடைபெறும். ஆர்வலர்கள் பங்குபற்றலாம்.(இ-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 400 அடிப்படைவாத பள்ளிவாசல்களுக்கு முஸ்லிம் அலுவல்கள் அமைச்சு அனுமதி

## முன்னாள் அமைச்சர் தயாசிறி தகவல்



(கொழும்பு)

அடிப்படைவாத பள்ளிவாசல்கள் 400 க்கு முஸ்லிம் சமய அலுவல்கள் அமைச்சு அனுமதி வழங்கியுள்ளது.

2015 ஆம் ஆண்டு தொடக்கம் இது வரையில் தௌஹீத் ஜமாத் அடிப்படைவாத பள்ளிவாசல்களே இவ்வாறு அமைக்கப்பட்டுள்ளதாகவும் அவற்றில் 50 பள்ளிவாசல்கள் கண்டி மாவட்டத்தில் உள்ளதாகவும் ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியின் பொதுச் செயலாளர் முன்னாள் அமைச்சர் தயாசிறி ஜெயசேகர தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். (இ-7)

# தெஹிவளையில் ஆறு வாள்களுடன் இரு வர்த்தகர்கள் நேற்றுக் கைது



(தெஹிவளை)

தெஹிவளை பிரதேசத்தின் கோடீஸ்வர வர்த்தகர் ஒருவரும் மேலுமொரு வர்த்தகரும் ஆறு வாள்களுடன் நேற்று கைது செய்யப்பட்டுள்ளனர்.

தெஹிவளை பொலிஸாரும் இராணுவத்தினரும் இணைந்து மேற்கொண்ட சோதனை நடவடிக்கையின் போது. 5 மாடிகளைக் கொண்ட கோடீஸ்வர வர்த்தகரின் வீட்டிலிருந்தும், மற்றொரு வர்த்தகரின் வீட்டிலிருந்தும் இந்த வாள்கள் கைப்பற்றப்பட்டுள்ளன.

கைதுசெய்யப்பட்ட வர்த்தகர்களுள் ஒருவர் வாகன விற்பனை நிலையத்தின் உரிமையாளர் என்றும் ஏனைய வர்த்தகர் மருந்துப் பொருட்கள் விற்பனை நிலையத்தின் உரிமையாளர் என்றும் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (இ-7)

# வெளிநாட்டுப் பிரஜைகள் 13 பேர் கைது

(கொழும்பு)

கொழும்பை அண்டிய பகுதிகளான நவகமுவ, கல்கிஸ்ஸை, வெலிகட மற்றும் தெஹிவளை பகுதிகளில் மேற்கொள்ளப்பட்ட சோதனை நடவடிக்கையின்போது 13 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

நாட்டில் ஏற்பட்டுள்ள பதற்ற நிலைமைகளின் காரணமாக பொலிஸார் மற்றும் பாதுகாப்பு படையினர் நாடளாவிய் ரீதியில் சோதனை நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

அதற்கமைய கொழும்பை அண்டிய பகுதிகளில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக் கிழமை பொலிஸாரால் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்புகளின் போதே குறித்த கைதுகள் இடம்பெற்றுள்ளன.

நாட்டின் குடிவரவு-குடியகல்வு சட்டத்திற்கு புறம்பாக விசாஇன்றி தங்கியிருந்த பெண்ணொருவர் உட்பட 13 சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கல்கிஸ்ஸை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட பகுதிகளில் இந்திய பிரஜை உட்பட 6 நைஜீரிய பிரஜைகளும், நவகமுவ பகுதியில் ஈராக் நாட்டு பிரஜை ஒருவரும், வெலிகட பிரதேசத்தில் நைஜீரிய பிரஜைகள் நால்வரும் தெஹிவளை பிரதேசத்தில் தாய்லாந்து பெண்ணொருவரும் உள்ளடங்கலாக 13 பேர் இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவ்வாறு கைது செய்யப்பட்டவர்கள் 20-56 வயதுகளுக்கிடைப்பட்டவர்கள் என்பதுடன் மேலதிக விசாரணைகளை பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (இ-7)

# தாக்குதலுக்குப் பயன்படுத்தப்பட்ட மோட்டார் சைக்கிள் கண்டுபிடிப்பு



(நிட்டம்புவ)

மட்டக்களப்பு சீயோன் தேவாலயத்தில் இடம்பெற்ற தற்கொலைக் குண்டுத் தாக்குதலுக்கு பயன்படுத்தப்பட்ட மோட்டார் சைக்கிள் ஒன்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

நிட்டம்புவ, திஹாரிய பகுதியில் வீடு ஒன்றில் மறைத்து வைக்கப்பட்டிருந்த நிலையிலேயே குறித்த மோட்டார் சைக்கிள் நேற்றுக்காலை கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. (இ-7)


# கல்யாணமாலை

## சர்வதேச திருமண சேவை

### இவர்களுக்கு மணமகள் தேவை

பிறப்பு: 1979 இந்து
நட்சத்திரம்:கார்த்திகை 4
கி.பா: 72 ¼ சூரி செவ் 11 இல்
உயரம்: 5’7”
தகைமை/தொழில்: B.Sc, M.Sc,Phd Engineering, சிரேஷ்ட விரிவுரையாளர்
எதிர்பார்ப்பு:பட்டதாரி மணமகன் விவாகிரத்து பெற்றவர்
தொ.இ: B/2239

பிறப்பு: 1987 இந்து
நட்சத்திரம்:பூரம் 1
கி.பா: 9 ¾
உயரம்: 5’11”
தகைமை/தொழில்:CIMA, ACCA- Final, Accounts Excecutive
எதிர்பார்ப்பு: Doctor, Engineer, Same Qualification, B.Sc Degree. உள்நாடு,வெளிநாடு
தொ.இ: B/2253

பிறப்பு: 1980 இந்து
நட்சத்திரம்: அத்தம்
கி.பா: 34 ¼ செவ் 12 இல்
உயரம்: 5’10”
தகைமை/தொழில்:A/L, அரசசாரதி
எதிர்பார்ப்பு: உள்நாடு,வெளிநாடு
தொ.இ: B/2270

பிறப்பு: 1981 இந்து
நட்சத்திரம்:கார்த்திகை 3
கி.பா: 32 சூரி செவ் 6 இல்
உயரம்: 5’7”
தகைமை/தொழில்:A/L, Project Officer
எதிர்பார்ப்பு: அரசஉத்தியோகம்
தொ.இ: B/2281

### இவர்களுக்கு மணமகன் தேவை

பிறப்பு: 1989 இந்து
நட்சத்திரம்: பரணி 1
கி.பா:27 ¼ செவ் 2 இல்
உயரம்: 5’
தகைமை/தொழில்:HND IT, தனியார்தொழில்
எதிர்பார்ப்பு: சைவபோசனம். அசைவமும் ஏற்கப்படும். உள்நாடு,வெளிநாடு
தொ.இ: G/4262

பிறப்பு: 1988 இந்து
நட்சத்திரம்:பூரம்
கி.பா: 77
உயரம்: 5’5”
தகைமை/தொழில்:MBBS, Doctor, London
எதிர்பார்ப்பு:Doctor, Engineer, Accountant.
வெளிநாடுமட்டும்
தொ.இ: G/4276

பிறப்பு: 1992 இந்து
நட்சத்திரம்:திருவோணம்
கி.பா: 38 ¾செவ் 7 இல்
உயரம்: 5’
தகைமை/தொழில்:A/L, கணக்குபதிவாளர்
எதிர்பார்ப்பு: வெளிநாடுமட்டும்
தொ.இ: G/4321

பிறப்பு: 1982 இந்து
நட்சத்திரம்: சித்திரை 4
கி.பா: 12 செவ் 4 இல்
உயரம்: 5’4”
தகைமை/தொழில்:BA பட்டதாரிஆசிரியர்
எதிர்பார்ப்பு: பட்டதாரி, அரச உத்தியோகம், வங்கி,கணக்காளர்,பொறியியலாளர்
தொ.இ: G/4342

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1000 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 300 அறவிடப்படும்.



# மணி விழா வாழ்த்து



## திரு. ஆறுமுகம் சத்தியமூர்த்தி

29.04.2019 நேற்று அறுபதாவது அகவையில் மணிவிழாக் கண்ட கொக்குவில் மத்திய சனசமூக நிலையத்தின் ஆரம்பகால உறுப்பினர் உயர்திரு. ஆறுமுகம் சத்தியமூர்த்தி அவர்கள் தனது மனைவி, பிள்ளைகளுடன் சகல செல்வங்களும் பெற்றுச் சீரும் சிறப்புடனும் வாழ வாழ்த்துகின்றோம்.

(8610)

வாழ்த்துவோர்:
கொக்குவில் மத்திய சனசமூக நிலையமும் விளையாட்டுக்கழகமும்
கே.கே.எஸ்வீதி, கொக்குவில்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிளிநொச்சி கனகாம்பிகைக்குளம் பகுதியில் நேற்று அதிகாலை சுற்றிவளைப்பு தேடுதல்

## கையடக்கத் தொலைபேசிகள், கமரா, ரவைகள் மீட்பு





(பரந்தன்)

கிளிநொச்சி கனகாம்பிகைக் குளம் பகுதியில் நேற்று அதிகாலை சுற்றிவளைப்பு தேடுதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

கிளிநொச்சி பொலிஸாரும், படையினரும் இணைந்து இச் சுற்றிவளைப்பை மேற்கொண்டிருந்தனர். இதன்போது பயன்பாட்டில் இல்லாத வீடு ஒன்றிலிருந்து சில சந்தேகத்திற்கிடமான பொருட்கள் சோதனையின்போது மீட்கப்பட்டன. கையடக்க தொலைபேசிகள், கமெரா, ரவைகள் உள்ளிட்ட சில பொருட்கள் மீட்கப்பட்டன. எனினும் குறித்த வீட்டில் தங்கியிருப்பவர் இரும்பு வியாபாரி என அப்பகுதி மக்கள் அடையாளம் காட்டினர்.

இதேவேளை கமெரா, தொலைபேசி ஆகியன அவர் பயன்படுத்தியது எனவும் தெரிவிக்கப்படுகின்றது. சம்பவம் தொடர்பில் விசாரணைகள் இடம்பெற்று வருகின்றது. எனினும் சம்பவம் தொடர்பில் எவரும் கைது செய்யப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கதாகும். (7-312)

### சந்தேகத்தின் பேரில் முஸ்லிம் இளைஞர்கள் கைது

(கிளிநொச்சி)

இராமநாதபுரம் மாவடி அம்மன் பகுதியில் நேற்று முன்தினம் இடம்பெற்ற சோதனை நடவடிக்கையின்போது சந்தேகத்தின் பேரில் 3 முஸ்லிம் இளைஞர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இச் சம்பவம் தொடர்பில் தெரியவருவதாவது. நாட்டில் கடந்த 21 ஆம் திகதி உயிர்த்த ஞாயிறு தினத்தில் இடம் பெற்ற தற்கொலைக் குண்டுத் தாக்குதலின் பின் முஸ்லிம்கள் வாழும் பிரதேசங்களில் பாரிய தேடுதல் சோதனை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இந் நிலையில் குறித்த பகுதியில் மேற்கொள்ளப்பட்ட தேடுதல் நடவடிக்கையின் போது சந்தேகத்தின் பேரில் இம் மூன்று இளைஞர்களும் கைது செய்யப்பட்டுள்ளனர். (7-10)




# கிளாலி தேவாலயத்திற்கு சென்று மக்களை சந்தித்த சிறீதரன் எம்.பி





(கண்டாவளை)

தேவாலயங்களை இலக்கு வைத்துள்ள தற்போதைய சூழலில் நேற்று முன்தினம் கிளாலிப் பகுதியிலுள்ள தேவாலயத்திற்குச் சென்ற பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் அங்கு வழிபாட்டில் ஈடுபட்டதுடன் கூடியிருந்த மக்களைச் சந்தித்துக் கலந்துரையாடியுள்ளார்.

தற்போதைய சூழ்நிலை பற்றி மக்களுடன் கலந்துரையாடியதுடன் தேவாலயத்தின் தேவைகள் குறித்தும் கலந்துரையாடியுள்ளார். இதன்போது தேவாலயத்தின் கட்டுமான அடிப்படைத் தேவைகளை பூர்த்திசெய்து தருமாறு அப்பகுதி மக்கள் பாராளுமன்ற உறுப்பினரிடம் கோரிக்கை முன்வைத்திருந்தனர்.

அதற்கமைவாக எதிர்காலத்தில் அவர்களது கோரிக்கையை நிறைவேற்ற நடவடிக்கை எடுப்பதாகவும் சிறீதரன் மக்களிடம் தெரிவித்தார். (7-315)

# குண்டுவெடிப்பில் உயிரிழந்தவர்களுக்கு கிளிநொச்சியில் அஞ்சலி செலுத்தும் நிகழ்வு



(பரந்தன்)

உயிர்த்த ஞாயிறு அன்று நடத்தப்பட்ட குண்டுத் தாக்குதல்களில் கொல்லப்பட்ட மக்களுக்கு அஞ்சலி செலுத்தும் நிகழ்வு கிளிநொச்சியில் நேற்று முன்தினம் இடம்பெற்றது.

கடந்த 21 ஆம் திகதி குண்டுத்தாக்குதல் நடத்தப்பட்ட நேரத்திற்கு நேற்றுமுன்தினம் மெழுகுதிரி ஏற்றப்பட்டு மலர் அஞ்சலி செலுத்தப்பட்டதோடு, அகவணக்க மும் இடம்பெற்றது.

சமத்துவம் சமூக நீதிக்கான மக்கள் அமைப்பின் கிளிநொச்சி அலுவலகத்தில் இந் நிகழ்வு இடம் பெற்றமை குறிப்பிடத்தக்கது. (7-312)

# முல்லைத்தீவிற்கென தீயணைப்புப்பிரிவு ஒன்று உருவாக்கப்பட வேண்டும்

## சாள்ஸ் நிர்மலநாதன் உட்பட பல தரப்பினர் கோரிக்கை

(கண்டாவளை)

முல்லைத்தீவு மாவட்டத்திற்கான தனியான தீயணைப்பு பிரிவு ஒன்று உருவாக்கப்பட வேண்டும் எனப் பாராளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் நிர்மலநாதன் உள்ளிட்ட பல்வேறு தரப்பினரும் கோரிக்கை விடுத்துள்ளனர்.

மாந்தை கிழக்கு, துணுக்காய், ஒட்டுசுட்டான், புதுக்குடியிருப்பு, கரைதுறைப்பற்று, வெலிஓயா ஆகிய ஆறு பிரதேச செயலர் பிரிவுகளைக் கொண்ட முல்லைத்தீவு மாவட்டத்தில் புதுக்குடியிருப்பு, கரைதுறைப்பற்று, மாந்தை கிழக்கு, துணுக்காய் ஆகிய நான்கு பிரதேச சபைகள் உள்ள போதும் மாவட்டத்திற்கான தனியான தீயணைப்புப் பிரிவு இது வரை உருவாக்கப்படவில்லை.

அதாவது, இப்பிரதேசத்தில் தீ அனர்த்தங்கள் ஏற்படும் போது வவுனியா நகர சபையின் தீயணைப்பு உதவிகளையே எதிர்பார்க்க வேண்டியநிலை காணப்படுவதாக பலரும் தெரிவித்துள்ளனர்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் தீ அனர்த்தம் ஏற்படும் போது வவுனியாவில் இருந்து தீயணைப்பு உதவிகளை பெற்றுக்கொள்வதற்கு குறைந்தது இரண்டு மணி நேரங்களாவது கடந்து செல்கின்றன. இதனால் திடீரென ஏற்படும் தீ விபத்துக்களை உடனடி கட்டுப்பாட்டிற்குள் கொண்டு செல்ல முடியாத நிலை ஏற்படுகின்றன.

குறிப்பாக, வனப்பகுதிகள், வயல்நிலங்கள், வியாபார நிலையங்கள் என அதிகளவில் காணப்படுகின்ற இந்த மாவட்டத்திற்கு தனியான தீயணைப்புப்பிரிவு ஒன்றினை ஏற்படுத்தி தரவேண்டும் என்று கோரிக்கை விடுத்துள்ளனர்.

இதேவேளை பாராளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் நிர்மலநாதன் முல்லைத்தீவு மற்றும் மன்னார் ஆகிய இரு மாவட்டங்களுக்கும் தனியான தீயணைப்பு பிரிவு உருவாக்கப்படவேண்டும் என்றும் இது தொடர்பில் சம்பந்தப்பட்ட தரப்புக்களிடம் தொடர்ந்தும் கோரிக்கை முன்வைத்துள்ளதாக தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (7-315)

# சிறுபோக செய்கை ஆரம்பித்த நிலையில் கால்நடைகளால் பெரும் சிரமம்

## விவசாயிகள் கவலை

(கண்டாவளை)

கிளிநொச்சி இரணைமடுக் குளத்தின் கீழான சிறுபோக செய்கை ஆரம்பிக்கப்பட்டுள்ள நிலையில் கூட்டத்தீர்மானத்திற்கு அமைவாக இதுவரை கால் நடைகள் கட்டுப்படுத்தப்படவில்லை என்றும் இதனால் தாங்கள் பெரும் அழிவுகளை எதிர்கொள்வதாக விவசாயிகள்கவலை தெரிவித்துள்ளனர்.

கிளிநொச்சி இரணைமடுக் குளத்தின் கீழ் இவ்வாண்டு சுமார் பதினையாயிரம் ஏக்கர் நிலப்பரப்பில் சிறுபோக நெற்செய்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

இந்நிலையில் கால்நடைகளை கட்டுப்படுத்த இதுவரை எந்தவித நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை என்றும் இதனால் கால்நடைகள் சிறுபோக செய்கைகளை அழித்து வருவதாக விவசாயிகள் கவலை தெரிவித்துள்ளனர்.

அதாவது, கடந்த மார்ச்மாதம் 12 ஆம் திகதி நடைபெற்ற இரணைமடு குளத்தினுடைய பயிர்ச் செய்கை கூட்டத் தீர்மானத்திற்கு அமைவாக கடந்த ஏப்ரல் மாதம் 11ஆம் திகதி முதல் செப்டெம்பர் மாதம் 06 ஆம் திகதி வரையான காலப்பகுதியில் கால்நடைகளை கட்டுப்படுத்துவதற்கான கால எல்லையாக குறிப்பிடப்பட்டுள்ள நிலையில் இன்று வரை கால் நடைகளை கட்டுப்படுத்த எந்த வித நடவடிக்கைகளும் எடுக்கப் படவில்லை என்றும் இதனால் பயிர்ச்செய்கைகளை கால்நடைகள் தினமும் அழித்து வருகின்றன என்றும் இதனைக்கட்டுப் படுத்த நடவடிக்கை எடுக்குமாறு விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர். (7-315)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

### குண்டு வெடித்த பின் அரசின் செயற்பாடுகளில் திருப்தியில்லை

# பயங்கரவாதத்துடன் தொடர்புள்ளோர் பாராளுமன்றில் உரிய தண்டனை வழங்கப்பட வேண்டும்

## கர்தினால் ஆண்டகை வலியுறுத்து



(கொழும்பு)

**உயிர்த்த ஞாயிறு தினத்தன்று இலங்கையில் இடம்பெற்ற பயங்கரவாதத் தாக்குதலுடன் தொடர்புடையவர்கள் நாடாளுமன்றத்தைப் பிரதிநிதித்துவப்படுத்துவார்களாயின் அவர்களுக்கு உரிய தண்டனை வழங்கப்பட வேண்டும் என பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகை வலியுறுத்தியுள்ளார்.**

கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் மேற்கண்டவாறு வலியுறுத்தினார்.

பயங்கரவாதத் தாக்குதல்களை மேற்கொள்வதற்குத் தேவையான வெடிபொருட்கள் கொண்டுவரப்பட்டமை தொடர்பில் விசேட விசாரணைகள் நடத்தப்பட வேண்டும் எனவும் அவர் கோரியுள்ளார்.

அத்துடன் அந்த வெடிபொருட்களைக் கொண்டு வருவதற்காக அரசாங்க அதிகாரிகளின் ஒத்துழைப்பு கிடைக்க பெற்றிருக்குமாயின் அவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

இந்தப் பயங்கரவாதத் தாக்குதல்கள் இடம்பெற்ற பின்னர் அரசாங்கம் செயற்பட்ட விதம் தொடர்பில் திருப்தி கொள்ள முடியாது என்றும் பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகை தெரிவித்துள்ளார். (இ-7)

---

### "நிறைவேற்று அதிகாரம்; பாதுகாப்பு அமைச்சுக்குப் பொறுப்பு"

# நாட்டில் நிகழ்ந்த அசம்பாவிதங்களுக்கு ஜனாதிபதியும் பொறுப்புக்கூற வேண்டும்

## மைத்திரியை சமயம் பார்த்து தாக்கும் மகிந்த அணி

(கொழும்பு)

நாட்டில் இடம்பெற்ற குண்டுத்தாக்குதலுக்கு அரசாங்கம் பொறுப்புக் கூற வேண்டும் என்று ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன பிறிதொரு தரப்பினரை குற்றம்சாட்ட முடியாது. நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியின் தலைமையிலேயே அரசாங்கம் செயற்படுவதால், பாதுகாப்பு அமைச்சும் அவரது பொறுப்பாக்கத்தின் கீழ் காணப்படுகின்றது. ஆகவே நிகழ்ந்த அசம்பாவிதத்திற்கு ஜனாதிபதியும் முக்கிய பொறுப்புக் கூற வேண்டும் என பொதுஜன பெரமுனவின் (மகிந்த அணி) தவிசாளர் பேராசிரியர் ஜி. எல். பீரிஸ் தெரிவித்துள்ளார்.





கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே இவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். மேலும், இப்பிரச்சினைக்குத் தீர்வு காணும் விடயத்திலும் ஜனாதிபதிக்கும், பிரதமருக்கும் இடையில் கடும் போட்டித்தன்மையே காணப்படுகின்றது. அத்துடன், ஒருவரையொருவர், குறை கூறிக்கொள்வதில் எதுவித பயனுமில்லை. இவரும் தமது அமைச்சு சார்ந்த நடவடிக்கைகளில் பொறுப்புடன் செயற்பட்டிருக்க வேண்டும்.

இவர்களின் கவனயீனமே தாக்குதலுக்குப் பிரதான காரணமாகும். ஆகவே அனைவரும் நிர்வாகத்தின் பலவீனத்தன்மையைப் பகிரங்கமாக ஏற்றுக் கொள்ள வேண்டும்.

அத்தோடு, இனிவரும் மிகுதி காலத்திலாவது மக்களின் உயிரைப் பாதுகாக்கும் நடவடிக்கைகளை முறையாக இணைந்து மேற்கொள்வது அவசியமாகும் என பேராசிரியர் ஜி. எல். பீரிஸ் தெரிவித்தார். (இ-7)

---

# குண்டுவெடித்த வீட்டில் வெள்ளை ஆடைகள் மீட்பு



(சாய்ந்தமருது)

சாய்ந்தமருது பிரதேசத்தில் குண்டு வெடிப்புச் சம்பவம் இடம்பெற்ற வீட்டிலிருந்து, தாக்குதல்களுக்கு பயன்படுத்துவதற்காக தயார் நிலையில் இருந்த பெண்கள் அணியும் வெள்ளை நிற ஆடைகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

ஆடை வர்த்தக நிலையம் ஒன்றில் முஸ்லிம் பெண்கள் குறித்த ஆடைகளை கொள்வனவு செய்யும் காட்சி அருகில் இருந்த சிசிரிவி கமராவில் பதிவு செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

சாய்ந்தமருது வீட்டில் இருந்து 5 ஆடைகள் கிடைத்துள்ளதாகவும் கொள்வனவு செய்யப்பட்ட ஏனைய 4 ஆடைகளை தேடும் நடவடிக்கைகளில் பாதுகாப்பு பிரிவினர் ஈடுபட்டுள்ள தாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

மீட்கப்பட்ட ஆடைகளை முஸ்லிம் பெண்கள் சாதாரணமாக அணிவதில்லை.

இந்த ஆடைகளை அணிந்து சிங்கள பெண்கள் போன்று சென்று தாக்குதல் மேற்கொள்வதற்காக கொள்வனவு செய்துள்ளதாக புலனாய்வுப் பிரிவினர் சந்தேகம் வெளியிட்டுள்ளனர். (இ-7)

---

## கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

யா/கொக்குவில் இந்துக் கல்லூரியின் ஆசிரியர்களுக்கான கலந்துரையாடல் நாளை மறுதினம் 2 ஆம் திகதி வியாழக்கிழமை பிற்பகல் 3 மணியளவில் கல்லூரியில் இடம்பெறும்.

இதில் ஆசிரியர்கள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு கல்லூரி அதிபர் எம்.ஞானசம்பந்தன் அறிவித்துள்ளார். (5)

●●●●●●●●●

(யாழ்ப்பாணம்)

இரண்டாம் தவணைச் செயற்பாடுகள் ஆரம்பிப்பது தொடர்பாக யா/கொக்குவில் இந்துக் கல்லூரி மாணவர்களின் பெற்றோர்களுக்கானகலந்துரையாடல்நாளை மறுதினம் 2 ஆம் திகதி வியாழக்கிழமை பிற்பகல் 4 மணியளவில் கல்லூரியில் அதிபர் தலைமையில் இடம்பெறும்.

இதில் பெற்றோர்கள் அனைவரையும் தவறாது கலந்து கொள்ளுமாறு கல்லூரி அதிபர் எம். ஞானசம்பந்தன் அறிவித்துள்ளார். (5)

●●●●●●●●●


(யாழ்ப்பாணம்)

அண்மையில் ஏற்பட்ட சூழ்நிலை காரணமாக மாணவர்களின் பாதுகாப்பு தொடர்பான யா/பெரியபுலம் மகாவித்தியாலய மாணவர்களின் பெற்றோர்களுக்கான கலந்துரையாடல் எதிர்வரும்2 ஆம் திகதி வியாழக்கிழமை முற்பகல் 10 மணியளவில் பாடசாலை மண்டபத்தில் நடைபெறும்.

இதில் பெற்றோர்களும் ஆசிரியர்களும் பழைய மாணவர்களும் மற்றும் பாடசாலை அபிவிருத்தி சங்க உறுப்பினரும் கலந்து கொள்ளுமாறு யா/பெரியபுலம் மகா வித்தியாலயத்தின் அதிபர் ந.பரமேஸ்வரன் கேட்டுக் கொண்டுள்ளார். (5)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# புத்தளத்தில் ஆயுதக் கிடங்கு பாதுகாப்பு இல்லங்கள் குறித்து பல்வேறு தகவல்கள் அம்பலம்!



தொடர் தற்கொலைத் தாக்குதல்கள் தொடர்பில் குற்றப்புலனாய்வுப் பிரிவினர் முன்னெடுத்த விசேட விசாரணைகளில் இதுவரை தீர்க்கப்படாது இருந்த முக்கிய இரு குற்றங்களின் ஆதி அந்தம் கண்டறியப்பட்டுள்ளது.

தற்கொலைத் தாக்குதல்களின் சூத்திரதாரியாக கருதப்படும் மொஹம்மட் சஹ்ரானின் வாகனச் சாரதியாக கடமையாற்றிய கபூர் மாமாவைக் கைதுசெய்து முன்னெடுத்த விசாரணைகளிலேயே இவை வெளிப்படுத்தப்பட்டுள்ளன.

இது தொடர்பில் மேலும் இரு காத்தான்குடியைச் சேர்ந்த சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளதுடன் மேலதிக விசாரணைகளில் நிந்தவூர் மற்றும், புத்தளம் - வணாத்துவில்லு பகுதிகளில் பயங்கரவாதிகள் பயன்படுத்திய பாதுகாப்பு இல்லங்கள் இரண்டு கண்டறியப்பட்டன. அத்துடன் அவற்றிலிருந்து ஆயுதங்கள் பெருமளவில் மீட்கப்பட்டுள்ளன.

கபூர் மாமா எனப்படும் மொஹம்மட் சரீப் ஆதம் லெப்பை எனும் சந்தேக நபருக்கு மேலதிகமாக கைது செய்யப்பட்ட ஏனைய இருவரில் ஒருவர் காத்தான்குடி - மூன்றை சேர்ந்த 34 வயதான அப்துல் மனாப் மொஹம்மட் பிர்தவ்ஸ் எனவும் மற்றையவர் காத்தான்குடி தெற்கைச் சேர்ந்த 30 வயதான ஹம்சா மொஹிடீன் மொஹம்மட் இம்ரான் எனவும் பொலிஸ் பேச்சாளர் பொலிஸ் அத்தியட்சகர் ருவான் குணசேகர தெரிவித்தார்.

இந் நிலையில் கடந்த 2018 ஆம் ஆண்டு நவம்பர் 30 ஆம் திகதி மட்டக்களப்பு - வவுணதீவு பகுதியில் பொலிஸ் காவலரணில் பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவரை சுட்டும் ஒருவரை கழுத்தறுத்தும் கொலை செய்து அவர்களது கடமை நேர ரிவோல்வர் ரக துப்பாக்கிகளை எடுத்துச் சென்றமை தொடர்பில் முழுமையான தகவல்கள் வெளிப்படுத்தப்பட்டுள்ளன.



அத்துடன் கடந்த மார்ச் 9 ஆம் திகதி, அமைச்சர் கபீர் ஹாசிமின் இணைப்பாளர்களில் ஒருவர் எனக் கூறப்படும் மொஹம்மட் தஸ்லீம் என்பவரது வீட்டுக்குள் அத்துமீறி அவரைக் கொலை செய்ய முயற்சித்தமையும் இந்த சந்தேக நபர்களே என முன்னெடுக்கப்பட்ட விசாரணைகளில் கண்டறியப்பட்டுள்ளது.

இதற்காகப் பயன்படுத்தப்பட்ட ரிவோல்வர் ரக துப்பாக்கி வவுணதீவில் பொலிஸாரை கொலை செய்துவிட்டு அபகரித்து சென்ற துப்பாக்கிகளில் ஒன்று என மேலதிக விசாரணைகளில் உறுதி செய்யப்பட்டுள்ளது.

இந் நிலையில் குறித்த மூன்று சந்தேக நபர்களிடமும் தொடர்ச்சியாக சி.ஐ.டி. பிரதானி சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் ரவி செனவிரத்னவின் கண்காணிப்பில் அதன் பணிப்பாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ஷனை அபேசேகரவின் நேரடிக் கட்டுப்பாட்டில் விசாரணைகள் தொடர்கின்றன.

இதன் போது அண்மையில் தற்கொலைக் குண்டுத் தாக்குதல் நடத்திய தற்கொலைதாரிகள் உள்ளிட்ட இந்த சந்தேக நபர்கள் பயன்படுத்திய மேலும் இரு பாதுகாப்பு இல்லங்கள் தொடர்பில் தகவல்கள் வெளிப்படுத்தப்பட்டுள்ளன.

அதில் ஒன்று நிந்தவூரிலும் மற்றையது புத்தளம் - வணாத்துவில்லு பகுதியிலும் இருந்து கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.

நிந்தவூர் பாதுகாப்பு இல்லத்திலிருந்து வவுணதீவில் பொலிஸாரை கொலை செய்த பின்னர் அபகரிக்கப்பட்ட ரிவோல்வர்களில் ஒன்று மீட்கப்பட்டுள்ளது. அதற்கு மேலதிகமாக பயங்கரவாதிகள் பயன்படுத்திய ஆடைகள் உட்பட 4 தோட்டாக்கள் எனப் பல பொருட்கள் மீட்கப்பட்டுள்ளன.

பின்னர் கபூர் மாமா உள்ளிட்ட மூன்று சந்தேக நபர்களிடம் முன்னெடுத்த விசாரணைகளில், வணாத்துவில்லுவிலுள்ள பாதுகாப்பு இல்லம் தொடர்பில் தகவல்கள் வெளிப்படுத்தப்பட்டுள்ளன. அங்கு சென்ற அதிரடிப் படையும் சி.ஐ.டியும் அந்த வீட்டை சோதனை செய்துள்ளனர்.

இதன்போது அவ் வீட்டுக்கு பின்னால் உள்ள காட்டுப் பகுதியில் புதைத்து வைக்கப்பட்டிருந்த பீப்பாய் ஒன்றைப் பொலிஸார் மீட்டுள்ளனர்.

அந்த பிளாஸ்ரிக் பீப்பாய்க்குள் இருந்து வவுணதீவில் பொலிஸார் கொலையின் பின்னர் அபகரிக்கப்பட்ட மற்றைய ரிவோல்வர் உட்பட ஏராள மான ஆயுதங்கள் மறைத்து வைக்கப்பட்டிருந்த நிலையில் சி.ஐ.டியால் மீட்கப்பட்டது.

அதில் ரி-56 ரக துப்பாக்கி ஒன்றும் அதற்குப் பயன்படும் 24 தோட்டாக்கள், இரு மகசின்கள், வெளிநாட்டு தயாரிப்பு மைக்ரோ ரக துப்பாக்கி, உள்நாட்டு தயாரிப்பு 6 ரிவோல்வர்கள், வவுணதீவு பொலிஸாரிடம் அபகரிக்கப்பட்ட ரிவோல்வர்கள் என ஏராள மான பொருட்கள் மீட்கப்பட்டுள்ளன.

அத்துடன் நிந்தவூரில் மீட்கப்பட்டுள்ள சில புத்தகங்களில் பயங்கரவாதத் தாக்குதல்கள் குறித்து முக்கிய தகவல்கள் இருக்கலாம் எனச் சந்தேகிக்கும் சி.ஐ.டி. அவற்றையும் தமது பொறுப்பில் எடுத்து ஆய்வு செய்து மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# பாதுகாப்புச் செயலர் நியமனம்



(கொழும்பு)

புதிய பாதுகாப்புச் செயலாளராக ஓய்வுபெற்ற முன்னாள் இராணுவத் தளபதி சாந்த கோட்டேகொட ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவால் நியமிக்கப்பட்டுள்ளார்.

கடந்த 21 ஆம் திகதி புனித உயிர்த்த ஞாயிறு தினத்தன்று இடம்பெற்ற குண்டு வெடிப்புச் சம்பவங்களை அடுத்து, பாதுகாப்புச் செயலாளர் ஹேமசிறி பெர்னாண்டோ, பொலிஸ்மா அதிபர் பூஜித ஜெயசுந்தர ஆகியோரை இராஜினாமா செய்யுமாறு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன கோரிக்கை விடுத்திருந்தார். இதனையடுத்து பாதுகாப்புச் செயலாளர் ஹேமசிறி பெர்னாண்டோ தனது பதவியை இராஜினாமா செய்திருந்தார்.

இதனையடுத்து புதிய பாதுகாப்புச் செயலாளராக ஓய்வு பெற்ற முன்னாள் இராணுவத் தளபதி சாந்த கோட்டேகொட நியமிக்கப்பட்டுள்ளார். (இ-7)

## பிரதான கட்சிகளின்

# மே தினக் கூட்டங்கள் இரத்து!

(கொழும்பு)

நாட்டில் மேற்கொள்ளப்பட்ட தொடர் குண்டுத் தாக்குதல்களையடுத்து பொது மக்களின் பாதுகாப்பு கருதி மே தினக்கூட்டங்களை இரத்து செய்வதாக சில கட்சிகள் அறிவித்துள்ளன.

அதன்படி ஐக்கிய தேசியக் கட்சி, தமிழ் முற்போக்கு கூட்டணி , ஜே.வி.பி. மற்றும் பொது ஜன பெரமுன ஆகிய கட்சிகள் மேதினக் கூட்டம் இடம்பெறாது என்பதை உறுதி செய்துள்ளதோடு ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியானது மேதினக் கூட்டம் நடைபெறுவதற்கான வாய்ப்புக்கள் குறைவு என்றும் தெரிவித்துள்ளது.

இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் உள்ளிட்ட சில கட்சிகள் இது தொடர்பில் எந்த அறிவித்தலும் விடுக்காதபோதும் அவற்றின் கூட்டங்களும் இரத்துச் செய்யப்படும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. (இ-7)

# தடைசெய்ய வேண்டிய மத்ரசாக்கள் தொடர்பில் கல்வி அமைச்சு கவனம்

## அமைச்சர் அகிலவிராஜ் தெரிவிப்பு



மத்ரசாக்கள் கல்வி அமைச்சின் கீழ் பதிவு செய்யப்பட்டவையல்ல. முஸ்லிம் மத அலுவல்கள் அமைச்சின் கீழாகவே மத்ரசாக்கள் பதிவு செய்யப்படுகின்றன.

இவ்விடயம் தொடர்பில் தற்போது முஸ்லிம் மத அலுவல்கள் அமைச்சுடன் கலந்துரையாடி வருகின்றோம். தடை செய்ய வேண்டிய மத்ரசாப் பாடசாலைகள் தொடர்பில் கல்வி அமைச்சு கவனம் செலுத்தியுள்ளதாக கல்வி அமைச்சர் அகிலவிராஜ் காரியவசம் தெரிவித்தார்.

அலரிமாளிகையில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார். (இ-7)

# குடும்பங்களின் பதிவுகள் மீளாய்வு

(சாவகச்சேரி)

சாவகச்சேரி -கோவிற்குடியிருப்பு ஜே/301 கிராம உத்தியோகத்தர் பிரிவில் நாளை மறுதினம் 2 ஆம் திகதி வியாழக்கிழமை குடும்பங்களின் பதிவுகள் மீளாய்வு செய்யப்படவுள்ளதாக கிராம உத்தியோகத்தர் கார்த்திகேயன் அறிவித்துள்ளார். தற்போது கிராம உத்தியோகத்தர் பிரிவில் வசிக்கும் மக்களின் எண்ணிக்கையை கணிப்பதற்காகவே மீளாய்வு செய்யப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது. ஆகவே கிராம மக்கள் வியாழக்கிழமை கோவிற்குடியிருப்பு கிராம உத்தியோகத்தர் அலுவலகத்தில் தமது இருப்பினை உறுதிப்படுத்திக்கொள்ளுமாறு கிராம உத்தியோகத்தர் அறிவித்துள்ளார். (இ-7)

# தேசிய தௌஹீத் ஜமாத்தின் கொழும்பு அமைப்பாளரிடம் 72 மணிநேர விசாரணை!

தடைசெய்யப்பட்ட தேசிய தௌஹீத் ஜமாத் அமைப்பின் கொழும்பு மாவட்ட அமைப்பாளர் மொஹமட் பாருஸ் மொஹமட் பவாஸ் நேற்று கொழும்பு நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டுள்ளார்.

இதன்போது நீதவான் அவரை 72 மணி நேர தடுப்புக் காவலில் வைத்து விசாரிக்குமாறு உத்தரவிட்டுள்ளார்.

குறித்த நபர் நேற்று முன்தினம் மாலை கொழும்பு, வாழைத்தோட்டம் பகுதியில் முன்னெடுக்கப்பட்ட சுற்றிவளைப்பு நடவடிக்கையின்போது கைதுசெய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (இ-7)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மன்னார் மாவட்ட ஜம் இய்யத்துல் உலமா சபையினருக்கும், மன்னார் மறைமாவட்ட ஆயர் மேதகு இம்மானுவேல் பெர்னாண்டோ ஆண்டகைக்கும் இடையில் விசேட சந்திப்பொன்று நேற்று முன்தினம் ஞாயிற்றுகிழமை முற்பகல் 10.30 மணியளவில் மன்னார் ஆயர் இல்லத்தில் இடம் பெற்றுள்ளது.மன்னார் மாவட்டத்தில் கத்தோலிக்க மற்றும் முஸ்லிம் மக்களின் நல்லுறவு தொடர்ந்தும் பேணப்பட வேண்டும் என்ற நோக்குடன் குறித்த சந்திப்பு இடம் பெற்றது. (படங்கள்-மன்னார் செய்தியாளர்)

# மன்னார் நகர் முழுவதும் முப்படையினர் கடும் சோதனை

(மன்னார்)



மன்னார் நகரின் பல்வேறு இடங்களில் நேற்று திங்கட் கிழமை காலை 6 மணி முதல் முப்படையினரும் இணைந்து கடும் சோதனைகளையும்,தேடுதல்களையும் மேற்கொண்டுள்ளனர்.

கிராமங்களில் உள்ள வீடுகளுக்குச் செல்லும் படையினர் வீட்டில் உள்ள உடைமைகளை முழுமையாக சோதனைக்கு உற்படுத்தியுள்ளதோடு,வீட்டில் உள்ளவர்களின் விபரங்களையும் பரிசீலினை செய்துள்ளனர்.

மேலும் வீதியால் செல்பவர்களின் அடையாள அட்டை பரிசீலினை செய்யப்படுவதோடு,மோட்டார் சைக்கிள் உள்ளிட்ட ஏனைய வாகனங்களும் சோதனைக்கு உட்படுத்தப்பட்டுள்ளன. (7-285)

# வெள்ளாங்குளப் பகுதியில் 620 ஏக்கரில் 230 ஏக்கர் காணியை வழங்க நடவடிக்கை

## மாந்தை மேற்கு பிரதேச செயலாளர் தெரிவிப்பு

மாந்தை மேற்குப் பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட மன்னார் வெள்ளாங்குளப் பகுதியில் இராணுவக் கட்டுப்பாட்டில் இருந்த 620 ஏக்கர் காணியில் முதற் கட்டமாக 230 ஏக்கர் காணி யைப் பொது மக்களுக்கு பகிர்ந்தளிக் கவுள்ளதாக மாந்தை மேற்குப் பிரதேச செயலாளர் செ. கேதீஸ்வரன் தெரிவித்தார்.



1997-2007 வரையான காலப் பகுதியில் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் இக் காணி பராமரிக்கப்பட்டு வந்தது. இங்கு மா, பலா, தேசி, கயூ ஆகியன பயன் தரு மரங்கள் நடப்பட்டு பராமரிக்கப்பட்டு வந்ததோடு அப் பகுதி மக்களுக்கு வேலைவாய்ப்பையும் அவ் அமைப்பினர் வழங்கினர். அது மட்டுமல்லாமல் பாரிய கோழிப்பண்ணை அமைத்து உற்பத்தி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வந்ததோடு ஏற்றுமதி சார் பொருளாதாரம் சிறந்த முறையில் முன்னெடுக்கப்பட்டது. பிற்பட்ட காலப்பகுதியில் உள்நாட்டு யுத்தம் உக்கிரமடைந்து போராட்டம் முடிவுக்கு வந்ததன் பின்னர் அக் காணி முழுவதையும் இலங்கை இராணுவம் கைப்பற்றியதோடு தமது உற்பத்தி நடவடிக்கைக்காக பயன்படுத்தி வந்தனர்.

2011 ஆம் ஆண்டு காலப் பகுதியில் சி.ஐ.சி. விவசாய நிறுவனம் இலங்கை இராணுவத்துடனும் பிரதேச செயலகத்துடனும் இணைந்து ஒப்பந்த அடிப்படையில் குறித்த பயனுள்ள காணியை பராமரித்து வந்ததுடன் அப்பகுதி மக்களுக்கு வேலைவாய்ப்பையும் வழங்கியது.

பிற்பட்ட காலங்களில் இலங்கை இராணுவம் அக் காணிகளை தாமே பராமரிக்கப் போவதாக கோரியதன் அடிப்படையில் குறித்த நிறுவனம் அதிலிருந்து விலக வேண்டிய சூழல் உருவாகியது.

இந் நிலையில் மாறியதை மேற்குப் பிரதேச செயலகம் குறித்த பகுதியில் வசிக்கும் வறுமைக் கோட்டுக்குட்பட்ட குடும்பங்கள் , பெண் தலைமைத்துவக் குடும்பங்கள், முன்னாள் போராளிகள் ஆகியோரின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவதற்கு இராணுவத்திடமிருந்து 230 ஏக்கர் காணியை பொது மக்களுக்கு பகிர்ந்தளிக்க நடவடிக்கை எடுத்துள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார். (7-10-286)

# குண்டு வெடிப்பில் உயிரிழந்த மக்களுக்கு காணாமல் போனோரின் உறவுகள் அஞ்சலி



(குருமன்காடு)

உலகெங்கும் வாழும் கிறிஸ்தவ மக்களின் ஈஸ்டர் புனித நாளிலே ஆறாத வடுவான தேவாலயங்கள் மீதான பயங்கரவாதத் தாக்குதலால் படுகொலை செய்யப்பட்டவர்களுக்கும் தீபமேந்தி அஞ்சலி செலுத்தும் நிகழ்வு கடத்தப்பட்டு காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளை தேடிக் கண்டறியும் குடும்பங்களின் சங்கத்தின் ஏற்பாட்டில் வவுனியா இறம் பைக் குளம் அந்தோனியார் தேவாலயத்தில் நேற்று முற்பகல் 11.00 மணியளவில் இடம்பெற்றது.

நிகழ்வின் இறுதியில் அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய ஒன்றியத்தின் கொடிகளை ஏந்தியவாறு தேவாலயத்தினுள் இருந்து நடைபயணமாக வீதி அபிவிருத்தி அதிகாரசபைக்கு முன்பாக காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகளால் 800 ஆவது நாளாக முன்னெடுக்கப்பட்டு வரும் போராட்ட தளத்தை சென்றடைந்தனர். (7-250)



# சிறுபோகசெய்கை மேற்கொள்ளும் விவசாயிகளிடம் பற்றுச் சீட்டுக்கள் இன்றி பணம் அறவீடு

## உரிய நடவடிக்கை எடுக்கப்படுமென உறுதி

(கண்டாவளை)

கிளிநொச்சி முரசுமோட்டை கமக்கார அமைப்பினால் சிறுபோகச் செய்கை மேற்கொள்ளும் விவசாயிகளிடமிருந்து பற்றுச்சீட்டுக்கள் இன்றி பணம் அறவிடப்பட்டமை தொடர்பில் கிடைக்கப்பெற்ற முறைப்பாடுகளுக்கு அமைவாக உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்று மாவட்ட கமநல அபிவிருத்தி உதவி ஆணையாளர் வே.ஆயகுலன் தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சி இரணைமடுக் குளத்தின் கீழ் உள்ள முரசுமோட்டை கமக்கார அமைப்பால் இவ்வாண்டு சிறுபோகச்செய்கை மேற்கொள்ளும் விவசாயிகளிடமிருந்து 27 இலட்சம் ரூபாவிற்கும் மேற்பட்ட நிதி எந்தவித பற்றுச்சீட்டுக்களுமின்றி அறவிடப்பட்டமை தொடர்பில் விவசாயிகள் பலர் விசனம் தெரிவித்துள்ளனர்.

அதாவது, கடந்த மார்ச் மாதம் 12ஆம் திகதி கிளிநொச்சி மாவட்டச்செயலகத்தில் நடைபெற்ற இரணைமடுக்குளத்தினுடைய சிறுபோக பயிர்ச்செய்கை கூட்டத் தீர்மானங்களுக்கு மாறாக ஒவ்வொரு விவசாயிகளிடமிருந்தும் இவ்வாறு பெருந் தொகை நிதி பற்றுச் சீட்டுக்களின்றி பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளது.

இந்தப்பிரதேசத்தில் சிறுபோகச்செய்கை மேற்கொள்ளப்படுகின்ற 1700 ஏக்கர் நிலப்பரப்பிற்குரிய நீர் விநியோக வாய்க்கால்கள் முழுமையாக துப்புரவு செய்யப்படவில்லை என்றும் இவ்வாறு பற்றுச்சீட்டுக்கள் இன்றி சேகரிக்கப்பட்ட பணத்திற்கு என்ன நடந்தது என்றும் விவசாயிகள் கேள்வி எழுப்பியுள்ளனர்.-

இந்த விடயம் தொடர்பில் மாவட்ட கமநல அபிவிருத்தி உதவி ஆணையாளரைத் தொடர்புகொண்டு வினவியபோது சிறுபோகச்செய்கைளில் விவசாயிகளிடமிருந்து கூட்டத் தீர்மானங்களுக்கு அமைவாக எவ்வளவு நிதியையும் அறவிட முடியும். ஆனால், அவ்வாறு அறவிடப்படும் முழுப்பணத்திற்குமான உரிய பற்றுச் சீட்டுக்கள் விவசாயிகளுக்கு வழங்கப்பட வேண்டும்.இவ்வாறு அறவிடப்படுகின்ற நிதி உடனடியாக வங்கிகளில் வைப்பிலிடப்பட வேண்டும். அவ்வாறு பற்றுச்சீட்டுக்கள் வழங்கப்படாது எந்த நிதியும் அறவிடமுடியாது எனத்தெரிவித்த அவர்,

இது தொடர்பில் கிடைக்கப் பெற்ற முறைப்பாட்டின் அடிப்படையில் இவ்வாறு அறவிடப்பட்ட நிதி தொடர்பில் நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.(7-315)



கடந்த 21 ஆம் திகதி நாட்டில் இடம்பெற்ற குண்டுவெடிப்பு சம்பவங்களில் உயிரிழந்த உறவுகளுக்கு அஞ்சலி செலுத்தும் முகமாக முள்ளியவளை கிச்சிராபுரம் ஜும்மா பள்ளிவாசலில் நேற்று முன்தினம் மாலை அஞ்சலி நிகழ்வு ஒன்று இடம்பெற்றது.

(படம்- பணிக்கன்குளம் செய்தியாளர். )

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org




# தோள் பை உள்ளிட்ட பொருட்களை ஆலயத்துக்கு எடுத்து வரவேண்டாம்

## தமிழகத்தில் உத்தரவு

(சென்னை)

'தேவாலயங்களுக்கு வரும் பக்தர்கள், தோள் பை உள்ளிட்ட பொருட்களை எடுத்து வர வேண்டாம்' என அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இலங்கையில் தற்கொலை குண்டுத் தாக்குதல்கள் நடத்திய சந்தேக நபர்கள், தோளில் மாட்டியிருந்த பையில் வைத்தே குண்டை வெடிக்கச் செய்துள்ளனர்.

இதன் எதிரொலியாக, தமிழகத்தில் உள்ள தேவாலயங்களில் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது.

இதையடுத்து, தேவாலயங்களை சேர்ந்த நிர்வாகிகள் மற்றும் பாதிரியார்களுக்கு, பாதுகாப்பு ஏற்பாடுகள் தொடர்பான ஆலோசனைகளை பொலிஸார் வழங்கியுள்ளனர். அத்துடன், தேவாலயங்களும் பாதுகாப்பில் தனி கவனம் செலுத்த வேண்டும் என்றும் பொலிஸார் தரப்பில் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இந்நிலையில், தேவாலயங்களுக்கு வரும் பக்தர்கள் தோள் பை உள்ளிட்ட பொருட்களை உள்ளே கொண்டு செல்வதற்கு அனுமதி மறுக்கப்பட்டுள்ளது. அதேபோல், இரு சக்கரம் மற்றும் நான்கு சக்கர வாகனங்களை உள்ளே நிறுத்தவும் அனுமதி மறுக்கப்பட்டுள்ளது. (7)

# இந்தியாவுடனான மோதலை பரஸ்பர ரீதியில் கையாள வேண்டும்- இம்ரானிடம் ஜின்பிங்




(பீஜிங்)

சீனாவின் இரண்டாவது பொருளாதார வழித்தடம் மாநாட்டில் கலந்து கொள்வதற்காக சீனா சென்றுள்ள பாகிஸ்தான் பிரதமர் இம்ரான் கான் சீன ஜனாதிபதி ஜின்பிங்கை நேற்று முன்தினம் சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தயுள்ளார்.

இந்த சந்திப்பின்போது, தெற்காசிய நாடுகளுக்கிடையே நிலவிவரும் பல்வேறு பிரச்சினைகள் குறித்து கலந்துரையாடப்பட்டுள்ளதாக அந்நாட்டு ஊடகங்கள் தெரிவித்துள்ளன.

அத்துடன் இதன்போது இந்தியாவுக்கும், பாகிஸ்தானுக்கும் இடையே நிலவி வரும் மோதல் போக்கு குறித்தும், இருநாடுகளும் பரஸ்பர நட்புணர்வை பேணிக் காக்க வேண்டியதன் அவசியம் குறித்தும் கலந்துரையாடப்பட்டுள்ளன. (7)

# பாரீஸ் தேவாலயத்தை சீராக்க நன்கொடை வழங்கிய சிறுமி



(பாரீஸ்)

இங்கிலாந்தை சேர்ந்த கெயித்லின் என்ற 9 வயது சிறுமி தன்னுடைய சேமிப்பில் இருந்து 3 அமெரிக்க டொலரை பாரீஸ் நோட்ரோ-டேம் தேவாலயத்தை சீரமைக்க நன்கொடையாக வழங்கியுள்ளார்.

பிரான்ஸ் தலைநகர் பாரீசில் உள்ள 850 ஆண்டுகள் பழைமையான நோட்ரே-டேம் தேவாலயத்தில் கடந்த 15 ஆம் திகதி பயங்கர தீ விபத்து நேரிட்டது. தீயின் கோரப்பிடியில் சிக்கி, நோட்ரே-டேம் தேவாலயத்தின் பெரும் பகுதி உருக்குலைந்து போய் விட்டது.

பிரான்சின் வரலாற்று சின்னமாக பார்க்கப்படும் இந்த தேவாலயம், ஏற்கனவே இருந்ததை விட அதிக அழகுடன் மீண்டும் கட்டியெழுப்பப்படும் என ஜனாதிபதி மெக்ரான் உறுதி பூண்டுள்ளார். அடுத்த 5 ஆண்டுகளுக்குள் இது சாத்தியமாகும் என நம்பிக்கை தெரிவித்துள்ள அவர், தேவாலயத்தின் புனரமைப்பு பணிகளுக்காக சர்வதேச அள[illegible]வில் நிதி திரட்டி வருகிறார். உலகம் முழுவதிலும் இருந்து நிதி குவிந்து வருகிறது.

இந்த நிலையில், இங்கிலாந்தை சேர்ந்த கெயித்லின் என்ற 9 வயது சிறுமி தன்னுடைய சேமிப்பில் இருந்து 3 அமெரிக்க டொலரை (இந்திய மதிப்பில் ரூ.200) பாரீஸ் நோட்ரோ-டேம் தேவாலயத்தை சீரமைக்க நன்கொடையாக வழங்கி உள்ளார். பாரீசில் உள்ள நிதி திரட்டும் அமைப்புக்கு 3 அமெரிக்க டொலரையும், ஒரு கடிதம் ஒன்றையும் தபால் மூலம் அவர் அனுப்பி வைத்துள்ளார்.

அந்த கடிதத்தில் அவள், "நோட்ரே-டேம் தேவாலயத்தின் தீ விபத்து குறித்து, வானொலி மூலம் அறிந்து மனமுடைந்து போனேன். என்னால் முடிந்த உதவியை செய்ய விரும்பினேன். எனக்கு தெரியும் இது பெரிய தொகை இல்லை. ஆனால் இது போன்ற ஒவ்வொரு சின்ன தொகையும் தேவாலயத்தை சீக்கிரமாக [illegible] என குறிப்பிடப்பட்டுள்ளது. (7)

# பாதுகாப்புப்படையி

## 32 பயங்கரவாத



(காபூல்)

### ஆப்கானிஸ்தான் நாட்டின் 3 மாகாண படையினர் நேற்று நடத்திய தேடுதல் பயங்கரவாதிகள் சுட்டுக் கொல்லப்பட்டனர்

ஆப்கானிஸ்தான் நாட்டு வடக்கு பகுதியில் தலிபான் பயங்கரவாதிகள் மற்றும் பல்வேறு சிறிய பயங்கரவாத குழுக்களின் ஆதிக்கம் அண்மைக்காலமாக மீண்டும் தலை தூக்கத் தொடங்கியுள்ளது.

# தேர்தலுக்காக ச 272 அரச பணியா

## 1878 பேர் உடல்நல

(ஜகார்த்தா)

இந்தோனேசியா நாட்டில் செலவினங்களை குறைப்பதற்காக ஜனாதிபதி பதவி, பாராளுமன்றம் ஆகியவற்றுக்கு முதன் முறையாக ஒரே நேரத்தில் தேர்தல் நடத்திய பணிச்சுமையால் 272 அரசு பணியாளர்கள் உயிரிழந்தனர்.

சுமார் 26 கோடி மக்கள்தொகை கொண்ட இந்நாட்டில் முதன்முறையாக 3 தேர்த

# சொகுசு பஸ் கவிழ்ந்து 3 குழந்தைகள் உட்பட 1

(மெக்சிகோ சிட்டி)

மெக்சிகோ நாட்டின் வடக்கு பகுதியில் சொகுசு பஸ் வீதியை விட்டு விலகி கவிழ்ந்த விபத்தில் 11 பேர் உயிரிழந்தனர்.

மெக்சிகோ நாட்டின் தலைநகரான மெக்சிகோ சிட்டியில் இருந்து சுமார் 40 பயணிகளுடன் டோர்ரியோன் நகரை நோக்கி ஒரு சொகுசு பேருந்து பயணித்தது.

நேற்று முன்தினம் ஞாயிற்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெளிநாடு

# ...டயினர் தேடுதல் வேட்டை ...ாதிகள் சுட்டுக்கொலை!



### ...ாணங்களில் பாதுகாப்பு ...தேல் வேட்டையில் 32 ...ட்டனர்.

...ம் ...ல பயங்கரவாதிகள் மீது ஈவிரக்கம் காட்டாமல் நடவடிக்கை எடுக்குமாறு அந் நாட்டின் இராணுவம் மற்றும் பொலிஸார் ஆகியோரை கொண்ட கூட்டுப்படைகளுக்கு ஜனாதிபதி அஷ்ரப் கானி உத்தரவிட்டுள்ளார்.

இந்நிலையில், கந்தஹார் மாகாணத்தின் தெற்கு பகுதியில் உள்ள மரூஃப் மற்றும் ஷோரா பக் மாவட்டத்தில் நேற்று அதிகாலை நடைபெற்ற தேடுதல் வேட்டையில் 16 பயங்கரவாதிகள் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

ஃபர்யாப் மாகாணத்தின் கைசர் மாவட்டத்தில் 5 பயங்கரவாதிகள் கொல்லப்பட்டனர். கிழக்கு கஸ்னி மற்றும் மேற்கு பட்கிஸ் மாகாணத்துக்குட்பட்ட பகுதிகளில் மேலும் 11 பயங்கரவாதிகள் சுட்டுக் கொல்லப்பட்டனர். இருதரப்பு மோதல்களில் இராணுவத்தை சேர்ந்த 5 வீரர்கள் மற்றும் பொதுமக்களில் 4 பேர் உயிரிழந்ததாக ஆப்கானிஸ்தான் ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. (7)

# இந்தோனேசியாவில் வெள்ளப்பெருக்கு

## 31 பேர் உயிரிழப்பு 12 ஆயிரம் பேர் இடப்பெயர்வு

(ஜகார்த்தா)

இந்தோனேசியாவின் சுமாத்ரா தீவில் ஏற்பட்டுள்ள இயற்கை அனர்த்தம் காரணமாக 31 பேர் உயிரிழந்துள்ளனர். மோசமான வானிலை காரணமாக, சுமாத்ரா தீவின் பெங்குலு மாநிலத்திலுள்ள ஒன்பது நகரங்களில் நூற்றுக்கணக்கான கட்டடங்கள், பாலங்கள் சேதமடைந்துள்ளன.

12 ஆயிரம் பேர் வெள்ளப்பெருக்கு காரணமாக இடம்பெயர்ந்துள்ளதாகவும் ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. சில இடங்களில் வெள்ள நீர் வடிந்தோடியுள்ள நிலையிலும், அங்கு ஏற்பட்டுள்ள சேதத்தினை மதிப்பிட முடியாதுள்ளதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

மேலும், வெள்ளப்பெருக்கு மற்றும் மண்சரிவினால் பாதிக்கப்பட்டுள்ள பகுதிகளில் மீட்பு, புனரமைப்பு பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (7)



# ... கூடுதல் வேலை; ...யாளர்கள் மரணம்

## ...லக்குறைவு

...த் ...ரி ...ட ...த ல்களும் ஒருசேர நடத்தப்பட்டன. வாக்களிக்கும் உரிமை கொண்ட 19.3 கோடி மக்களில் 80 சதவீதம் பேர் இந்த தேர்தல்களில் வாக்களித்தனர்.

இந்நிலையில், தேர்தல்கள் சம்பந்தப்பட்ட கூடுதல் பணிச்சுமையால் உடல்நிலை பாதிக்கப்பட்டு நேற்று முன்தினம் வரை 273 பேர் உயிரிழந்ததாகவும் 1878 பேர் உடல்நலக்குறைவால் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் இந்தோனேசியா தேர்தல் ஆணையத்தின் செய்தி தொடர்பாளர் ஆரிப் பிரியோ சுசான்ட்டோ தெரிவித்தார். (7)

# மெக்சிக்கோவிலுள்ள அகதிகளுக்கு நிதியுதவி வழங்கிய போப் பிரான்ஸ்



(ரோம்)

அகதிகளுக்கு உதவுவதற்காக திருத்தந்தை பிரான்சிஸ், 5 இலட்சம் டொலர்களை நன்கொடையாக வழங்கியுள்ளார்.

கத்தோலிக்கர்களின் தலைமைப்பீடமான வத்திக்கான் இதனைத் தெரிவித்துள்ளது.

அமெரிக்காவிற்கு செல்ல முற்பட்டு மெக்சிக்கோவில் தனித்து விடப்பட்டிருக்கும் அகதிகளுக்கு உதவும் நோக்கிலேயே இந்த நிதி வழங்கப்பட்டுள்ளது.

கத்தோலிக்கத் திருச்சபையின் பீற்றர்ஸ் பென்ஸ் நிதியத்தினூடாக, உலகளாவிய ரீதியில் சேகரிப்பட்ட பணமே இவ்வாறு வழங்கப்பட்டுள்ளது.

குறித்த அகதிகளினுடைய பிரச்சினைகள் தொடர்பாக ஊடகங்களினால் வெளிப்படுத்தப்படும் தகவல்கள் குறைவடைந்துள்ளதைத் தொடர்ந்து, அவர்களுக்கான முக்கியமான உதவிகள் குறைவடைந்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (7)

# ...ந்து விபத்து; ...ட 11 பேர் பலி




...க்கிழமை அதிகாலை ஜகட்டெகஸ் நகராட்சிக்கு உட்பட்ட வீதியில் ஒரு குறுகிய வளைவில் திரும்பியபோது சாரதியின் கட்டுப்பாட்டை இழந்த பஸ் வீதியை விட்டு விலகி கவிழ்ந்தது. இந்த விபத்தில் 3 குழந்தைகள் உட்பட 11 பயணிகள் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தனர்.

காயமடைந்த சுமார் 20 பேர் அருகாமையில் உள்ள வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். அங்கு சிகிச்சை பெற்று வரும் சிலரது நிலைமை கவலைக்கிடமாக உள்ளதால் இந்த விபத்தில் பலி எண்ணிக்கை அதிகரிக்கக்கூடும் என அஞ்சப்படுவதாக ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. (7)

# இராட்சத பாரம்தூக்கி சரிந்து வீழ்ந்ததில் நால்வர் உடல் நசுங்கி உயிரிழப்பு

அமெரிக்காவின், வோஷிங்டனில் ராட்சத பாரம் தூக்கி ஒன்று சரிந்து வீழ்ந்து விபத்துக்குள்ளானதில் நால்வர் உயிரிழந்துள்ளனர். வோஷிங்டனின் சியாட்டில் நகரில் உள்ள மெர்கர் என்ற இடத்தில் கட்டுமான பணிகள் நடந்து வருகின்றன. இந்த பணியில் ஈடுபட்டிருந்த பாரம் தூக்கியே சரிந்து வீழ்ந்துள்ளது.

வீதியில் சென்று கொண்டிருந்த கார்கள் மீது விழுந்ததில் அந்த காரில் பயணித்த இருவரும், மற்றுமோர் காரிலிருந்த இருவரும் உட்பட நால்வர் சம்பவ இடத்திலேயே உடல் நசுங்கி உயிரிழந்துள்ளனர். அத்துடன் இந்த விபத்தினால் மேலும் 8 பேர் படுகாயமடைந்துள்ளதுடன், அவர்கள் அருகிலுள்ள வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர். (7)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### பொலிஸ் பாதுகாப்புடன்

# தனியார் வகுப்புக்கள் மே 3க்குப் பின்னர்

(கொழும்பு)


நாட்டின் தற்போதைய பாதுகாப்பு நிலைமையை கருத்திற்கொண்டு, நாடளாவிய ரீதியில் நடத்தப்பட்டுவந்த தனியார் வகுப்புகளை, மே மாதம் 3 ஆம் திகதி வரை இடைநிறுத்த தீர்மானித்துள்ளதாக, அகில இலங்கை தொழிற்சங்க பேச்சாளர்கள் சங்கத்தின் காலி மாவட்ட தலைவர் நந்தன யு கமகே தெரிவித்துள்ளார்.

அத்துடன், தனியார் வகுப்புகளுக்கு பொலிஸ் பாதுகாப்பு வழங்குவது தொடர்பில், தனியார் வகுப்பு ஏற்பாட்டாளர்களுக்கு ஆலோசனை வழங்கியுள்ளதாகவும், அவர் தெரிவித்துள்ளார்.

தனியார் வகுப்புக்கள் அனைத்தும், அருகிலுள்ள பொலிஸ் நிலையங்களினால் வழங்கப்படும் அறிவுறுத்தல்களைப் பின்பற்றுமாறும், அவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-7)

# பாகிஸ்தான், ஆப்கான் அகதிகளுக்கு இலங்கையில் இன்னமும் தீர்வில்லை

### அருட்தந்தை சக்திவேல் அதிருப்தி



(கொழும்பு)

உயிர்த்த ஞாயிறு தினத்தன்று நாட்டில் இடம் பெற்ற தொடர்குண்டுத் தாக்குதல்களை அடுத்து பாகிஸ்தான், ஆப்கானிஸ்தான் நாடுகளிலிருந்து அகதிகளாக வருகை தந்து இலங்கையில் தங்கியிருந்த கிறிஸ்தவ அகதிகள், அவர்கள் தங்கியிருந்த இடங்களிலிருந்து வெளியேற்றப்பட்டுள்ளனர்.

அவர்கள் தங்குவதற்கு தற்போதுவரை அரசாங்கத்தால் இடமொன்று ஒதுக்கப்படவில்லை என்று அருட்தந்தை சக்திவேல் தெரிவித்தார்.

பாகிஸ்தான் மற்றும் ஆப்கானிஸ்தான் நாடுகளில் கத்தோலிக்க சமூகத்தினர் எதிர்கொள்ளநேர்ந்த பிரச்சினைகளைத் தொடர்ந்து சுமார் 8 வருடங்களுக்கு முன்னர் அவ்விரு நாடுகளைச் சேர்ந்த சுமார் 500 கத்தோலிக்கக் குடும்பங்கள் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் தாபனத்தில் தம்மை அகதிகளாகப் பதிவுசெய்து இலங்கைக்கு வருகை தந்தனர். எனினும் இலங்கை அரசாங்கத்தினால் அவர்களுக்கு இன்னமும் அகதி அந்தஸ்து வழங்கப்பட்டிருக்கவில்லை.

அகதிகளாக இலங்கைக்கு வருகைதந்த அவர்கள் வெவ்வேறு பிரதேசங்களில் தங்கியிருந்ததுடன், அவர்களில் பெருமளவானோர் கத்தோலிக்கர்கள் செறிந்து வாழும் நீர்கொழும்புப் பிரதேசத்தில் இதுவரை காலமும் வாழ்ந்து வந்தனர். அண்மையில் நாட்டில் இடம்பெற்ற தொடர்குண்டுத் தாக்குதல்களையடுத்து அவர்கள் நீர்கொழும்புப் பிரதேசவாசிகளால் தங்கியிருந்த வீடுகளிலிருந்து வெளியேற்றப்பட்டுள்ளனர்.

அதனைத்தொடர்ந்து அவ்வாறு வெளியேற்றப்பட்டவர்களில் சுமார் 600 பேர் பஸ்யாலை பிரதேசத்திற்கும், சுமார் 90 பேர் அத்துருகிரிய பிரதேசத்திற்கும் அனுப்பி வைக்கப்பட்டனர்.

எனினும் அத்துருகிரிய பிரதேசவாசிகள் அகதிகளை அனுமதிப்பதற்கு மறுத்த நிலையில் மீண்டும் அவர்கள் நீர் கொழும்பிற்கு அனுப்பப்பட்டனர்.

தற்போது பாகிஸ்தான் மற்றும் ஆப்கானிஸ்தான் நாடுகளிலிருந்து வருகைதந்த கத்தோலிக்க அகதிகளில் சுமார் 150 பேர் நீர்கொழும்பு பொலிஸ் நிலையத்தை அண்மித்த வாகனங்கள் நிறுத்துமிடத்தில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

இவ்வாறு அகதிகளாக நாட்டிற்கு வருகை தந்தவர்கள் தங்குவதற்கு இடமொன்றையும், பாதுகாப்பையும் அரசாங்கம் வழங்குமாயின், அவர்களுக்குத் தேவையான ஏனைய வசதிகளை ஐக்கிய நாடுகள் தாபனம் வழங்கும். ஆனால் அரசாங்கம் அவர்கள் தொடர்பான எவ்வித தீர்மானங்களையும் இன்னமும் மேற்கொள்ளாமையால் பெரும் அசௌகரியங்களை எதிர்கொண்டுள்ளனர் என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-7)

# குண்டுத் தாக்குதலில் படுகாயமடைந்து சிகிச்சை பெற்று வந்தவர் உயிரிழப்பு

(ஏறாவூர்)

மட்டக்களப்பு சீயோன் தேவாலயத்தில் கடந்த 21 ஆம் திகதி இடம்பெற்ற தற்கொலை குண்டு தாக்குதலில், பலத்த காயங்களுக்குள்ளாகி, வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு, சிகிச்சை பெற்று வந்த நபரொருவர், சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

கடந்த 21ஆம் திகதி, நாட்டில் தேவாலயங்கள் உள்ளடங்கலாக எட்டு பகுதிகளில் மேற்கொள்ளப்பட்ட தற்கொலை தாக்குதலில், 250 இற்கும் மேற்பட்டோர் மரணித்தும், 500 இற்கும் மேற்பட்டோர் காயமடைந்த நிலையில், வைத்தியசாலைகளில் சிகிச்சை பெற்றும் வந்தனர்.

இந்நிலையில், மட்டக்களப்பு சீயோன் தேவாலயத்தில் இடம்பெற்ற தற்கொலை குண்டு தாக்குதலில், பலத்த காயங்களுக்குள்ளாகி, மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் தீவிர சிகிச்சை பிரிவில் சிகிச்சை பெற்று வந்த ஒருவர் நேற்று முன்தினம், சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்தவர், நாவற்குடாவைச் சேர்ந்த சுரங்க எனத் தெரியவந்துள்ளது. (இ-7)

### தனிப்பட்ட நோக்கங்களுக்கு முன்னுரிமை வழங்காது

# அனைத்து அரசியல்வாதிகளும் ஒன்றிணைந்து செயற்பட வேண்டும்



(கொழும்பு)

நாட்டில் தற்போது ஏற்பட்டுள்ள நிலைமையை வைத்துக் கொண்டு சிலர், தமது நோக்கங்களை நிறைவேற்றிக் கொள்ள முனைவதாக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது. ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தேசிய அமைப்பாளர் துமிந்த திஸாநாயக்க எம்.பி.இந்தக் குற்றச்சாட்டை முன்வைத்துள்ளார்.

கோத்தபாய ராஜபக்ஷ, தாம், அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடப் போவதாக விடுத்த அறிவிப்பு தொடர்பிலேயே இந்தக் கருத்தை துமிந்த திஸாநாயக்க வெளியிட்டுள்ளார்.

தற்போதைய நிலையில் அனைத்து அரசியல்வாதிகளும் ஒன்றிணைந்து செயற்பட வேண்டும். அத்துடன் தனிப்பட்ட நோக்கங்களுக்கு முன்னுரிமை வழங்காது, பிரச்சினைக்கான தீர்வுக்கு வழியேற்படுத்த வேண்டும் என்றும் துமிந்த திஸாநாயக்க கேட்டுக்கொண்டார். (இ-7)

# இன்று ஒரு தகவல்

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

## குழந்தை சுபாவம்

ஒருத்தர் தன்னுடைய சிநேகிதரை கடைத் தெருவில் சந்தித்த போது... குடும்ப விடயங்களைப் பற்றி விசாரித்துக் கொண்டிருந்தார். கடைசியாக கடைக்குட்டி பையன் எப்படி இருக்கின்றான்? என்று கேட்டார்.

அவன் தான் சேர் எனக்குப் பெரிய தலைவலி! வால் ஒன்றுதான் பாக்கி அவனுக்கு! ஏதாவது குறும்பு செய்து கொண்டே இருப்பான். என்ன செய்வது என்றே தெரியவில்லை! என்று இவர் புலம்ப ஆரம்பித்தார். பொதுவாக குழந்தைகளுக்கு நல்ல பழக்கவழக்கங்களைக் கற்றுக் கொடுக்கின்றது பெற்றோருடைய கையிலே தான் இருக்கின்றது. சின்ன வயதில் அவனை உதைக்க சொல்லி வேடிக்கை பார்க்கின்றது! அவன் பெரியவனாகி உதைக்க வந்தால் வருத்தப்படுகின்றது! இதற்கு யார் சேர் பொறுப்பு?

சின்ன பிள்ளைகளுக்கு திட்டுவது எப்படி என்று சொல்லிக் கொடுத்து... அவங்க திட்டும் போது அதை இரசிக்கின்ற பெரியவங்க இப்பவும் எத்தனையோ பேர் உண்டு. அந்த சின்ன பிள்ளை பெரியவன் ஆனதும் அதேவார்த்தையைச் சொல்லி திட்டினால்... பெரியவங்களை மதிக்க தெரியல என்று சொல்றது. இதுதான் நம்முடைய வழக்கம்.

சரி! இப்பொழுது விடயத்திற்கு வருவோம். கொஞ்சம் நிதானமாக யோசித்துப் பாருங்கள்! குழந்தைகள் உடம்பு நல்லா இருக்க வேண்டும் என்பதற்கு தான் நாம் அதிகமாக அக்கறை செலுத்துகின்றோம். மனதும் நல்லா இருக்க வேண்டும் என்றும் யோசித்து அதற்கு தகுந்த மாதிரி நாம் எதுவும் செய்வதில்லை. இன்று உள்ள பல குடும்ப பிரச்சினைகளுக்கு இது ஒரு முக்கியமான காரணம். குழந்தைக்கு பால் கொடுக்கின்றோம்... பழம் கொடுக்கின்றோம். பழக்கவழக்கத்தைப் பற்றி யாரும் யோசிக்கின்றீர்களா?

ஒரு குழந்தைக்கு நல்ல பழக்கவழக்கத்தை கற்றுக் கொடுக்கின்றது எப்படி? ஒன்றும் பெரிய வேலை இல்லை. கொஞ்சம் கவனம் வேண்டும். அவ்வளவு தான்.

ஒரு குழந்தை நல்லவிதமாக நடந்து கொண்டால் உடனே அதைப் பாராட்ட வேண்டும். சிரித்த முகத்துடன் அதை தட்டிக் கொடுக்க வேண்டும். அவன் மிகவும் நல்ல பையன் என்று நீங்க நினைக்கின்றதை அவன் புரிந்து கொள்கின்ற மாதிரி ஏதாவது செய்ய வேண்டும். ஆனால், நாம் எதிர்மறையாக நடந்து கொள்கின்றோம். ஒரு குழந்தை நல்லவிதமாக நடந்து கொண்டால் அதை பாராட்டுவதில்லை. ஆனால் ஏதாவது தப்பு செய்தால் மட்டும் உடனே கண்டிக்கின்றோம்.

பையனை கடைத் தெருவிற்கு அழைத்துக் கொண்டு போறீங்க. அவன் மிகவும் சாதுவாக வீதி ஓரமாக நடந்து வந்து கொண்டிருக்கின்றான். அப்பொழுது நீங்க ஒன்றும் கூறுவதில்லை. அவன் ஏதாவது குதித்துக்கொண்டு அங்கேயும் இங்கேயும் ஓடினால்... அப்பொழுது மட்டும் திட்டுவீர்கள். இது சரியா? சாதுவாக நல்ல பிள்ளையாக நடந்து வந்து கொண்டிருந்தானே அப்பொழுதே அதை பாராட்டி ஒரு வார்த்தை சொன்னால் அது அவன் மனதிற்குள் ஒரு பெரிய மாறுதலை ஏற்படுத்தி இருக்கும். நல்ல சுபாவம் அவனுக்குத் தானாக வந்து விடும்.

குழந்தைகளின் நல்ல சுபாவத்தை ஊக்கப்படுத்துவதற்கு, அது சம்பந்தமான நிபுணர்கள் யோசனைகளைச் சொல்லி இருக்கின்றார்கள். குழந்தைகளிடம் நல்ல விதமான பழக்கம் வைத்துக்கொள்ளுங்கள். அவர்கள் லெவல்ல இறங்கி பழகிக் கொள்ளுங்கள். நீங்க பெரிய ஆபீசரா இருக்கலாம். அதற்காக உங்கள் குழந்தைகளிடமும் அதிகார தோரணையோட பழக வேண்டாம். ஆபிசை மறந்து விட்டு முடிந்தால் மண்டி போட்டு நடந்து குழந்தைக்கு வேடிக்கை காட்டுங்கள்.

கதை சொன்னால் குழந்தைகளுக்கு ரொம்ப பிடிக்கும். நீங்கள் குழந்தையாக இருந்த போது நடந்த வேடிக்கையான சம்பவங்களை சொல்லுங்கள்.

அப்புறம் இன்னொரு விடயம் குழந்தைகளை ஏமாற்றக் கூடாது. அவர்களிடம் கொடுத்த வாக்குறுதியை காப்பாற்றனும். வாங்கித் தருகின்றேன் என்று சொல்லியிருந்தால் வாங்கி கொடுத்து விடனும்.

டாக்டர் ஊசி போடவருகின்றார். பையன் பயப்படுகின்றான். கொஞ்சம் கூட வலிக்காது என்று அவனிடம் பொய் சொல்லாதீர்கள். லேசாக வலிக்கும் அது ஒன்றும் பெரிய கஸ்டமா இருக்காது என்று உண்மையைச் சொல்ல வேண்டும். அப்பொழுது தான் அவனுக்கு உங்களின் மேல் ஒரு நம்பிக்கை வரும். இல்லை என்றால் பின்னாடி வேறொரு சந்தர்ப்பத்தில் நீங்கள் உண்மையை சொன்னாலும் அவன் நம்ப மாட்டான்.

கொஞ்சம் வளர்ந்த குழந்தையாக இருந்தால் அவனிடம் வாக்குவாதம் பண்ணிக் கொண்டிருக்கின்றதை விட ஒரு ஒப்பந்தம் செய்து கொள்வது நல்லது.

எல்லா பாடங்களிலும் 50% ற்கு மேலே மாக்ஸ் வாங்கினால் உனக்கு ஒரு பரிசு தருவேன் என்று சொல்லி விடலாம். அதை விட்டு விட்டு அவனிடம் தினமும் படி! படி! என்று சொல்லி அறுத்துக் கொண்டிருக்கக் கூடாது. இவ்வளவும் நிபுணர்கள் சொல்லியிருக்கும் நுணுக்கங்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேசிய பாதுகாப்பு தொடர்பில் மகிந்த அணி விரிவாக ஆராய்வு

## கோத்தபாய உள்ளிட்ட பலர் பங்கேற்பு





(கொழும்பு)

எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ஷவுக்கும் முன்னாள் பாதுகாப்பு பிரதானிகளுக்குமிடையில்சந்திப்பொன்று மகிந்த - கோத்தா சந்திப்பு! பேசப்பட்டதென்ன?

எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ஷவுக்கும் முன்னாள் பாதுகாப்புத் தரப்புகளின் பிரதானிகளுக்குமிடையில் சந்திப்பொன்று நேற்று முன்தினம் இடம் பெற்றுள்ளது.

இந்தச் சந்திப்பில் முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ, முன்னாள் இராணுவத் தளபதி, முன்னாள் பொலிஸ்மா அதிபர் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்களான ஜி.எல். பீரிஸ், வாசுதேவ நாணயக்கார, டளஸ் அழகப்பெரும, பசில் ராஜபக்ஷ, உதய கம்மன்பில மற்றும் பந்துல குணவர்த்தன உள்ளிட்டவர்கள் கலந்து கொண்டனர்.

நாட்டின் தற்போதைய நிலைமை தொடர்பிலும் நாட்டின் எதிர்கால தேசிய பாதுகாப்பு தொடர்பிலும் இந்தச் சந்திப்பின் போது விரிவாக கலந்துரையாடப்பட்டுள்ளதுடன், இது தொடர்பான அறிக்கையொன்றினையும் சமர்ப்பிக்குமாறு மகிந்த ராஜபக்ஷ முன்னாள் பாதுகாப்புத்தரப்பு பிரதானிகளுக்கு பணிப்புரை விடுத்துள்ளார். (இ-7)

## வவுணதீவில் பொலிஸார் கொலை

# முன்னாள் போராளிகளை விடுதலை செய்ய வேண்டும்

## வடக்கு அவைத்தலைவர் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

வவுணதீவில் இரண்டு பொலிஸ் உத்தியோகத்தர்கள் சுட்டுக் கொல்லப்பட்ட சம்பவத்துடன் தொடர்புடையவர்கள் எனக் குற்றம்சாட்டப்பட்டு கைது செய்யப்பட்டுள்ள இரண்டு முன்னாள் போராளிகளையும் விடுதலை செய்ய வேண்டும் என வடக்கு மாகாண சபையின் அவைத் தலைவர் சீ.வீ.கே. சிவஞானம் வேண்டுகோள்விடுத்துள்ளார்.

யாழ்ப்பாணத்திலுள்ள அவரது அலுவலகத்தில் நேற்று இடம் பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போது மேற்கண்டவாறு தெரிவித்தார். .

மட்டக்களப்பு வவுணதீவில் இரண்டு பொலிஸ் உத்தியோகத்தர்கள் சுட்டும் வெட்டியும் படுகொலை செய்யப்பட்டனர். இந்தச் சம்பவம் தொடர்பில் இரண்டு முன்னாள் தமிழீழ விடுதலைப் புலி உறுப்பினர்கள் கைது செய்யப்பட்டுள்ளதுடன், விளக்கமறியில் வைக்கப்பட்டு விசாரணை நடத்தப்பட்டு வருகின்றது.

இந்நிலையில் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்ட சந்தேக நபரிடமிருந்து பெறப்பட்ட வாக்கு மூலத்தின் அடிப்பண்டயில் அந்த சந்தேக நபர் தாங்கள் தான் அந்த கொலையைச் செய்ததாக ஒப்புக் கொண்டுள்ளனர் .

எனவே இந்த விடயத்தில் இலங்கையின் புலனாய்வுத்துறையானது மிகவும் பக்கச்சார்பாக செயற்படுவதாகவே நான் கருதுகின்றேன்.

எனவே இந்த விடயத்தைக் கருத்தில் கொண்டு கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ள இரண்டு முன்னாள் விடுதலைப் புலி உறுப்பினர்களையும் விடுதலை செய்ய வேண்டும் என்றும் இந்த அவசரகாலச் சட்டமானது தொடர்ந்து நீடிக்க அனுமதிக்க முடியாது.

தற்போது நாட்டில் சட்டம் ஒழுங்கை நடைமுறைப்படுத்துவதற்காக இந்த அவசரகால சட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கு நாம் ஆதரவை வழங்கியுள்ளோம். எனினும் இரண்டு மூன்று மாத காலப்பகுதியின் பின்னர் இந்தச் சட்டம் தொடர்ச்சியாக நாட்டுக்கு தேவையா என்பது தொடர்பில் நாம் பரிசீலிப்போம். அதனை ஆதரிப்பது தொடர்பில் பரிசீலிக்கப்படும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (இ-101)

## முன்பள்ளி சிறுமி உட்பட

# மூவரின் உயிரிழப்புக்குக் காரணமான சாரதிக்கு 2 ஆண்டுகள் கடூழியச்சிறை

## அனுமதிப்பத்திரம் நிரந்தரமாக இரத்து

(யாழ்ப்பாணம்)

2018 ஆம் ஆண்டு முன்பள்ளிக்குச் சென்று கொண்டிருந்த சிறுமி உட்பட மூவரின் உயிரிழப்புக்குக் காரணமாக இருந்த வாகனச் சாரதிக்கு கடந்த 25 ஆம் திகதி யாழ்.நீதவான் நீதிமன்ற நீதவான் அந்தோனிசாமி பீற்றர் போல் கடுமையான தண்டனை வழங்கித் தீர்ப்பளித்தார்.

2018 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 2 ஆம் திகதி நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரிக்கு அண்மையில்ஆட்டோவும்ஹயஸ் வாகனமும் மோதி விபத்து ஏற்பட்டது.

யாழ்ப்பாணம் பருத்தித்துறை வீதியில் பயணித்த ஹயஸ் வேகக் கட்டுப்பாட்டையிழந்து தடம் மாறி ஆட்டோவை மோதித் தள்ளியது. இதனால் ஆட்டோ அருகிலிருந்த வயலுக்குள் தூக்கி வீசப்பட்டது.

இந்த விபத்தில் சிறுமி ராஜ்குமார் மனிஷ்ரா, சிறுமியின் தாத்தா சிங்காரவேலு பாஸ்கரன் ஆகியோர்.சம்பவ இடத்திலேயே உயிரிழந்தனர்.

ஆட்டோ சாரதி ஜெயபாலன் துரைபாலசிங்கம் படுகாயமடைந்த நிலையில் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பயனின்றி உயிரிழந்தார்.

இந்நிலையில் விபத்தை ஏற்படுத்தி மூவரின் உயிரிழப்புக்கு காரணமாக இருந்தமை, கவனயீனமாக வாகனத்தைச் செலுத்தியமை, ஆபத்தான முறையில் வாகனத்தைச் செலுத்தியமை மற்றும் விபத்தைத் தடுக்கத் தவறியமை ஆகிய 4 குற்றச்சாட்டுக்களின் கீழ் சாரதிக்கு எதிரான குற்றப் பத்திரிகையைப் பொலிஸார் தாக்கல் செய்தனர்.

குற்றச்சாட்டுக்களை வாகனச் சாரதி ஏற்றுக்கொண்டமைக்கு அமைவாக தீர்ப்பு வாசிக்கப்பட்டது.

விபத்தை ஏற்படுத்தக் காரணமாக இருந்து மூவரின் உயிர்களைப் பறித்தமைக்கு குற்றவாளிக்கு 2 ஆண்டுகள் கடூழியச் சிறைத்தண்டனையும் விபத்தில் உயிரிழந்த சிறுமி மற்றும் அவரது தாத்தாவின் குடும்பத்துக்கு எதிரி 5 இலட்சம் ரூபாய் இழப்பீட்டை வழங்கவேண்டும். அதனை வழங்கத் தவறின் ஒரு வருட சிறைத் தண்டனையை எதிரி அனுபவிக்க வேண்டும்.

உயிரிழந்த ஆட்டோ சாரதியின் குடும்பத்துக்கு 3 இலட்சம் ரூபா பணத்தை எதிரி இழப்பீடாக வழங்கவேண்டும். அதனைச் செலுத்தாவிடின் ஒரு வருட சிறைத்தண்டனையை எதிரி அனுபவிக்க நேரிடும்.


மேலும் 3 குற்றங்களுக்கான எதிரி தலா 2 ஆயிரத்து 500 ரூபா வீதம் 7 ஆயிரத்து 500 ரூபாவைத் தண்டமாகச் செலுத்த வேண்டும்.

எதிரியின் சாரதி அனுமதிப் பத்திரத்தை நிரந்தமாகத் தடை செய்யும் ஆணை மோட்டார் போக்குவரத்துத் திணைக்களத்துக்கு நீதிமன்று வழங்குகிறது என்று நீதவான் தீர்ப்பளித்தார்.

இது ஒரு விபத்துச் சம்பவமாக இருந்தாலும் அதன் இழப்புக்கள் பாரதூரமானவை. எனவே தண்டனைக் குறைப்புக்கு இடமேயில்லை எனவும் தனது தீர்ப்பில் சுட்டிக் காட்டினார். (இ-10)

# குர்ஆன் ஆராய்ச்சிக்கு ஆசைப்பட்ட பிக்கு பிரச்சினையில் சிக்கினார்

## பொதுமக்கள் பிடித்து பொலிஸாரிடம் ஒப்படைப்பு



(மஹரகம)

மஹரகம தஹம் மாவத்தையில் குர்ஆன் ஒன்றை தம்வசம் வைத்திருந்த பிக்கு ஒருவரை பிரதேசவாசிகள் பொலிஸாரிடம் ஒப்படைத்த சம்பவமொன்று நேற்று முன்தினம் மாலை இடம் பெற்றுள்ளது.

பிக்குவிடம் காணப்பட்ட சிங்கள மொழியிலான குர்ஆன் கீழே விழுந்தபோது, அதற்கு எதிர்ப்பு தெரிவிக்கும் வகையில் குறித்த பிக்கு அமைதியற்ற முறையில் நடந்து கொண்டுள்ளார்.

இதனையடுத்து பிக்குவை பொலிஸாரிடம் பிரதேசவாசிகள் ஒப்படைத்த பின்னர், பிக்குவிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின் போது, தான் கண்டியிலுள்ள விகாரையில் இருப்பதாகவும் குர்ஆன் பற்றி ஆய்வு செய்வதற்காக இதனை சிங்கள மொழியில் தான் வைத்திருப்பதாகவும் பொலிஸாரிடம் தெரிவித்துள்ளார். இதனையடுத்து, பிக்குவை பொலிஸார் விடுவித்துள்ளனர். (இ-7)

# முஸ்லிம் மக்களை ஓரங்கட்டுவதை ஏற்றுக்கொள்ள முடியாது - நிமால்



(கொழும்பு)

நாட்டில் தற்போது உருவாகியிருக்கும் மிகமோசமான பயங்கரவாதத்தை ஒழிப்பதற்கு அனைவரும் ஒன்றிணைந்து செயற்பட வேண்டும் என்பதுடன், இத்தருணத்தில் முஸ்லிம் சமூகத்தினரை ஓரங்கட்டுவது ஏற்றுக் கொள்ளப்பட முடியாத தொன்றாகும் என பாராளுமன்ற உறுப்பினர் நிமால் சிறிபால டி சில்வா தெரிவித்தார்.

அத்துடன் சம்மாந்துறை பிரதேசத்தில் இடம்பெற்ற சுற்றிவளைப்பு சம்பவங்கள் அப்பிரதேசத்தைச் சேர்ந்த முஸ்லிம் மக்கள் வழங்கிய தகவல்களையடுத்தே மேற்கொள்ளப்பட்டன.

முஸ்லிம் மக்கள் தமது சமூகத்திற்குள் உருவாகியிருக்கும் தீவிர்வாதத்தை விரும்பவில்லை.

அதனை முற்றாக இல்லாதொழிப்பதற்குத் தேவையான அனைத்து உதவிகளையும் வழங்குவதற்கு அவர்கள் முன்வந்திருக்கின்றார்கள்.

எனவே அதனைப் புரிந்து கொண்டு நாமனைவரும் செயற்பட வேண்டும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைமைக் காரியாலயத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். (இ-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரச காணிகளின் முகாமைத்துவம் சார்பான சட்டங்களும் அவை செயற்படும் படிமுறைமைகளும் பகுதி-II

கலாநிதி க.தவலிங்கம், தவிசாளர் எல்லை நிர்ணய ஆணைக்குழு
ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்.

14



புதிதாக அமைக்கப்படும் வழிபாட்டுத் தலத்திற்காக அத்தகைய விகாராதிபதி ஒருவர் சட்டப்படி நியமிக்கப்படாதிருப்பதால் முதலில் குத்தகைப்பத்திரம்/ விசேட பத்திரம் சட்ட திட்டங்களுக்கு அமைவாக தாபிக்கப்பட்டிருக்கும் தாபனத்தின் நம்பிக்கைப் பொறுப்பாளர் சபைக்கு வழங்கப்படல் வேண்டும்.

புதிதாக விகாரையொன்றினை அமைப்பதற்காக அரச காணியொன்று கேட்கப்படுமிடத்து குத்தகைக்கு விடப்படலாம் அல்லது விசேட பத்திரம் வழங்கப்படலாம்.

அரச காணி சில வேளைகளில் தனியார் காணியொன்றின் அல்லது விகாராதிபதியின் பெயரில் குத்தகைக்கு வழங்கப்பட்ட காணியொன்றின் அல்லது வழங்கற் பத்திரம் மூலம் பெறப்பட்ட காணியொன்றின் அல்லது நம்பிக்கைப் பொறுப்பாளர் சபைக்கு குத்தகைக்கு வழங்கப்பட்ட காணி ஒன்றின் அபிவிரு த்தி நோக்கத்திற்காக முடிக்குரிய காணி ஒன்றைக் குத்தகைக்கு வழங்குவதாக இருக்கலாம். அத்தகைய சந்தர்ப்பத்தில் உடனடியாக விகாராதிபதியின் பெயரில் வழங்கற் பத்திரம் ஒன்றை வழங்க முடியும்.

பௌத்த மடங்கள், பௌத்த நிலையங்கள், பிரிவெனாக்கள், விடுதி வசதியுடனான புத்தகுருமார் நிறுவனங்கள், பத்துசீலங் கடைப்பிடிக்கும் மகளிர் மடங்கள் போன்ற பௌத்த பிரிவிலடங்காத வேறு பௌத்த நிறுவனங்களுக்காக முடிக்குரிய காணிகளைப் பெறும் பொழுது விசேட வழங்கற் பத்திரம் வழங்கப்படமாட்டாது. குத்தகை மாத்திரம் வழங்கப்படும். அது நம்பிக்கைப் பொறுப்பாளர் சபையின் பெயரிலேயே வழங்கப்படும்.

**34.அரச காணிக் கட்டளைச் சட்டத்தின் கீழ் பௌத்தம் அல்லாத ஏனைய மத நிறுவனங்களுக்கு முடிக்குரிய காணிகளைக்குத்தகைக்கு வழங்குதல்.**

கத்தோலிக்க மற்றும் கிறிஸ்தவ தேவாலயத்திற்காகக் காணியைக் குத்தகையாகப் பெற சட்ட விதிகளின் பிரகாரம் அதிகாரம் பெற்றுள்ள ஆளுக்கு அல்லது ஆட்களுக்கு காணிக் குத்தகையாக வழங்கப்பட வேண்டும். உதாரணமாக (338 ஆம் அத்தியாயத்தில்) ரோமன் கத்தோலிக்க பேராயர் அல்லது ஆயர் தொடர்பாக கட்டளைச் சட்டத்தின் 2ஆம், 3ஆம் பிரிவின் கீழ் கொழும்பு பேராயர் அல்லது ஆயருக்கு அத்தகைய அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளது. இந்து இஸ்லாமிய மத நிறுவனங்களுக்கு அவற்றிற்கென தாபிக்கப்பட்டுள்ள சங்கங்களின் நம்பிக்கைப் பொறுப்பாளருக்கு காணி குத்தகைக்கு வழங்கப்படல் வேண்டும். நீண்டகால குத்தகைப்பத்திரம் பொறுப்பாளர்களுக்கு ஒரே முறையில் வழங்கப்படுவதுடன் அவர்கள் குத்தகைக்காலம் முழுவதற்கும் அக் காணியின் உரித்துடையவராவர். சமய நோக்கத்திற்காக அரச காணி வழங்கப்படும் பொழுது காணியை அளப்பதற்கும் குத்தகைப்பத்திர வரைபடத் தயாரிப்பிற்கும் ஆகும் செலவு அரசால் ஏற்றுக் கொள்ளப்படும். இவ்வாறான நிறுவனங்களுக்கான குத்தகைப்பணம் வருடத்திற்கு காணியின் அபிவிருத்தியற்ற பெறுமதியின் - வீதமாகும்.

அரச காணி ஒன்றைப் பெற்றுக் கொள்வதற்காக விண்ணப்பப்பத்திரம் அக் காணி அமைந்துள்ள இடத்தின் பிரதேச செயலாளருக்கு அனுப்பப்படல் வேண்டும்.

ஜனாதிபதியின் அல்லது காணி ஆணையாளர் நாயகத்தின் எழுத்து மூல அங்கீகாரத்தை முன்கூட்டியே பெற்றுக் கொள்ளாது குத்தகைக்குச் சொந்தமான சொத்துக்கள் தொடர்பான தமது உரிமையை இன்னொருவரிடம் கையளித்தலை பிரித்துத் துண்டுகளாக குத்தகைக்கு விடுதலை, ஈடு வைத்தலை நன்கொடையளித்தலை அல்லது வேறு விதத்தில் கையுதிர்த்தலை செய்வதிலிருந்து குத்தகைக்காரரை தடை செய்யும் நிபந்தனை சகல அரச குத்தகையிலும் அடங்கியுள்ளது. அத்தகைய சகல கையுதிர்த்தலும் எவ்விடயம் குறித்தும் தத்துவமற்றதாகும் என்பதும் செயற்படாதென்பதும் கட்டளைச் சட்டத்தின் 19 ஆம் பிரிவில் பிரகடனஞ் செய்யப்பட்டுள்ளது. எனவே எந்த நிபந்தனைக்கும் முரணாக எந்த நோக்கத்திற்காக கையுதிர்த்தல் செய்யப்படினும் அது ஏற்றுக் கொள்ளப்படக் கூடாது. அத்தகைய கையுதிர்த்தல் முற்றாக தத்துவமற்றதும் பலனற்றதுமாகும்.

அரச குத்தகையை முடிவாக்குதலும் நிபந்தனைகளை மீறிய குத்தகைக்காரர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுத்தலும்.

- குத்தகை எடுத்தவரின் விருப்பத்துடன் அல்லது
- நீதிமன்றத் தீர்ப்பின் பேரில் பெற்ற தத்துவத்தின் கீழ் அல்லது.
- கட்டளைச் சட்டத்தின் 87ஆம் பிரிவின் கீழ் குத்தகையை செயலற்ற தாக்கினாலன்றி அரச குத்தகை ஒன்றை முடிவுறச் செய்து அதற்குரிய காணியின் ஆட்சியை திரும்பப் பெற முடியாது.

**35.(அரச காணிக் கட்டளைச் சட்டம் அல்லாத) கீழ் ஏனைய சட்டங்களின் கீழ் கூட்டிணைக்கப்பட்ட ஏதேனும் சபைகளுக்கு சலுகைக் குத்தகை வழங்கல்**

(1)ஒவ்வொரு கூட்டுத்தாபனத்திற்கும் முடிக்குரிய காணிகளை பெற்றுக் கொள்ளும் முறைபற்றி அவ்வச் சபைகள் தாபிக்கப்பட்டுள்ள சட்டங்களில் குறிப்பிட்டுள்ளன. சில கூட்டுத்தாபனங்களுக்கு சலுகை அடிப்படையிலும் இன்னும் சிலவற்றிற்கு வழங்கற் பத்திர அடிப்படையிலும் முடிக்குரிய காணிகளைப் பெற்றுக் கொடுக்க வசதிகள் உண்டு.

(2) 1957 ஆம் ஆண்டு 49 ஆம் இலக்க அரச கைத்தொழிற் கூட்டுத்தாபன சட்டத்தின் கீழ் தாபிக்கப்பட்ட கூட்டுத்தாபனங்களுக்கு முடிக்குரிய காணிகள் பெறப்படுவது கைமாற்ற முறையிலாகும். அதனால் ஏதேனும் கூட்டுத்தாபனம் அல்லது சபை முடிக்குரிய காணிக்காக விண்ணப்பிக்கும் பொழுது காணியைப் பெற்றுக் கொடுப்பது எவ்விதத்திலென்பதனை அத்தாபனம் தொடர்பான சட்டத்தின் ஏற்பாடுகளை உசாவுதல் மூலம் தீர்மானிக்க வேண்டும்.

**36. ஒதுக்கப்பட்ட காணிகள்** (land manual)

அரச காணி கட்டளைச் சட்டத்தின் 49 ஆம் பிரிவின் கீழ் தெருக்கள், நதிகள், கால்வாய்கள், நீரோடைகள், நீர்வழிகள், நதிகளின் நீரேந்துப் பரப்பு, குளங்கள், நீரூற்றுக்கள் ஆகிய இவைகளின் நிலப் பிரதேசங்களை வர்த்தமானி அறிவித்தல் மூலம் குறித்தொதுக்கி வைப்பதற்கு அமைச்சருக்கு தத்துவமுண்டு.

இக் கடமைகள் தொடர்பான விபரப் பிரிவு 49((1) - 49(8) வரையில் விபரிக்கப்பட்டு ள்ளது. இதற்கும் மேலதிகமாக 49(9) இன் கீழ் குறிப்பிட்ட ஏதேனும் நோக்கத்துக்கென அவ்வாறு குறித்தொதுக்கப்பட்டதென வெளிப்படுத்துவதற்கு இடமுண்டு. ஆயினும் சட்டத்தின் 50 ஆம் பிரிவின் கீழ் இத்தகைய வர்த்தமானி அறிவித்தலொன்று வெளியிடப்படாதபோதும் பொது நீர்வழி ஒன்றின் இருமருங்கும் குறிப்பிட்ட அளவிலான காணிக் கீறலொன்று ஒதுக்கப்பட்டதாக சட்டமுறையாக ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது.

**37.தெருக்களுக்கு ஒதுக்கப்பட்ட காணிகள்** (land manual 230).

(1)அரச காணி கட்டளைச் சட்டத்தின் தேவைப்பாடுகளுக்கு கீழ்காட்டப்பட்டுள்ள வகுப்புக்களைச் சேர்ந்த காணிகள் தெருக்களுக்கான ஒதுக்கங்களாகக் கருதப்படுவதாக கட்டளைச் சட்டத்தின் 55 ஆம் பிரிவில் கூறப்பட்டுள்ளது.

(1)அரச காணி கட்டளைச் சட்டம் நடைமுறைப்படுத்தவதற்கு முன்னர் மகாதேசாதிபதியின் அல்லது குடியேற்ற நாட்டுக் காரியதரிசியின் அல்லது காணி ஆணையாளரின் அல்லது வேறு எவரேனும் அரசாங்க அலுவலரின் கையொப்பத்துடன் கூடிய கசெட்டில் வெளியிடப்படுவதான அத்தகைய காணி விற்பனைக்கான அறிவிப்பில் அல்லது வேறேதேனும் அறிவிப்பில் தெருவொன்றுக்காக ஒதுக்கப்பட்ட நிலமென எல்லைகள் குறிப்பிடப்பட்டு விபரிக்கப்பட்டுள்ள அரச காணிகள்.

(2)அரச காணி கட்டளைச்சட்டம் நடைமுறைப்படுத்துவதற்கு முன் நில அளவையாளர் தலைமையதிபதியினால் அல்லது அவரது உத்தரவின் மீது தயாரிக்கப்பட்டுள்ள எத்தகைய வரைபடத்திலேனும் தெருவொன்றுக்கென ஒதுக்கிய நிலம் ஒன்று எனக் காட்டப்பட்டுள்ள அல்லது விபரிக்கப்பட்டுள்ள அரச காணிகள்.

(3)அரச காணி கட்டளைச் சட்டத் தின் 49 ஆம் பிரிவின் கீழ் அமைச்சரால் வெளியிடப்பட்டுள்ள அறிவிப்பொன்றின் மூலம் தெருவொன்றுக்கு அடிபாதையொன்றுக்கு ஒதுக்கப்பட்ட அரச நிலமொன்றாக அமைந்துள்ள அரச காணிகள்.

(4) எத்தகைய தெருவிற்கண்மையிலும் அத் தெருவின் பாதுகாப்பிற்கென அல்லது நலனுக்கென ஒதுக்கப்பட்டுள்ள காணிகள்.

(5)பகிரங்க மோட்டார் வண்டிப் பாதை ஒன்றின் அல்லது கரத்தை வண்டிப் பாதையொன்றின் விடயத்தில் மையத்திலிருந்து 33 அடி தூரத்துக்குள்ளும் பகிரங்க அடிப் பாதையொன்றின் விடயத்தில் மையத்திலிருந்து 10 அடி தூரத்துக்குள்ளும் உள்ள தனியார் ஆதனமல்லாத எல்லா அரச காணிகளும்.

(6) அடிப்பாதையொன்று அல்லது பாதையொன்று நிர்மாணிப்பதற்காக எல்லைகள் குறிப்பிடப்பட்டு குறித்தொதுக்கப்பட்டுள்ள அரச காணிகள்.

(2)தெருக்களுக்கென ஒதுக்கப்பட்டு ள்ள எல்லா நிலங்களும் அரச ஆதன மென அரச காணி கட்டளைச் சட்டத்தின் 102 ஆம் பிரிவில் கூறப்பட்டுள்ளது. தெருக்களுக்குப் போன்று வேறு கருமங்களுக்கும் ஒதுக்கப்பட்டுள்ள காணிகள் இயன்றளவு எதிர்பார்க்கப்பட்ட கருமத்துக்காக பாதுகாத்து வைத்திருக்கப்படல் வேண்டும். ஒதுக்கப்பட்ட காணியொன்றினை அத்துமீறிக் கைப்பற்றியுள்ள ஒருவரை வெளியேற்ற முடியாதவிடத்து அல்லது அவரை வெளியேற்றுதல் சாத்தியமில்லாதவிடத்து தவிர தெருவொன்றுக்கென ஒதுக்கப்பட்ட காணியொன்று குத்தகை கொடுக்கப்படுதல் ஆகாது.

(3)தெருவொன்றுக்கென ஒதுக்கப்பட்ட காணியொன்று எத்தகைய காரணத்துக்காகவும் கட்டடம் அல்லது வேறேதேனும் நிர்மாணிப்புக்கு அல்லது பயிர்ச்செய்கை நடவடிக்கைக்குக் குத்தகை கொடுக்கப்படுதல் ஆகாது. அரசாங்க அதிபரானவரால் / பிரதேச செயலாரால் தெருவொன்றுக்கென ஒதுக்கப்பட்ட காணி ஒன்று குத்தகை கொடுப்பதை பிரதேசத்தின் பிரதான பெருவீதிகள் பொறியியலாளரின் எதிர்ப்பின்மையை மட்டும் கருத்திற்கொண்டு அக் காணியைக் குத்தகை கொடுத்தல் ஆகாது.

(4)அரச காணி கட்டளைச் சட்டத்தின் 57 ஆம் பிரிவிற்கு கீழ்வரும் ஏற்பாடுகள் சேர்க்கப்பட்டுள்ளன.

(1)ஏதாவதொரு உள்ளூராட்சி சபையொன்றின் பரிபாலன எல்லைக்கு அப்பால் ஒரு பாதைக்காக ஒதுக்கப்பட்ட காணியை அரசாங்க அதிபர் குத்தகைக்கு விடலாம்.

(2)உள்ளூராட்சிச் சபையின் எல்லைகளுக்குள் அமைந்துள்ளதெனினும் உள்ளூராட்சிச் சபையொன்றுக்கு ஒதுக்கப்படாத வீதிகளிற்கான ஒதுக்குக் காணியொன்றை அரசாங்க அதிபர் / பிரதேச செயலாளர் குத்தகைக்கு விட முடியும்.

(3)நகரசபை கட்டளைச் சட்டத்தின் 44 (2) ஆம் பிரிவில் குறிக்கப்பட்ட எந்தவொரு பிரதான பாதைக்கும் அருகாமையில் உள்ளூராட்சிச்சபையின் நிர்வாக எல்லைக்குள் அமைந்துள்ள பாதைக்காக அந்த உள்ளூராட்சிச் சபையின் அங்கீகாரத்துடன் ஒதுக்கப்பட்ட காணியொன்றை அரசாங்க அதிபர் / பிரதேச செயலாளர் குத்தகைக்கு விட முடியும்.

(4)உள்ளூராட்சி சபையின் நிர்வாக எல்லைக்குள் அமைந்துள்ள அதேபோல அந்தச் சபைக்கு ஒப்படைக்கப்பட்ட பாதைக்காக ஒதுக்கப்பட்ட காணியொன்றை அரசாங்க அதியரின்/ பிரதேச செயலாளரின் அங்கீகாரத்துடன் ஓர் உள்ளூராட்சிச் சபை குத்தகைக்கு விட முடியும்.

(5)பெரு வீதிகள், கட்டளைச் சட்டத்தின் தேவைக்காக பிரதான பொது வீதியெனக் கணிக்கப்படுகின்ற பிரதான வீதிக்கு அருகாமையில் அமைந்திருப்பதும் இங்கு மேலே 1, 2, 3 ஆம் பந்திகளில் குறிப்பிட்டுள்ளபடி வீதிக்கென ஒதுக்கப்பட்டதுமான எந்த ஒரு காணியை யும் பெரு வீதிகள் திணைக்களத்தின் பிரதேசத் தலைவரின் அங்கீகாரமும் உள்ளூராட்சிச் சபையின் அங்கீகாரமும் தேவையென விதிக்கப்பட்டிருந்த போதி லும் அந்தச் சபையின் அங்கீகாரத்தை பெற்றுக் கொண்டாலன்றி அரசாங்க அதிபரினால் / பிரதேச செயலாளரால் குத்தகைக்கு விடப்படக் கூடாது.

(6)பெருவீதிகள் பணிப்பாளர் பொறுப்பிலுள்ள பாதைகளுக்காக ஒதுக்கப்பட்ட காணியை குத்தகைக்கு வழங்குகையில் அதற்குரிய படிவத்தை உரிய முறையில் திருத்திப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். அரசாங்க அதிபரினால் / பிரதேச செயலாளரால் ஏனைய ஒதுக்கப்பட்ட காணிகளைக் குத்தகைக்கு வழங்கப்படுகையில் தேவைக்கேற்ப திருத்தியமைக்கப்பட்ட படிவத்தை பயன்படுத்திக் கொள்ள வேண்டும். அத்தகைய குத்தகைப்பத்திரம் ஒருமுறைக்கு ஐந்து வருடத்துக்கு மேற்பட்ட காலத் துக்கு வழங்கப்படக் கூடாது. (முற்றும்)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையில் தமிழர்

## ஒரு முழுமையான வரலாறு (கி.மு.300- கி.பி.2000)

கலாநிதி மு.குணசிங்கம்

234



சேர். ஜேம்ஸ் பீரிஸ்

## பிரித்தானியர் அதிகாரமும் தமிழரின் ஆட்சியுரிமை நிராகரிப்பும் (கி.பி. 1833-கி.பி. 1948)

முதற்தடவையாக சட்ட நிருபண சபையில் கிழக்கு மாகாணத்தைப் பிரதிநிதித்துவப் படுத்தும் வாய்ப்பு மட்டக்களப்பு மக்களுக்கு அளிக்கப்பட்டு தமிழரும் சிங்களவரும் சபையில் பெரும்பாலும் சமநிலையைப் பெற்றனர்.

இலங்கைக் கல்விமான்களுக்காக தமிழரான பொ. இராமநாதன் தெரிவு செய்யப்பட்டமை இப்புதிய சபையின் சுவாரஸ்யமான அம்சங்களுள் ஒன்றாகும். இச்சீர்திருத்தங்கள் நிர்வாகத்தைப் பொறுத்தவரையில் பெரும் மாற்றங்களை ஏற்படுத்தவில்லை என்பதுடன் புதிய அரசியலமைப்பு அரசாங்கத்தின் கொள்கையில் புரட்சிகரமான மாற்றம் எதையும் கொண்டு வரவில்லை.

இருந்தபோதிலும் இந்த அரசியல் சபையில் மேற்கொள்ளப்படவேண்டிய அரசியலமைப்புச் சீர்திருத்தத்துக்கான தேவைகளும் தேர்ந்தெடுக்கப்பட்ட பதவிகளின் மட்டுப்படுத்தப்பட்ட அறிமுகமும் தமிழ் அரசியல் அபிலாசைகளை ஓரளவேனும் ஊக்குவித்திருக்க வேண்டும்.

கல்விபெற்ற இலங்கையின் பிரதிநிதியாக இராமநாதன் தெரிவு செய்யப்பட்டமை தமிழர்கள் மத்தியில் பெருமையை ஏற்படுத்தி ஒருவகையில் அவர்களை தமது அன்றைய நம்பிக்கையற்ற நிலைமைகளையும் தமது மகோன்னதமான கடந்த காலத்தை ஒப்பிட்டுச் சிந்திக்க வைத்தது.

மேலும் தென்னிந்தியாவில் திராவிட தேசிய இயக்கத்தின் வளர்ச்சியும் இந்தியத் தேசியக் காங்கிரஸின் அரசியல் நடவடிக்கைகளும் ரஷ்யாவை ஜப்பான் வெற்றி கொண்டதும் ஏனைய உலக அரசியல் நிகழ்வுகளும் தமிழ் உயர் மட்டத்தினரையும் தமிழ்ச் சமூகத்தையும் அவர்களது அரசியல் செயற்பாடுகளில் தொடர ஊக்குவித்தன.

இருப்பினும் தமிழ், சிங்கள சமூகத்தினர் மத்தியில் மேலாதிக்கம் பெற்றிருந்த மிதவாத உயர்மட்டத்தினர் இலங்கைத் தேசியவாதத்தின் நோக்கங்களுக்குச் சார்பாக இருந்தாரேயன்றி தமிழ், சிங்கள இலக்கியங்களை குறிப்பாக ஊக்குவிக்கவில்லை.

இந்தியாவிலும் இதே வகையில் இந்தியத் தேசியக் காங்கிரஸின் பரந்த நோக்கங்களே முதலிடத்தைப் பெற்றிருந்தன.

இச்சந்தர்ப்பத்தில் தமிழரும் சிங்களவரும் பெரும் மோதல் முரண்பாடுகளின்றி ஒத்திசைந்து வாழ்ந்தனரா? என்பதை ஆராய்வது முக்கியமாகும். பொ.இராமநாதனின் விடயத்தில் சிங்களவர், தமிழர் இருசாராரினாலுமே ஒரு தமிழர் தெரிவானதை நாம் காண்கின்றோம்.

இருந்தபோதிலும்இந்த ஆதரவு கரையோரச் சிங்களவ ரிலும் பார்க்க கண்டிச் சிங்களவரிடத்திலே அதிகமாகக் கிடைத்தது. ஒரு வேளை கே.எம்.டி.சில்வா பின்வருமாறு சொல்வதைப் போல் சாதியப் பகைமையை தொடர்ந்தும் சிங்களவர் மத்தியில் பிரிவை ஏற்படுத்தியதுடன் அவர்களிடையே ஒருமைப்பாடும் கூட்டுறவும் இல்லாமைக்குப் பிரதானமான காரணமாகவும் கருதப்பட்டது.

கண்டிச் சிங்களவருக்கும் கரையோரச் சிங்களவர்களுக்கும் இடையே காணப்பட்ட இறுக்கமான சாதியப் போட்டியே சேர். பொன்னம்பலம் இராமநாதன் வெற்றியடைவதில் முக்கிய பங்கை வகித்திருக்கக்கூடும் என்பதை இக்கூற்று தெளிவாகச் சித்திரிக்கின்றது.

அத்தோடு தமிழரில் அநேகமானோர் ஆங்கிலம் கற்றவர்களாக இருந்ததன் பலனாக அவர்களில் பெரும்பான்மையானோர் வாக்களிக்கத் தகுதி பெற்றிருந்தனர்.

ஆகவே அவர்கள் நிச்சயமாகத் தமிழரான இராமநாதனுக்கே தமது வாக்குகளை அளிக்கும் நிலையில் இருந்திருப்பார்கள்.

இதிலிருந்து தமிழருக்கும் சிங்களவருக்கும் இடையே வெளிப்படையான இனப்பகையோ அல்லது முரண்பாடோ எதுவும் இருக்கவில்லை என நாம் கருத முடியும். ஆயினும் இருபகுதியிலும் நிலவிய உண்மையான நிலையை நாம் தீர்மானிப்பதற்கு இக்கருதுகோளை நாம் மேலும் விரிவாக ஆராய்தல் அவசியம்.

1910 இல் தலைநகர் கொழும்பு முழுவதிலும் இலங்கையின் ஏனைய பிரதேசங்களிலும் விசேடமாக யாழ்ப்பாணத்திலும் கல்விகற்ற இலங்கையர் பிரதிநிதித்துவத்தையிட்டு பல அரசியல் கூட்டங்கள் நிகழ்ந்தன.

இவற்றில் மிகப்பெரிய இரண்டு கூட்டங்கள் கொழும்பில் நடைபெற்றன. இவற்றில் ஒன்று டாக்டர் பெர்னாண்டோவின் ஆதரவாளரால் நவம்பர் 17 ஆம் திகதி பொன்ஜியன் மண்டபத்தில் ஒழுங்கு செய்யப்பட்டது.

மற்றையது இராமநாதனின் ஆதரவாளரால் கார்த்திகை 20 ஆம் திகதி பொதுமக்கள் மண்டபத்தில் கூட்டப்பட்டது.

டாக்டர் பெர்னாண்டோவுக்கான கூட்டத்தில் ஆயிரக்கணக்கான மக்கள் கலந்து கொண்டனர். டாக்டரின் ஆதரவாளர் சிலரால் இராமநாதனுக்கு எதிராக நிகழ்த்தப்பட்ட வெறுப்பைத் தூண்டும் பேச்சுக்களால் இவர்களில் சிலர் கூட்டத்தை விட்டு வெளியேறினர்.

இவர்கள் தமிழர்களாக இருந்திருக்கக்கூடும். ஏனெனில் செய்தியாக வெளியிடப்பட்ட பின்வரும் கூற்றுக்கள் எந்தத் தமிழரையும் கோபமூட்டக் கூடியதாக இருந்தமையாகும்.

முதலாவதாக இராமநாதன் பாரம்பரியமும் பண்பும் கொண்ட இந்துத் தமிழர்தான். ஆனால் அவரில் மேற்கத்தேய வாழ்க்கைப் பாணி எதுவும் தெரியவில்லை. இரண்டாவதாக அவர் (இராமநாதன்) தமிழில் தான் சிந்திக்கிறாரேயன்றி ஆங்கிலத்தில் சிந்திப்பதில்லை.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# சஹ்ரானின் மற்றுமொரு சகா கைது

## ஆசிரியர் எனத் தகவல்



(ஹொரவப்பொத்தான)

குண்டுத் தாக்குதல் சம்பவத்தில் உயிரிழந்ததாகச் சந்தேகிக்கப்படும் தேசிய தௌஹீத் ஜமாத் அமைப்பின் தலைவரான, சஹ்ரானின் நெருங்கிய நண்பரான ஆசிரியர் ஒருவர் ஹொரவப்பொத்தான- முக்கருவெவ பிரதேசத்தில் வைத்து நேற்றுக் காலை கைதுசெய்யப்பட்டுள்ளாரென ஹொரவப்பொத்தான பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

ஹொரவப்பொத்தான பொலிஸ் புலனாய்வு பிரிவுக்குக் கிடைத்த தகவலுக்கமைய குறித்த சந்தேகநபர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

கடந்த 21ஆம் திகதி இடம்பெற்ற தீவிரவாதத் தாக்குதலின் பின்னர் வரகாபொல பிரதேசத்தில் வைத்து கைதுசெய்யப்பட்ட சந்தேகநபருடனும் குறித்த ஆசிரியர் 2004ஆம் ஆண்டு தொடக்கம் நெருக்கமான உறவைப் பேணி வருபவரென்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

முஸ்லிம் தீவிரவாத அமைப்பு ஊடாக பணத்தைப் பெற்று வறிய குடும்பங்களுக்கு உதவும் நடவடிக்கையை குறித்த ஆசிரியர் முன்னெடுத்து வந்துள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (இ-7)

# சீயோன் தேவாலய தற்கொலைத் தாக்குதலின் போது உயிரிழந்தவர்களுக்கு ஆத்மசாந்தி வேண்டி அஞ்சலி





(வாவிக்கரை)

மட்டக்களப்பு, சீயோன் தேவாலயத்தில் தற்கொலைக் தாக்குதலில் உயிரிழந்தவர்களுக்கு ஆத்மசாந்தி வேண்டி மட்டக்களப்பு வாவிக்கரை வீதியிலுள்ள தமிழ் மக்கள் விடுதலைப்புலிகள் கட்சி அலுவலகத்தில் நேற்று முன்தினம் அஞ்சலி நிகழ்வு நடைபெற்றது.

இதில் தமிழ் மக்கள் விடுதலைப்புலிகள் கட்சியின் பொதுச் செயலாளர் பூ.பிரசாந்தன் உட்பட பிரதேசசபை தவிசாளர்கள், மட்டக்களப்பு மாநகரசபை, பிரதேசசபை உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

இதன்போது மட்டக்களப்பு சீயோன் தேவாலயத்தில் தற்கொலை தாக்குதலில் உயிர்நீத்தவர்களின் புகைப்படங்கள் அடங்கிய பதாகைக்கு முன்பாக தீபங்கள் ஏற்றப்பட்டு மலரஞ்சலி செலுத்தப்பட்டது. (இ-7)

# நாட்டில் தஃவா அமைப்புக்களை தடை செய்யும் நிலை ஏற்படலாம்

(கொழும்பு)

நாட்டில் இயங்கும் தஃவா அமைப்புக்களை ஒன்றிணைக்கும் காலம் வந்துள்ளது. இல்லையேல் தஃவா அமைப்புக்கள் சட்டரீதியாக தடைசெய்யப்படும் நிலை உருவாகலாம் என முஸ்லிம் கவுன்ஸில் தலைவர் என்.எம்.அமீன் தெரிவித்துள்ளார்.


கொள்கை ரீதியில் முரண்பட்டுள்ள தஃவா அமைப்புக்களை எவ்வாறு ஒன்றிணைக்கலாம் என ஊடகவியலாளர் கேட்ட கேள்விக்குப் பதிலளிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

நாட்டில் பல்வேறு தஃவா அமைப்புக்கள் இயங்கிவருகின்றன. தஃவா அமைப்புக்கள் சிறு சிறு விடயங்களுக்கெல்லாம் பிரிந்து சென்று புதிதாக அமைப்புக்களை நிறுவிக்கொள்கின்றன.

இவ்வாறு பிரிந்து சென்று உருவாக்கப்பட்ட அமைப்பே தேசிய தௌஹீத் ஜமாத் ஆகும்.

கொள்கை மற்றும் கருத்து முரண்பாடுகளைக் கொண்டுள்ள தஃவா அமைப்புக்களை ஒன்றிணைப்பதற்கு தொடர்ந்தும் அகில இலங்கை ஜம் இய்யத்துல் உலமா சபை முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது.

ஆனால் சில அமைப்புக்கள் தங்கள் கொள்கைகளில் விடாப்பிடியாக இருப்பதாக அறிய முடிகிறது.



என்றாலும் தஃவா அமைப்புக்களை ஒன்றிணைக்கும் காலம் வந்துள்ளது. இல்லையேல் தஃவா அமைப்புக்கள் சட்டரீதியாக தடைசெய்யப்படும் நிலை உருவாகலாம்.

தீவிரவாத கொள்கை கொண்டுள்ள அமைப்புகளைத் தடை செய்ய வேண்டும் என தற்போது உயர்மட்டத்தில் பேசப்பட்டு வருகிறது என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-7)

# facebook. (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 1707

## கயல்விழி

டாக்டர்: வெயில்காலம்... ரொம்ப புழுக்கமா இருக்குது.... ஐஸ்கட்டியிலே இருக்கனும் போல இருக்குது... அவசரப்படாதீங்க... அதெல்லாம்ஒபரேஷனுக்கு அப்புறம் ஐஸ்கட்டி என்ன ஐஸ் பெட்டியிலேயே வச்சிடலாம்



## பவதாரணி

வெளிப்படையாக இருப்பவர்களைவிட வேஷம் போடுபவர்களுக்கு தான் இந்த உலகில் மதிப்பு அதிகம்



## சியானா

வாழ்க்கை!
இது உன் பாதை... உனக்கான பாதை மட்டுமே!
உன்னுடன் பலர் நடக்கலாம்... ஆனால் உனக்காக யாரும் நடக்கமுடியாது



## ரூபினி

உணர்வுகளை மதிக்கத் தெரியாத இடத்தில் கோபுரமாக இருப்பதை விட உணர்வுகளை மதிக்கத் தெரிந்த இடத்தில் குப்பையாக இருப்பது மேல்



## ரோகினி

வலிமை என்பது உடலில் இல்லை!
தைரியத்திலும் வைராக்கியத்திலும் இருக்கிறது



## பவிதா

ஆசைகளைக் கட்டுப்படுத்த புத்தனாய் பிறக்கத் தேவையில்லை... ஏழையாகப் பிறந்தாலே போதும்



நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மூன்று இராணுவச் சீருடைகளுடன் முஸ்லிம் நபர் பொலிஸாரால் கைது

## 18 கடவுச் சீட்டுக்கள், 7 அடையாளஅட்டைகள் மீட்பு

(லுணுகல)

லுணுகல, படாவத்தை பிரதேசத்தில் மேற்கொள்ளப்பட்ட திடீர் சோதனை நடவடிக்கையின் போது மூன்று இராணுவச் சீருடைகள் வைத்திருந்த முஸ்லிம் நபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளதாக ஊவா மாகாண பொறுப்பாளரும் பிரதிப் பொலிஸ்மா அதிபருமான ஜகத் பலிஹத்கார தெரிவித்துள்ளார்.

இதேவேளை சந்தேகநபரின் வீட்டில் மேற்கொள்ளப்பட்ட சோதனை நடவடிக்கையின் போது 18 கடவுச் சீட்டுக்களும் 7 அடையாள அட்டைகளும் மீட்கப்பட்டுள்ளன. 41 வயதுடைய இந்த சந்தேக நபரிடம் மேலதிக விசாரணைகளை லுணுகல பொலிஸார் முன்னெடுத்து வருவதாகவும் தெரியவருகிறது. (இ-7)

# தமிழ்க் கிராமங்களைப் பாதுகாக்க ஊர்காவல் படை அமைக்க வேண்டும்

## வியாழேந்திரன் எம்.பி.வலியுறுத்து

(கொழும்பு)

**தமிழ்க் கிராமங்களைப் பாதுகாப்பதற்கு தமிழ் ஊர்காவல் படையை அமைக்க அரசாங்கம் முன்வர வேண்டுமென மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.வியாழேந்திரன் வலியுறுத்தியுள்ளார். நாட்டில் நிலையான சமாதானமும் அமைதியும் ஏற்படுவதற்கு தமிழ் மக்கள் முழுமையான ஒத்துழைப்பு வழங்கவேண்டும் எனவும் அவர் கோரிக்கை விடுத்துள்ளார்.**

மட்டக்களப்பிலுள்ள அவரது அலுவலகத்தில் நேற்று முன்தினம் பிற்பகல் இடம் பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே இந்த வேண்டுகோளை அவர் விடுத்தார்.

தேவாலயங்கள், ஹோட்டல்களை இலக்கு வைத்து இஸ்லாமிய அடிப்படைவாதிகள் தாக்குதல் நடத்தியுள்ளனர். தௌஹீத் ஜமாத் அமைப்புடன் இணைந்த பயங்கரவாதிகள் இத்தாக்குதலை நடத்தியுள்ளமை ஊர்ஜிதமாகியுள்ளது.

காத்தான்குடியைப் பிறப்பிடமாகக் கொண்ட சஹ்ரான் என்பவரே இந்த அமைப்பின் தலைவராக உள்ளார். இந்தத் தாக்குதல்கள் பற்றித் தெரியாதென சில அரசியல்வாதிகள் கூறுவது பெரும் வேடிக்கையாக உள்ளது.

இது நீண்டகாலமாகத் திட்டமிடப்பட்டு மேற்கொள்ளப்பட்ட தாக்குதல்களாகும். இரண்டு மூன்று வருடங்களுக்கும் மேலாக திட்டமிடப்பட்டிருக்கின்றது.

சில முஸ்லிம் அரசியல்வாதிகள் இதுபற்றி தமக்குத் தெரியாது. நடந்த பின்னரே தமக்குத் தெரியும் என்கின்றனர். ஆனால் இவர்களுடைய வாயாலேயே பாராளுமன்றத்தில் சில கருத்துகளைத் தெரிவித்திருந்ததை நாம் மறக்கவில்லை. முஸ்லிம் இளைஞர்கள் ஆயுதம் ஏந்த நேரிடும் என்றும் சில முஸ்லிம் அரசியல்வாதிகள் எச்சரித்தனர். இவர்களுக்கு எதிராக அரசாங்கம் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை.

இதேவேளை யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற நிகழ்வொன்றில் இராஜாங்க அமைச்சர் திருமதி விஜயகலா மகேஸ்வரன் விடுத



லைப்புலிகள் இருந்திருந்தால் இப்படி நடந்திருக்காது என தெரிவித்ததற்காக தென்னிலங்கையே கொதித்தெழுந்தது.

எது நடந்தாலும் தமிழர்களை சந்தேகக் கண்கொண்டு பார்க்கின்ற நிலைமைதான் தென்னிலங்கையில் இருந்து வந்ததாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# பயணிகளின் பாதுகாப்பு தொடர்பாக சாரதிகள், நடத்துநர்களுக்கு அறிவுறுத்தல்

(கொழும்பு)

உயிர்த்தெழுந்த ஞாயிறு தினத்தன்று நாட்டில் இடம்பெற்ற வெடிப்புச் சம்பவத்தையடுத்து போக்குவரத்து சேவையில் பாதுகாப்பு நடவடிக்கை மேலும் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

பயணிகளை ஏற்றிச் செல்லும் போது கடைப்பிடிக்க வேண்டிய அனைத்து பாதுகாப்பு வேலைத்திட்டம் குறித்து சாரதிகளுக்கும் நடத்துநர்களுக்கும் தெளிவுபடுத்தப்பட்டு இருப்பதாக இலங்கைப் போக்குவரத்து சபையின் தலைமை நடவடிக்கை அதிகாரி நிஹால்ஹிதல்ல ஆராச்சி தெரிவித்துள்ளார்.

பேருந்து பாதுகாப்பு தொடர்பாக போக்குவரத்து அமைச்சில் எமக்கு விசேட அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது.

பயணிகளுக்கு அருகாமையிலுள்ள பொதிகள் தொடர்பில் கூடிய அவதானம் செலுத்துமாறும் நாம் கேட்டுக் கொள்கின்றோம். உரிமையாளர் அற்ற நிலையில் காணப்படும் பொதிகளை வைத்திருக்க வேண்டாம் எனவும் அது தொடர்பாக நடத்துநருக்கு அறிவிக்க வேண்டும். இதே போன்று சந்தேகத்திற்கிடமான நபர்கள் காணப்படுவார்களாயின் அவர்கள் தொடர்பாக பொலிஸ் மற்றும் இராணுவத்திற்கு அறிவிப்பதற்கு தொலைபேசி இலக்கங்களையும் நாம் வழங்கியுள்ளோம்.

பேருந்துகளில் தற்பொழுது பொதிகள் ஏற்றிச் செல்வது தற்காலிகமாக நிறுத்தப்பட்டுள்ளது. பயணிகள் சிறிய பொதிகளை தம்முடன் எடுத்து செல்வதற்கு அனுமதி வழங்கியுள்ளோம். இந்த பொதிகள் பேருந்து நடத்துநர்களின் மேற்பார்வைக்கு வைக்கப்பட்ட பின்னர் எடுத்து செல்ல முடியும் என தலைமை நடவடிக்கை அதிகாரி மேலும் தெரிவித்துள்ளார். (இ-7)

# செய்தித்துளிகள்

## உள்நாட்டு துப்பாக்கியுடன் உடுகமவில் ஒருவர் கைது

(உடுகம)

உடுகம பகுதியில் உள்நாட்டு துப்பாக்கியுடன் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார். உடுகம பொலிஸ் பிரிவிற்குட்பட்ட நாகியாதெனிய பகுதியில் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை பொலிஸாருக்குக் கிடைக்கப்பெற்ற தகவலுக்கமைய மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்புக்களின் போது உள்நாட்டு துப்பாக்கியுடன் குறித்த சந்தேகநபர் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

நாகியாதெனிய பகுதியைச் சேர்ந்த 27 வயதுடைய தெல்பே ஆச்சிகே மனோஜ் பிரியந்த எனப்படுபவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார். பொலிஸார் சந்தேக நபரை உடுகம நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தியுள்ளதுடன், மேலதிக விசாரணைகளையும் முன்னெடுத்து வருகின்றனர். (இ-7)



தேசிய சேமிப்பு வங்கியின் யாழ். இரண்டாம் தர கிளையினரால் வண்ணார்பண்ணை நாவலர் மகா வித்தியாலயத்தில் சிரமதானப்பணியும், மரம் நாட்டு நிகழ்வும் அண்மையில் வங்கியின் முகாமையாளர் அ.துஷ்யந்தி தலைமையில் நடைபெற்றது.

(படம்:- காரைநகர் செய்தியாளர்)

## கல்லூரி கட்டடத்தில் தீ!



மாவனல்லை நகரில் அமைந்துள்ள சிட்டி கல்லூரி கட்டடத்தில் தீ விபத்து ஏற்பட்டுள்ளது.

இக் கட்டடத்தின் நான்காவதுமாடியிலேயே நேற்று முன்தினம் இரவு தீப ரவல் ஏற்பட்டுள்ளது. குறித்த தீ பரவலுக்கான காரணம் வெளி யாக வில்லை. (இ-7)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி ரூபா | மருதனார்மடம் ரூபா | சாவகச்சேரி ரூபா | கிளிநொச்சி ரூபா | கொடிகாமம் ரூபா |
|---|---|---|---|---|---|
| கத்தரிக்காய் | 30 | 50 | 40 | 40 | 40 |
| உருளைக்கிழங்கு | 120 | 120 | 120 | 140 | 110 |
| பச்சைமிளகாய் | 80 | 120 | 80 | 100 | 70 |
| தக்காளி | 80 | 70 | 100 | 120 | 100 |
| மரவள்ளிக்கிழங்கு | 140 | 120 | 140 | 80 | 110 |
| கோவா | 60 | 50 | 60 | 80 | 50 |
| கரட் | 80 | 120 | 100 | 140 | 90 |
| பூசணி | 40 | 50 | 30 | 40 | 30 |
| புடோல் | 60 | 120 | 60 | 80 | 50 |
| வாழைக்காய் | 30 | 70 | 40 | 80 | 60 |
| சின்ன வெங்காயம் | 120 | 90 | 140 | 120 | 120 |
| பெரிய வெங்காயம் | 100 | 100 | 90 | 100 | 100 |
| பாகற்காய் | 160 | 160 | 140 | 120 | 120 |
| வெண்டிக்காய் | 60 | 80 | 80 | 60 | 50 |
| கருணைக் கிழங்கு | 50 | 50 | 60 | 100 | 40 |
| பயற்றங்காய் | 80 | 120 | 80 | 80 | 70 |
| லீக்ஸ் | 80 | 120 | 100 | 120 | 90 |
| பீற்றூட் | 80 | 80 | 120 | 120 | 50 |
| கறிமிளகாய் | 60 | 100 | 100 | 100 | 80 |
| முருங்கைக்காய் | 200 | 260 | 150 | 160 | 100 |
| போஞ்சி | 150 | 200 | – | 200 | 100 |
| கத்தரிதம்புள்ள | 20 | 50 | – | 40 | 20 |
| கீரை - 1பிடி | 30 | 30 | 30 | 40 | 20 |
| தேசிக்காய் | 350 | 200 | 300 | 300 | 270 |
| தேங்காய் (ஒன்று) | 40 | 45 | 30 | 30-50 | 35 |
| இராசவள்ளி | 160 | 250 | 140 | 160 | 100 |
| வெங்காயப்பூ | 220 | – | – | 160 | – |
| முள்ளங்கி | 60 | 80 | 80 | 80 | 30 |
| பொன்னாங்காணி | 40 | 30 | 40 | 40 | 40 |
| வல்லாரை | 15 | 40 | 20 | 20 | 20 |
| ஈரப்பலா | 60 | – | 50 | – | 100 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# அதிர்ஷ்ட தேவதை



சுவீடன் நாட்டில் உள்ள சிறிய நகர் ஒன்றில் "பிளிம்போ' என்று ஒரு இளைஞன் இருந்தான். அவன் மிகவும் சுறுசுறுப்பானவன் புத்திசாலி, அந்நகர மக்கள் எல்லோரும் அவனை அதிர்ஷ்டக்காரன் என்றே அழைத்தனர்.

ஏனென்றால் பிளிம்போ ஒரு வேலைக்கு கூட செல்லமாட்டான்.

அதிர்ஷ்டத்தில் மிகுந்த நம்பிக்கை கொண்டிருந்தான். அதிர்ஷ்ட தேவியின் அருளைப் பற்றி பார்ப்பவர்களிடம் எல்லாம் பேசினான். அதிர்ஷ்ட தேவியின் அருளிருந்தால் ஒருவன் உழைக்காமலிருந்தால் கூட உலகிலேயே மிகப் பெரிய பணக்காரன் ஆகலாம் என்று கூறி வந்தான்.

இதனால் அவன் தந்தை அவனிடம் மிகுந்த கோபம் கொண்டார். ஒருநாள் அவனை நன்றாக திட்டி வீட்டை விட்டே விரட்டி விட்டார்.

"அதிர்ஷ்ட தேவதையின் அருளால் பணக்காரனாகத் திரும்புவேன்" என்று சபதம் செய்த பிளிம்போ ஊரை விட்டுப் புறப்பட்டான்.

ஒரு படகில் ஏறி கடலில் பயணம் செய்தான். படகு நடுக் கடலில் சென்றபோது புயலடித்தது. மழை பெய்தது. திடீரென படகு கவிழ்ந்தது.

பிளிம்போ தத்தளித்தான். சிறிது நேரத்தில் கடல் நீரில் மயங்கி மூழ்கினான்.

மயக்கம் தெளிந்து எழுந்த பொழுது ஒரு சிறு தீவில் ஒதுங்கி இருந்தான் பிளிம்போ.

எழுந்து களைப்புடன் மெல்ல நடந்தான். பசியும், தாகமும் வயிற்றைப் புரட்டியது. கால் போன போக்கில் நடந்தான். வழியில் கிடைத்த பழங்களையெல்லாம் தின்றான். எல்லா பழங்களும் சுவையுடன் இருந்தன.

இப்படி ஒருவார காலம் பிளிம்போ அந்த தீவில் பழங்களை தின்றபடி வாழ்ந்தான்.

ஒருநாள் அதிகாலையில் ஒரு புதர் அருகில் மிகவும் தெளிந்த நீரோடை ஒன்றிலிருந்தது. மிகுந்த தாகத்திலிருந்த பிளிம்போ ஓடையிலிறங்கி நீரைப் பருகினான்.

என்ன மாயம்? திடீரென பிளிம்போ ஒரு குரங்காக மாறி விட்டான்.

கவலையுடன் கரை ஏறிய பிளிம்போ மனம் அப்போதும், "அதிர்ஷ்ட தேவியின் அருளால் தான் இது நடந்தது. ஏதோ காரணம் இதிலுண்டு" என்று கூறிக் கொண்டு விறுவிறுவென்று அருகிலிருந்த மரங்களில் ஏறினான்.

விரும்பிய பழங்களைப் பறித்து உண்டான். பின் மேலும் சிறிது நேரம் மரங்களில் தொற்றியபடி அலைந்தான். திடீரென குரங்காக இருந்த பிளிம்போ கண்களில் ஒரு நீலநிற மரம் தென்பட்டது. அதில் நீலநிறப் பழங்கள் சில இருந்தன.

அந்த மரத்திற்கு தொற்றிப் பாய்ந்தான் பிளிம்போ. சில நீலப் பழங்களைப் பறித்துத் தின்றான். அவை அபூர்வ சுவையுடன் இருந்தன. பிளிம்போ அதைத் தின்ற மறு நிமிடமே முன்பு போல மனித உருவம் பெற்று மரத்தின் மேல் அமர்ந்திருந்தான். உடனே மளமளவென்று சில நீலப் பழங்களைப் பறித்து தன் சட்டையியலிருந்த பையில் போட்டுக் கொண்டான். பின் மளமளவென்று மரத்தை விட்டு இறங்கினான். முன்பு தான் நீர் பருகி குரங்காக மாறிய நீரோடையை சென்று அடைந்தான்.

ஒரு சிறு மூங்கில் குழாயை எடுத்தான். அதில் நிறைய ஓடை நீரை நிரப்பிக் கொண்டான். பின் அங்கிருந்து சில மரப்பலகைகளைக் கொண்டு ஒரு சிறு படகு செய்தான். அதில் நீலப் பழங்களையும், ஓடை நீரடங்கிய மூங்கில் குழாய்களையும் எடுத்துக் கொண்டு கிளம்பினான். மறுநாள் விடியும் நேரத்தில் அவன் ஒரு நாட்டின் கரையை கண்டான்.

அது தங்கப்பாளம் என்ற நாட்டின் கடற்கரை. அங்கு வந்திறங்கிய பிளிம்போ நீலப் பழங்களையும், மூங்கில் குழாயையும் எடுத்துக் கொண்டு ஊருக்குள் புகுந்தான். அந்நாட்டு மக்கள் வழங்கிய உணவை உண்டான்.

வழியில் ஒரு நந்தவனத்தை கண்டான். அங்கு பூக்களும், கனிகளும், ஏராளமாக இருந்தன. அவற்றின் மணமும், நிழலும் பிளிம்போவை மயக்கியது.

எனவே, நந்தவனத்தில் புகுந்தான். அங்கிருந்த ஒரு குளக் கரையில் படுத்தான். திடீரென அடித்த காற்றில் பிளிம்போ தன்னருகில் வைத்துவிட்டு உறங்கிய மூங்கில் குழாய் கடகடவென உருண்டு குளத்தில் விழுந்தது. உடனே அதன் உள்ளிருந்த நீர் முழுவதும் குளத்தினுள் கொட்டி விட்டது.

முதலில் திடுக்கிட்ட பிளிம்போ பின்பு, "இதுவும் அதிர்ஷ்ட தேவியின் செயலே," என நினைத்தபடி எழுந்து சென்று பக்கத்திலிருந்த மர நிழலில் படுத்து உறங்கிவிட்டான். அப்படியே இரவாகிவிட்டது.

மறுநாள் விடிந்தது. திடீரென நந்தவனத்தினுள் பெண்கள் அலறியபடி ஓடும் சத்தம் கேட்டது. உடனே பிளிம்போ விழித்தான். அந்தப் பெண்களிடம் ஓடி நடந்ததைவிசாரித்தான்.

அவர்கள், "இந்நாட்டு இளவரசி இஸ்பார் மிகுந்த அழகி. இப்போது எங்களுடன் நந்தவனத்திற்கு வந்தாள். இந்தக் குளத்துநீரில் இறங்கினாள். நீர் அவள் மீது பட்டதுமே குரங்காகி விட்டாள்" என்று கூறி அழுதனர்.

செய்தி அரசர் காதிற்கு எட்டியது. அரசனும், அரசியும் நந்தவனத்திற்கு ஓடி வந்தனர். தங்கள் மகள் குரங்காக இருப்பதைப் பார்த்து கண்ணீர் வடித்தழுதனர். பின் குரங்கை பிடித்துக் கொண்டு அரண்மனைக்கு சென்றனர்.

மறுநாள் ஊர் முழுக்க அரசர் செய்தி அறிவித்தார். இளவரசி இஸ்பார் திடீரென குரங்காக மாறிவிட்டாள். அவளை மீண்டும் பெண் உருவாக மாற்றுபவர்களுக்கு இளவரசி இஸ்பாரை மணம் செய்து வைப்பார் அரசர். அதோடு தங்கப்பாள நாட்டை ஆளும் பொறுப்பும் தரப்படும் என அறிவித்தார்.

உடனே பிளிம்போ. நேராக அரண்மனைக்குச் சென்றான். தன்னுடன் நீலப் பழத்தையும் எடுத்துச் சென்றான். அரசனிடம் இளவரசி இஸ்பாரை பெண்ணுருவில் மாற்றித் தருவதாக கூறினான். அரசர் ஒப்புக் கொண்டார்.

குரங்கு வடிவிலிருந்து இளவரசி இஸ்பாரை கொண்டு வந்து பிளிம்போ முன் நிறுத்தினர். பிளிம்போ உடனே தன் மடியிலிருந்த நீலப் பழத்தை அவளிடம் தந்தான். குரங்காக இருந்த இஸ்பார் அதனை வெடுக்கெனப் பறித்து.கடித்துத்தின்றாள்.

மறுநிமிடம் பெண்ணாக மாறிவிட்டாள். அரசரும், அரசியும் மகிழ்ந்தனர். சொன்னபடி பிளிம்போவிற்கே இஸ்பாரைத் திருமணம் செய்து தந்தார் அரசர்.

பிளிம்போ தங்கப்பாள நாட்டின் அரசனானான். விபரத்தை அவன் நகர மக்களும் அறிந்தனர். அவன் பெற்றோர் தங்கப்பாள நாட்டிற்கே வந்தனர். மகனுடன் அரண்மனையிலேயே மகிழ்வுடன் வாழ்ந்தனர்.

பிளிம்போ இஸ்பார் தம்பதிக்கு ஒரு பெண் குழந்தை பிறந்தது. அதற்கு இருவரும் அதிர்ஷ்ட தேவி என்று பெயரிட்டு மகிழ்ந்தனர்.

சுவீடன் நாட்டு மக்கள் இக்கதையை இன்றும் பிள்ளைகளுக்கு சொல்கின்றனர். அதோடு அதிர்ஷ்டத்தில் அதிக நம்பிக்கையும் வைத்துள்ளனர்.

குட்டீஸ்... அதற்காக அதிர்ஷ்டத்தில் கண்மூடித்தனமாக நாம் நம்பிக்கை வைக்கலாகாது. அதிர்ஷ்டம் ஒரு பக்கம் இருந்தாலும், முயற்சியும் தேவை. அப்போதுதான் வாழ்வில் நாம் முன்னேற முடியும்.

## குறும்பு குரங்கு



பார் பார் பார்
ஓடி ஆடும் குரங்குகளை பார்.
குட்டி குட்டி குரங்குகள்,
அம்மா வயிற்றில் தொங்குதே.

சுற்றி சுற்றி வருகுதே.
எல்லோரையும் மிரட்டுதே.
அந்த பாப்பா கையிலே.
பழத்தை பிடுங்கி போகுதே.

அந்த அக்காள் கையிலே.
இருக்கும் பைகளை பிடுங்குதே.
அச்சச்சோ ! அந்த கூடையில்.
இருந்த பொருட்களை எடுத்து.

வெளியே வீசுதே. இத்தனை
குறும்புகள் செய்யுதே, அடிக்க
கையை ஓங்கினால், மரத்தில்
ஏறி மிரட்டுதே. விட்டு விட்டு
நடந்தாலும் மீண்டும் நம்மை தொடருதே.

## பொது அறிவு துணுக்குகள்

- ஐரோப்பாவில், மரங்களில் வாழும் தவளைகள் அதிகம். இவை குரங்குகளைப் போல ஒரு கிளையிலிருந்து மற்றொரு கிளைக்குத்தாவும்.
- நெருப்புக்கோழி, தனது உணவைச் செரிக்க வைப்பதற்காக சிறு சிறு கற்களை விழுங்கும். இது, மற்ற பறவையினங்களில் காணப்படாத விநோதமான செயல்.
- நல்ல நிலையில் உள்ள மனிதரின் கண்கள், சுமார் ஒரு கோடிக்கும் மேற்பட்ட வண்ணங்களின் வேறுபாடுகளை அறியக்கூடியது.
- பிரான்ஸ் நாட்டில் உள்ள பிரபலமான ஈபிள் கோபுரத்தை வடிவமைத்தவர், கஸ்டவ் ஈபிள். இவர்தான் அமெரிக்காவில் உள்ள சுதந்திர தேவி சிலையை வடிவமைத்தவர்.
- ஒரு மனிதனின் சராசரி உயரம், அவனுடைய தலையின் உயரத்தைப்போல் சுமார் ஏழரை மடங்கு இருக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"நம்பிக்கை, சகிப்புத்தன்மை, துணிவு, உறுதி" ஆகிய நான்கு ஆயுதங்களால் நாம் விரும்பும் எதனையும் சாதித்துவிடலாம். ~ தமிழ்வாணன்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

# போதிதர்மர் சீனாவுக்குப் பலமென்றால் பிரபாகரன் இலங்கைக்கு பலமல்லவா!

தமிழீழ விடுதலைப் புலிகளைப் பற்றி இப்போது அதிகமாகப் புகழ்ந்து பேசுபவர்கள் சிங்கள மக்களும் சிங்கள அரசியல் தலைவர்களும் என்றால் அது மிகையன்று.

2009ஆம் ஆண்டு மே மாதம் 18ஆம் திகதி வன்னிப் போர் முடிவுற்றது.

போர் முடிவுற்றதும் போர் வெற்றி விழாக் கொண்டாட்டத்தை நடத்துவதில் அன்றைய ஆட்சியாளர்கள் மும்முரமாக ஈடுபட்டனர்.

பல்லாயிரக்கணக்கான தமிழ் மக்களைக் கொன்றொழித்துவிட்டு, தமிழ்க் குழந்தைகளை யாருமற்ற அநாதைகளாக்கிவிட்டு, வெற்றி விழாக் கொண்டாட்டம் செய்கின்ற மனநிலை உடையவர்களாக சிங்கள ஆட்சியாளர்கள் இருந்தார்கள் என்பதை எண்ணிப் பார்க்கும் போது கன்னத்தின் ஓரங்கள் நனைந்து கொள்கின்றன.

தமிழ் என்ற ஒரே காரணத்துக்காக, தமிழ் மக்களையும் தமிழ்க் குழந்தைகளையும் கொன்றொழித்த கொடூரம் சகிப்பதற்குரியதல்ல.

தவிர, விடுதலைப் புலிகளைத் தோற்கடித்து விட்டோம்; விடுதலைப் புலிகளை அழித்து விட்டோம் என்ற திமிர்த்தனத்துடன் ஆட்சியாளர்களும் படைத்தரப்பும் நடந்து கொண்டதை தமிழ் மக்கள் ஒருபோதும் மறக்கமாட்டார்கள்.

இவை ஒருபுறமிருக்க, விடுதலைப் புலிகள் கொள்கையுடன் போராடியவர்கள் என்று ஜனாதிபதி மைத்திரியும் விடுதலைப் புலிகள் பொதுமக்களை இலக்குவைத்துத் தாக்குதல் நடத்தவில்லை என்று முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவும் இப்போது கூறியுள்ளனர்.

இவ்வாறு விடுதலைப் புலிகளை தென் பகுதி ஆட்சியாளர்களும் அரசியல்வாதிகளும் சிங்கள மக்களும் இப்போது புகழ்ந்து பேசுவது என்பது ஒரு தொடக்கப் புள்ளி மட்டுமே.

எதிர்காலத்தில் எதற்கும் விடுதலைப் புலிகளை உதாரணம் காட்டி அவர்கள் உயர்வானவர்கள், இலட்சிய வேட்கை கொண்டவர்கள் என்று இந்த நாட்டின் பெரும்பான்மையினர் அடிக்கடி பேசுவது தவிர்க்க முடியாததாகும்.

இங்கு நாம் கேட்பதெல்லாம், உலகம் முழுவதும் விடுதலைப் புலிகள் என்ற அமைப்பை அதன் தலைவனைப் புகழ்ந்து பேசியது.

அந்த அமைப்பின் கட்டமைப்பு, நிர்வாக ஒழுங்கு, ஒழுக்கம், உரிமை மீது கொண்ட பற்றுறுதி, புலனாய்வு நுட்பம், மிக உயர்ந்த போர்த்திறன் எனப் பல விடயங்களைச் சுட்டிக் காட்டி விடுதலைப் புலிகளை உலகநாடுகள் புகழாரம் சூட்டியபோது; இந்த நாட்டின் எதிர்காலப் பாதுகாப்புக்குரியவர்களாக விடுதலைப் புலிகளை ஆக்க வேண்டும், அவர்களுடன் சமரசம் செய்து அவர்களையும் இந்த நாட்டின் இறைமைக்கான பாதுகாவலர்களாக மாற்ற வேண்டும் என்று தென்பகுதிப் பெரும்பான்மை நினைக்கவில்லையே. இது ஏன்?

இந்தியாவிலிருந்து சீனாவுக்குச் சென்ற போதிதர்மரைத் தங்களோடு வைத்திருக்க வேண்டும். அதுவே தங்கள் நாட்டுக்கான பலம் என்று சீனர்கள் நினைத்தார்கள்.

புலிகளின் தலைவர் பிரபாகரன் இந்த நாட்டின் ஒரு பெரும் பலம் என்று நீங்கள் நினைத்திருந்தால், இன்று இந்த நாட்டுக்கு ஏற்பட்டுள்ள பயங்கரம் கிட்ட நெருங்கியிருக்குமா? அல்லது இலங்கையில் தாக்குதல் நடத்த வேண்டுமென்ற நினைப்புத்தான் மதத் தீவிரவாதத்துக்கு ஏற்பட்டிருக்குமா என்ன?

அழிப்பதுதான் தீர்வு என்றால், இப்போது எழுந்துள்ள பிரச்சினை எதற்கானது என்பதை ஒரு கணம் சிந்தியுங்கள்.

# இலங்கையில் தொடர் குண்டுவெடிப்பு; கேரளாவில் 3 பயங்கரவாதிகள் கைது

(கேரளா)

கடந்த 21ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற தொடர் குண்டு வெடிப்புடன் தொடர்புடைய, ஐ.எஸ்., பயங்கரவாதிகள், கேரளாவில் பதுங்கியிருப்பதாக அதிர்ச்சிதகவல்கள் வெளியாகியுள்ளன.

என்.ஐ.ஏ., எனப்படும், தேசிய புலனாய்வு அமைப்பைச் சேர்ந்த அதிகாரிகள், கேரளாவில் நடத்திய அதிரடி சோதனையில், மூன்று பேர் கைது செய்யப்பட்டனர்.

கடந்த 21 ஆம் திகதி உயிர்ப்பு ஞாயிறு தினத்தில் இலங்கையில், கிறிஸ்தவ தேவாலயங்கள் மற்றும் ஹோட்டல்கள் உட்பட எட்டு இடங்களில், அடுத்தடுத்து சக்திவாய்ந்த தற்கொலைக் குண்டுகள் வெடித்தன.

இதில், 250இற்கு மேற்பட்டோர் பலியாகியுள்ளதுடன் 400 இற்கும் மேற்பட்டோர் படுகாயம் அடைந்து, வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இதையடுத்து, இலங்கையில் அவரகால நிலை பிரகடனப்படுத்தப்பட்டு, குண்டு வெடிப்பு தொடர்பாக, இராணுவத்தினரும் பொலிஸாரும் தீவிர விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

இந்த தாக்குதல் குறித்து, இந்திய உளவுத் துறை, இலங்கைக்கு முன் கூட்டியே தகவல் அளித்துள்ளது. இந்திய உள்துறை அமைச்சகமும் எச்சரித்துள்ளது.

மேலும், பயங்கரவாத அமைப்பின்தலைவர்ஹாஷிம், கேரளா, தமிழகம், கர்நாடகா ஆகிய மாநிலங்களில், இளைஞர்களை மூளைச் சலவை செய்து, ஐ.எஸ்.,பயங்கரவாத அமைப்பில் சேர வைத்துள்ளமை தெரியவந்துள்ளது.

இந்நிலையில், "இலங்கை தாக்குதலில் தொடர்புடைய, ஐ.எஸ்., பயங்கரவாதிகள், கேரளாவில் பதுங்கியிருக்கலாம்" என, என்.ஐ.ஏ., சந்தேகித்தது. இதையடுத்து, கேரள மாநிலம், காசர்கோடு, பாலக்காடு பகுதிகளில், என்.ஐ.ஏ., அதிகாரிகள், அதிரடி சோதனை நடவடிக்கைகளை மேற்கொண்டனர்.

இது குறித்து என்.ஐ.ஏ., அதிகாரிகள் தெரிவிக்கையில்,

ஐ.எஸ்., அமைப்புடன் தொடர்பு வைத்துள்ளதாக சந்தேகிக்கப்படும், காசர்கோட்டை சேர்ந்த இருவரது வீடுகள் மற்றும் பாலக்காட்டை சேர்ந்த ஒருவரின் வீட்டில், சோதனை நடத்தப்பட்டது. அங்கு, பல, "சிம் கார்ட்கள், மெமரி கார்ட்கள், பென்ட்ரைவ்கள்" ஆகியவற்றை கைப்பற்றியுள்ளோம். மேலும், அரபி மற்றும் மலையாளத்தில் எழுதப்பட்டிருந்த குறிப்புகளையும் கைப்பற்றினோம்.

இலங்கை குண்டு வெடிப்பின் சூத்திரதாரி, சஹ்ரான் ஹஷிமின் பேச்சுக்கள் அடங்கிய, "டிவிடி" மற்றும் புத்தகங்களை கைப்பற்றியுள்ளோம். சம்பவத்துடன் தொடர்புடைய மூன்று பேரையும் கைது செய்து, விசாரித்து வருகிறோம்என அதிகாரிகள்மேலும தெரிவித்துள்ளனர். (7)

# வவுனியா பேருந்து தரிப்பிடத்தில் மர்மப் பொதியினால் பரபரப்பு

## 30 நிமிடங்கள் போக்குவரத்து தடை

(குருமன்காடு)

வவுனியா ஏ9 வீதி, சாந்த சோலை சந்தியில் உள்ள பேருந்து தரிப்பிடத்தில் காணப்பட்ட மர்மப் பொதி ஒன்றினால் அப்பகுதியில் ஒரு மணி நேரம் பதற்றமான நிலைமை காணப்பட்டதுடன், 30 நிமிடங்கள்ஏ9 வீதிபோக்குவரத்தும் தடைப்பட்டது.

ஏ9 வீதி சாந்தசோலை சந்தியில் உளள பேருந்து தரிப்பிடத்தில் மர்மப் பொதி ஒன்று காணப்படுவதாக 3.15 மணி யளவில் இராணுவத்திற்கு தகவல் வழங்கப்பட்டது. இதனையடுத்து அப்பகுதியில் குண்டு செயலிழக்கச் செய்யும் இராணுவத்தினர் வரவழைக்கப்பட்டனர்.

இதனால் அப்பகுதியில் ஒரு மணி நேரம் பதற்றமான நிலை காணப்பட்டது.

ஏ9 வீதி போக்குவரத்தினை தடை செய்த இராணுவத்தினர் குண்டு செயலிழக்கச் செய்யும் படைவீரர்களின் உதவியுடன் குறித்த மர்மப் பொதியை சோதனை செய்தனர். இதன்போது குறித்த பொதியில் வெடிபொருட்கள் எவையும் இல்லை என உறுதிப்படுத்தப்பட்டது. இந்நிலையில் குறித்த பொதியினை அவ்விடத்தில் வைத்து விட்டு யாழ் நோக்கிச் சென்ற பேருந்து ஒன்றினை தவறவிட்டதால் துரத்திச் சென்றதாகவும், அப் பொதி தன்னுடையது எனவும் ஒரு இளம் குடும்பத்தினர் வருகை தந்து குறித்த பொதியினை இராணுவத்தினரிடம் உரிமை கோரினர். இதனையடுத்து அவர்களை கடுமையாக எச்சரித்த இராணுவத்தினர் குறித்த பொதியை அவர்களிடம் ஒப்படைத்தனர்.

இச்சம்பவம் காரணமாக ஏ9 வீதி போக்குவரத்து சுமார் அரை மணிநேரம் தடைப்பட்டிருந்தது.

இதேவேளை, வீதி ஓரங்களில் எந்தவொரு பொதியினையும் வைக்க வேண்டாம் எனவும், வாகனங்களை அடையாளப்படுத்தாது நிறுத்த வேண்டாம் எனவும் இராணுவத்தினர் அறிவுறுத்தினர். (ம-250)

# நிலக்கீழ் தளவீடு கைது செய்யப்பட்டவர் பிணையில் விடுவிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் ஒஸ்மானியா கல்லூரி வீதியில் பச்சைப் பள்ளிவாசலுக்கு அண்மையில் உள்ள வர்த்தகரின் வீடொன்றுக்குள் நிலக்கீழ் தளம் கண்டறியப்பட்டமையை அடுத்து கைது செய்யப்பட்டவர் யாழ்ப்பாணம் நீதவான் நீதிமன்றால் பிணையில் விடுவிக்கப்பட்டார்.

சந்தேகநபர் நேற்று திங்கட்கிழமை யாழ்ப்பாணம் நீதவான் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்டார்.

இந்த விசாரணையின் போது "அந்த வீட்டில் அமைக்கப்பட்டிருந்த நிலக்கீழ் தளம் பழமையானது. 30 வருடங்களுக்கு மேற்பட்டது. அந்த நிலக்கீழ் தளத்துக்குள் இருந்து எந்தவிதமான பொருட்களும் மீட்கப்படவில்லை.

தற்போது குடியிருப்பவரான சந்தேகநபருக்கு அந்த நிலக்கீழ் தளம் பற்றி எதுவுமே தெரியாது. அதனால் அவரைப் பிணையில் விடுவிக்க வேண்டும் என்று சட்டத்தரணி வி.கௌதமன் மன்றுரைத்தார்.

பொலிஸாரின் விண்ணப்பம் மற்றும் சந்தேகநபர் சார்பான சமர்ப்பணத்தை ஆராய்ந்த யாழ்ப்பாணம் நீதிமன்ற நீதவான் அந்தோனிசாமி பீற்றர் போல், சந்தேகநபரை 50 ஆயிரம் ரூபாய் சரீர பிணையில் விடுவிக்க உத்தரவிட்டார். (ம-3)

# இலங்கைக்கு பயணிப்பதை தவிர்க்குமாறு சுவிஸ் பிரஜைகளுக்கு அறிவுறுத்தல்

(ஜெனிவா)

இலங்கைக்குப் பயணிப்பதை தவிர்க்குமாறு சுவிஸ் பிரஜைகளுக்கு அறிவுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது.

சுவிஸ் வெளிவிவகார அமைச்சால் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையிலேயே இவ்வாறு அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது.

கடந்த 21ஆம் திகதி உயிர்த்த ஞாயிறன்று கிறிஸ்தவ தேவாலய ங்களில் ஒன்று கூடி வழிபாட்டில் ஈடுபட்டிருந்த மக்கள் மீது தற் கொலை குண்டுதாரிகளால் மேற்கொள்ளப்பட்ட தாக்குதலில் 250 இற்கும் மேற்பட்டோர் உயிரிழந்திருந்தனர்.

இந்தத் தாக்குதல்கள் கிறிஸ்தவ தேவாலயங்களில் மட்டுமல்லாது நட்சத்திர விடுதிகளிலும் மேற்கொள்ளப்பட்டது. இதன் போது இலங்கை மக்கள் மட்டு மல்லாது வெளிநாட்டவர்களும் உயிரிழந்திருந்தனர்.

இதனையடுத்து தொடர்ந்தும் இலங்கை மீது தாக்குதல்கள் நடத்தப்படலாமென எச்சரிக்கை விடுக்கப்பட்டதுடன், அவ்வாறான சம்பவங்களே தினமும் அரங்கேறிய வண்ணமுள்ளன.

இந்நிலையிலேயே சுவிஸ் பிரஜைகளுக்கு இவ்வாறு அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது.

இலங்கையில் பாதுகாப்பு நடவடிக்கைகள் குழப்பம் வாய்ந்ததாகவுள்ளது எனவும், இதன் பரிணாமம் நிச்சயமற்றதாக உள்ளது எனவும் சுவிஸ் வெளிவிவகார அமைச்சினால் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இங்குள்ள அசாதாரண சூழல் கட்டுக்குள் கொண்டு வரப்படும் வரையில் சுவிஸ் குடிமக்கள் இலங்கை பயணங்களை இரத்து செய்யுமாறும் அந்த அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (இ-7)

# சுவாமி விவேகானந்தரின் சிந்தனைத்துளிகள்



- வாழ்வில் லட்சியம் ஒன்றைத் தேர்ந்து எடுத்து, கனவு காணுங்கள். நீங்கள் எடுத்து வைக்கும் ஒவ்வொரு அடியும் அதை நோக்கியதாக அமையட்டும்.
- நம் தேசத்தின் அடிப்படையே ஆன்மிகம் தான். இதை விட்டு, மேலைநாட்டு நாகரிகத்தின் பாதையி சென்றால், மூன்றே தலைமுறையில் நம் பண்பாடு அழிந்து போகும்.
- நினைத்த வெற்றி கிடைக்க வேண்டுமென்றால், எதிலும் ஆழமான ஈடுபாடும், அர்ப்பணிப்பு உணர்வு வேண்டும்.
- லட்சியத்தை அடிக்கடி மாற்றக் கூடாது. ஒன்றை ஏற்று கொண்ட பின், அதை புறக்கணிப்பது கூடாது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மெஸ்சியின் சாதனை தொடர்கிறது

## லாலிகா பட்டத்தை வென்றது பார்சிலோனா





பார்சிலோனாவுக்கு இந்த பட்டத்தை வென்று கொடுத்து, அதிக முறை லா லிகா கோப்பையை அந்த அணிக்கு வென்று கொடுத்தவர் என்ற சாதனையை படைத்துள்ளார். (க)

நடப்பு சம்பியன் பார்சிலோனா அணி 26ஆவது முறையாக லா லிகா சம்பியன் பட்டத்தை கைப்பற்றியுள்ளது.

ஸ்பெயின் நாட்டில் ஆண்டு தோறும் லா லிகா கால்பந்து தொடர் நடத்தப்பட்டு வருகிறது. இந்த சீசனில் 20 கிளப் அணிகள் பங்கேற்று விளையாடி வருகின்றன.

இந் நிலையில் நேற்று முன் தினம் நடந்த ஆட்டம் ஒன்றில், நடப்பு சம்பியனான பார்சிலோனா அணி 1-0 என்ற கோல் கணக்கில் லெவன்டி அணியை வீழ்த்தியது.

அந்த அணியில் நட்சத்திர வீரரான லயோனல் மெஸ்சி 26வது நிமிடத்தில் கோல் அடித்தார். பார்சிலோனா இதுவரை விளையாடிய 35 ஆட்டங்களில் 25 வெற்றி, 2 தோல்வி, 8 சமநிலை என 83 புள்ளிகளுடன் முதலிடத்தில் உள்ளது.

இரண்டாவது இடத்தில் அட்லெண்டிகோ மாட்ரிட் அணியும், ரியல் மாட்ரிட் அணி 3வது இடத்திலும் உள்ளன. பார்சிலோனா அணி இன்னும் 3 லீக் ஆட்டங்கள் எஞ்சியுள்ள நிலையில், சம்பியன் பட்டத்தை உறுதி செய்துள்ளது.

எனவே, அந்த அணி கைப்பற்றிய 26வது லா லிகா சம்பியன் பட்டம் இதுவாகும். அத்துடன் மெஸ்சி 10வது முறையாக

அன்பு வாசகர்களே!

உங்கள் பிரதேச விளையாட்டுச் செய்திகளை Valampurisp@gmail.com அல்லது 076 636 3378 என்னும் Viber இலக்கத்துக்கு அனுப்பி வையுங்கள்.

உங்களை உலகறியச் செய்ய நாம் தயார்

# ரஸலின் அதிரடி ரசிக்க வைத்தது;

## வெற்றியின் மகிழ்ச்சியில் திளைத்த கார்த்திக்



ஐ.பி.எல். போட்டியில் மும்பை அணியை வீழ்த்தி கொல்கத்தா 5வது வெற்றியை பெற்றது.

ஈடன் கார்டன் மைதானத்தில் நடந்த இந்த ஆட்டத்தில் முதலில் விளையாடிய கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணி நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்களில் 2 விக்கெட் இழப்புக்கு 232 ஓட்டங்கள் குவித்தது.

ஆந்த்ரே ரஸலின் ஆட்டம் அதிரடியாக இருந்தது. அவர் 40 பந்தில் 80 ஓட்டங்களும் (6 பவுண்டரி, 8 சிக்சர்), உஸ்மான் கில் 45 பந்தில் 76 ஓட்டங்களும்(6 பவுண்டரி, 4 சிக்சர்), கிறிஸ் லின் 29 பந்தில் 54 ஓட்டங்களும் (8 பவுண்டரி, 2 சிக்சர்) எடுத்தனர். ஹர்திக் பாண்டியா, ராகுல் சாஹர் தலா 1 விக்கெட் எடுத்தனர்.

இதன் மூலம் கொல்கத்தா அணி வெற்றி பெற்றது.

கொல்கத்தா அணி தொடர்ந்து ஏற்பட்ட தோல்விக்கு முற்றுப் புள்ளி வைத்தது.

அந்த அணி பெற்ற 5ஆவது வெற்றியாகும். இதன்மூலம் அந்த அணி 'பிளேஓப்' சுற்று வாய்ப்பில் தொடர்ந்து நீடிக்கிறது.

வெற்றி குறித்து கொல்கத்தா நைட்ரைடர்ஸ் அணியின் தலைவர் தினேஷ் கார்த்திக் கூறுகையில்,

ஆந்த்ரே ரஸல் 3ஆவது வீரராக முன்னதாக களம் இறக்கப்பட்டது நல்ல முடிவாகும். அவர் ஒரு சிறப்பு மிக்க வீரர் அவரது வளர்ச்சியை நாங்கள் நேரில் பார்ப்பது சிறந்தது. மேலும் ஒரு அதிரடியான ஆட்டத்தை ரஸல் வெளிப்படுத்தி ரசிகர்களை மகிழ்வித்தார். இதற்காக அவருக்கு நன்றியை தெரிவிக்கிறேன்.

ஹர்திக் பாண்டியா ஆட்டம் அபாரமாக இருந்தது. ஆனால் எங்களது பந்து வீச்சாளர்கள் நெருக்கடியான கட்டத்தில் சிறப்பாக பந்து வீசினார்கள்.

தொடர் தோல்விக்கு முற்றுப் புள்ளி வைத்தது மகிழ்ச்சியை அளிக்கிறது என்றார். (க)

# இதை என்னால் மறக்க முடியாது

## அவுஸ்திரேலிய வீரர் உருக்கம்



தனக்கு ஜெர்ஸியை கொடுத்த டோனி மற்றும் கோலி இருவருக்கும் அவுஸ்திரேலிய வீரர் ஆரோன் பின்ச் தனது நன்றிகளை தெரிவித்துள்ளார்.

அவுஸ்திரேலிய கிரிக்கெட் அணி கடந்த பெப்ரவரி மாதம் இந்தியாவில் சுற்றுப்பயணம் செய்து விளையாடியது. 2 போட்டிகள் டி-20 தொடரை அவுஸ்திரேலியா வென்றது. அதன் பின்னர் நடந்த 5 போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரில், இந்திய அணி முதல் இரண்டு போட்டிகளில் வெற்றி பெற்றது.

ஆனால், அடுத்த 3 போட்டிகளிலும் தொடர்ச்சியாக வெற்றி பெற்று அவுஸ்திரேலியா தொடரை கைப்பற்றியது.

இந்த தொடர் முடிந்து ஒன்றரை மாதம் ஆகும் நிலையில், அவுஸ்திரேலிய வீரர் ஆரோன் பின்ச் தற்போது தனது இன்ஸ்டாகிராம் பக்கத்தில் ஒரு புகைப்படத்தை வெளியிட்டுள்ளார்.

'இந்தியாவிற்கு எதிரான கடைசி தொடரில் விளை யாடிய போது டோனி மற்றும் கோலி எனக்கு தங்கள் ஜெர்ஸியை கொடுத்தது மிக அதிர்ஷ்டமானது.

அதே நேரத்தில் களத்தில் நாங்கள் எங்கள் நாடுகளுக்காக கடுமையாக மோதிக் கொண்டோம். நான் விளையாடிய அனைத்து போட்டிகளில் இந்திய தொடரில் விளையாடிய 2 போட்டிகளை பெருமையாக மதிக்கிறேன்.

இந்த வாய்ப்பை எங்களுக்கு தந்ததால் பெருமை கொள்வதற்கும், பாராட்டுவதற்கும் இது முக்கிய நேரமாகும்' என தெரிவித்துள்ளார். (க)

வலம்புரி SPORTS விளையாட்டுச் செய்திகள்

# 'வீடும் தரவில்லை பணமும் தரவில்லை'

## பிரபல நிறுவனத்தின் மீது டோனி வழக்கு



இந்திய அணி வீரர் எம்.எஸ். டோனி அமரப்பள்ளி குழுமத்துக்கு எதிராக உச்ச நீதிமன்ற வழக்கு தொடர்ந்துள்ளார்.

பிரபல ரியல் எஸ்டேட் நிறுவனமான அமரப்பள்ளியிடம் தனக்கு பங்களா வேண்டும் என்று இந்திய கிரிக்கெட் அணி வீரர் டோனி ஒப்பந்தம் செய்திருந்தார்.

இதனைத் தொடர்ந்து, அவரை விளம்பர தூதராக நியமித்தது அமரப்பள்ளி நிறுவனம். அதன்படி கடந்த 2009ஆம் ஆண்டில் இருந்து 2016 ஆம் ஆண்டு வரை, அந்நிறுவனத்தின் விளம்பர தூதராக இருந்தார் டோனி. இந்நிலையில் தான் அந்நிறுவனத்திற்கு எதிராக டோனி உச்ச நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்துள்ளார்.

அவர் இது தொடர்பாக கூறுகையில்.

'ராஞ்சியில் அமரப்பள்ளி சஃபாரி திட்டத்தில் பங்களா வீடு ஒன்றை முன்பதிவு செய்திருந்தேன். அதே போல அந்நிறுவனத்தின் அந்த திட்டத்துக்கு விளம்பர தூதராகவும் இருந்தேன்.

அந்நிறுவனம் விளம்பர தூதருக்கான பணத்தை தராமல், பங்களா வீட்டையும் தராமல் என்னை ஏமாற்றியுள்ளது' என தெரிவித்துள்ளார். அத்துடன் அந்நிறுவனத்திடம் இருந்து 40 கோடி ரூபாய் பெற்று தருமாறு உச்சநீதிமன்றத்தில் டோனி மனுத்தாக்கல் செய்திருக்கிறார். (க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இராணுவ சீருடை...

இரண்டாம் கட்ட தாக்குதலை நடத்தலாம் என பாதுகாப்பு தரப்பு எச்சரிக்கை விடுத்துள்ளது. வான் ஒன்றினை பயன்படுத்தி, இராணுவ சீருடையை ஒத்த சீருடையில் மறைந்திருந்து இந்த தாக்குதலை அவர்கள் நடத்தலாம் என எச்சரிக்கப்பட்டுள்ளது.

5 இலக்குகள் மீது ஞாயிறு அல்லது திங்கட்கிழமை இந்த தாக்குதல் நடத்தப்பட வாய்ப்புகள் இருப்பதாக எச்சரிக்கை செய்யப்பட்டுள்ளது. இது தொடர்பில் அமைச்சரவை பாதுகாப்புப் பிரிவின் பணிப்பாளர் ஊடாக அமைச்சர்களின் பாதுகாப்புக்கு பொறுப்பான அதிகாரிகளுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

இராணுவ உடை அணிந்தவர்களால் இந்த தாக்குதல் நடத்தப்படும் வாய்ப்பு இருப்பதாகவும் அந்த அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

அமைச்சர்களின் பாதுகாப்புதுறை அதிகாரியிடம் அனைத்து பாதுகாப்பு தலைவர்களுக்குமான கடிதம் என விடுக்கப்பட்டுள்ள எச்சரிக்கை தகவலில்,

இலங்கையில் 5 இடங்களில் தாக்குதல் நடத்தப்படும் சாத்தியம் உள்ளது. அந்த 5 இடங்களில் மட்டக்களப்பும் உள்ளடங்கியுள்ளது. மேலும் 4 இடங்கள் தொடர்பாக அறிவிக்கப்படவில்லை. மேலும் இதில் அதிக சனத்தொகை காணப்படும் இடங்கள் இலக்காக வைக்கப்படலாம்.

அத்தோடு இதை மேற்கொள்பவர்கள் இராணுவ உடை அணிந்திருக்க வாய்ப்பு இருப்பதாகவும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த ஈஸ்டர் ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற தாக்குதலையடுத்து தலைநகர் உட்பட நாட்டின் பல பகுதிகளிலும் முப்படை விசேட அதிரடிப்படை மற்றும் பொலிஸார் குவிக்கப்பட்டு பாதுகாப்பு தீவிரப்படுத்தப்பட்டுள்ளது.

இந்த நிலையில் மீண்டும் தாக்குதல் நடத்த திட்டமிடப்பட்டுள்ளதாக எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளதாக சர்வதேச ஊடகம் செய்தி வெளியிட்டுள்ளது. (ம-3)

## இலங்கையை...

லும் மழை மற்றும் காற்றுடனான வானிலை நிலவும்.

இந்த சூறாவளியானது. மே முதலாம் திகதி வரை வடமேற்கு திசையில் இலங்கையின் கிழக்குக் கரையை விட்டு விலகி நகரக் கூடும்.

அதன் பின் மீண்டும் படிப்படியாகத் திரும்பி வடகிழக்கு திசையில் நகரக் கூடிய சாத்தியம் காணப்படுகின்றது.

நாடு முழுவதும் குறிப்பாக வடக்கு, வட மத்திய, வடமேல் மற்றும் தென் மாகாணங்களிலும் திருகோணமலை மற்றும் அம்பாறை மாவட்டங்களிலும் மணித்தியாலத்துக்கு 60 கிலோ மீற்றர் வரையான வேகத்தில் பலத்த காற்று வீசும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

நாட்டின் பெரும்பாலான பிரதேசங்களில் அவ்வப்போது மழையோ அல்லது இடியுடன் கூடிய மழையோ பெய்யக் கூடிய சாத்தியம் காணப்படுகின்றது.

சப்ரகமுவ, மத்திய, தென், மேல், மற்றும் வடமேல் மாகாணங்களிலும் மன்னார் மாவட்டத்திலும் சில இடங்களில் 150 மி.மீக்கும் அதிகமான மிகப் பலத்த மழைவீழ்ச்சி எதிர்பார்க்கப்படுகின்றது.

ஏனைய பிரதேசங்களில் சில இடங்களில்100 மி.மீ அளவான பலத்த மழைவீழ்ச்சி எதிர்பார்க்கப்படுகின்றது.

பொதுமக்களும், கடலில் பயணம் செய்வோரும், மீனவ சமூகமும் இவ்விடயம் குறித்து வளிமண்டலவியல் ஆராய்ச்சி திணைக்களத்தால் எதிர்காலத்தில் தொடர்ந்து வழங்கப்படும் ஆலோசனைகள் தொடர்பாக அவதானமாக இருக்குமாறு வளிமண்டலவியல் திணைக்களம் கோரியுள்ளது. (ம-3)

## தயார் நிலையில்...

(என்.எஸ்.ஜி) உதவியை கோரியதாக, இந்திய ஊடகமான எக்னோமிக் ரைம்ஸ் செய்தி வெளியிட்டுள்ளது.

எனினும், தேசிய காவல்படை கொமாண்டோக்களை அனுப்புவது தொடர்பில் கொழும்பு அரசிடமிருந்து முறைப்படியான கோரிக்கை இந்தியாவுக்கு வரவில்லை என்றும் அந்தச் செய்தியில் கூறப்பட்டுள்ளது.

எவ்வாறாயினும், இந்தியா தனது நாட்டுக்கு வெளியே தமது படையினரை அனுப்புவதை கொள்கையளவில் விரும்பவில்லை என்றும், அதனால் முறைப்படியான கோரிக்கைக்காக காத்திருப்பதாகவும், அந்தச் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கையில் கடந்த வெள்ளிக்கிழமை 15 பேர் கொல்லப்பட்ட தாக்குதலை அடுத்து, தீவிரவாத முறியடிப்புக்கான தேசிய காவல் படை கொமாண்டோக்களின் அணி ஒன்று சென்னையில் தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளது. இதுபற்றி இந்தியாவின் உள்துறை அமைச்சு அதிகாரி ஒருவர் கூறுகையில்,

குண்டுத் தாக்குதலுக்குப் பிந்திய விசாரணைகளில் தேசிய காவல்படைக்கு உள்ள நிபுணத்துவத்தை கருத்தில் கொண்டு, அவர்களை தயார் நிலையில் இருக்குமாறு கேட்டுள்ளோம்.

புதுடில்லியில் உள்ள மூத்த அதிகாரிகள் அவர்களுக்கு உதவுவார்கள். தேசிய காவல் படையைச் சேர்ந்த 100 இற்கும் அதிகமானோரைக் கொண்ட தீவிரவாத முறியடிப்பு மற்றும் பணய முறியடிப்பு அணிகள் அங்கு நிலை கொண்டுள்ளன.

இலங்கையில் அவர்களை நிறுத்தி உதவுவது தொடர்பாக, இரண்டு நாடுகளின் வெளிவிவகார அமைச்சுகளும்தான் இறுதியான முடிவை எடுக்க வேண்டும் என்று குறிப்பிட்டுள்ளார்.

அதேவேளை, குண்டுவெடிப்புகளை அடுத்து விசாரணைகளுக்காக, இந்தியாவின் றோ மற்றும் ஐ.பி ஆகியவற்றைச் சேர்ந்த இரண்டு அதிகாரிகளைக் கொண்ட குழுவொன்று ஏற்கெனவே இலங்கையில் தங்கியுள்ளது என்றும் அந்தச் செய்தியில் கூறப்பட்டுள்ளது. (ம-3)

## தேசிய தௌஹீத்...

இந்த பள்ளிவாசல்களுக்குள் பெண்களும் செல்வதற்கு அனுமதிக்கப்படுகின்றனர் என்று படையினருக்கு தகவல் கிடைத்துள்ளது.

இந்த அமைப்பின் முதல் தலைவர் நிசாம். இவர் பிரிட்டன் பல்கலைக்கழகம் ஒன்றில் கல்வி கற்று பரிஸ்டர் பட்டம் பெற்றவர். இவர் 2012ஆம் ஆண்டு சிரியாவுக்கு சென்றார். அங்கு ஐ.எஸ்.ஐ.எஸ் அமைப்பில் இணைந்து பயிற்சி பெற்ற பின்னர், நாடு திரும்பினார்.

மீண்டும் அவர், 45 பேரை அழைத்துக் கொண்டு சிரியாவுக்குச் சென்றார். அங்கு அவர்களுக்கு பயிற்சிகள் அளிக்கப்பட்டன. எனினும், அங்கு நிசாம் கொல்லப்பட்டார்.

பயிற்சிகளை முடித்துக் கொண்ட 45 பேரும், நாடு திரும்பி, இந்த அமைப்பை வலுப்படுத்தினர். இதில் தற்போது 139 பேர் உள்ளனர். அவர்கள், குண்டுகளை தயாரிப்பதற்கு பயிற்சி பெற்றுள்ளனர். தற்கொலைக் குண்டுகளை வெடிக்க வைத்த 6 பேரும் இந்த அமைப்பைச் சேர்ந்தவர்களே என்பது உறுதியாகியுள்ளது. (ம-3)

## முப்படை, பொலி...

ங்கை பாதுகாப்பு கட்டமைப்பில் மேற்கொள்ளப்படும் மாற்றங்களில், முதலாவது பெரிய மாற்றமாக இது கருதப்படுகிறது.

இந்த கூட்டு நடவடிக்கை தலைமையக கட்டளை தளபதியாக மேஜர் ஜெனரல் சத்திப்பிரிய லியனகே நியமிக்கப்பட்டுள்ளார். மேல்மாகாண கட்டளை தளபதியாக இது வரை பதவி வகித்து வந்தார் இவர், கூட்டு நடவடிக்கை கட்டளை தலைமையகத்தில் கடற்படை, விமானப்படை, பொலிஸ் அதிகாரிகள் தலா ஒவ்வொருவர் இணைப்பாளர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

கடற்படையை சேர்ந்த ரியர் அட்மிரல் வாஸ் பெரேரா, விமானப்படையை சேர்ந்த எயார் வைஸ் மார்ஷல் WLR.ரொட்ரிகோ, பொலிஸை சேர்ந்த LKD.அனில் பிரியந்த ஆகியோரே இணைப்பாளர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர். கொழும்பில் இருந்து கூட்டு நடவடிக்கை தலைமையகம் இயங்கும். (ம-3)

## முன்னாள் போரா...

றெஜிமன்ட் முகாமிற்கு வருமாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

இராணுவத்தினர் என தெரிவித்து முதலில் தொலைபேசியில் முன்னாள் போராளிகளுக்கு அழைப்பு எடுத்து தெரிவிக்கப்பட்டது.

பின்னர் மீண்டும் தொலைபேசி அழைப்பு எடுத்த அவர்கள் முன்னாள் போராளிகள் இருக்கும் இடத்தினை கேட்டு தெரிந்து கொண்ட பின்னர் அவர்களின் வீடுகள் மற்றும் அவர்கள் பணிபுரியும் இடத்திற்கு ஒரு வெள்ளை வானில் ஏறத்தாழ 4 பேர் இராணுவத்தினர் என கூறி நேரில் சென்றும் கூறியுள்ளனர். இருப்பினும் குறித்த விடயத்தை இராணுவத்தினர் மறுத்துள்ளனர்.(ம-9)

## தாக்குதலை உத்...

வெளியிட்டு இலங்கையில் அண்மைக் காலமாக இடம்பெற்ற தாக்குதல்களைக் குறிப்பிட்டுள்ளார்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை ஈஸ்டர் தினத்தன்று கொழும்பு, மட்டக்களப்பு, நீர்கொழும்பு உள்ளிட்ட பகுதிகளில் அடுத்தடுத்து மேற்கொள்ளப்பட்ட தற்கொலைக் குண்டுத்தாக்குதலில் இதுவரையில் 253 பேர் உயிரிழந்துள்ளதுடன், 500 இற்கும் மேற்பட்டவர்கள் காயமடைந்துள்ளனர்.

இந்நிலையில் இந்த தாக்குதலுக்கும் சாய்ந்தமருது தற்கொலை குண்டு தாக்குதலுக்கும் ஐ.எஸ் அமைப்பு பொறுப்பேற்றுக் கொண்ட நிலையில் மீண்டும் உத்தியோகபூர்வமாக பொறுப்பேற்று கொண்டுள்ளது.(ம-3)

# மைத்திரியும் ரணிலும் பதவி விலக வேண்டும்

## ஜே.வி.பி கோரிக்கை

(கொழும்பு)

மக்களின் நியாயமான போராட்டங்களை அடக்க சட்டத்தை கையில் எடுக்கும் போது சட்டப்புத்தகத்தை புரட்டிப்பார்க்காத பிரதமர் சர்வதேச பயங்கரவாத ஊடுருவலை தடுக்க நடவடிக்கை எடுக்கையில் அதற்கு சட்டத்தில் இடமில்லை என கூறுவது மிகவும் மோசமான செயற்பாடாகும்.

தேசிய பாதுகாப்பை பலவீனப்படுத்திய ஜனாதிபதியும் பிரதமரும் உடனடியாக பதவி விலக வேண்டும் என ஜே.வி.பியின் தலைவர் அனுரகுமார திசாநாயக தெரிவித்தார்.

மக்கள் விடுதலை முன்னணியின் செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இதனைக் குறிப்பிட்டார். இது குறித்து அவர் மேலும் கூறுகையில்,

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் கருத்துக்கள் மிகவும் மோசமானதாகவே அமைந்துள்ளது. சர்வதேச பயங்கரவாதிகளை தண்டிக்க இலங்கையில் சட்டம் இல்லை என்றால் அதனை உருவாக்க வேண்டியது அரசாங்கத்தின் கடமை. ஐ.எஸ் பயங்கரவாதிகளுடன் தொடர்புபட்ட இலங்கை முஸ்லிம்கள் இருப்பார்கள் என்றால் அவர்களை அடையாளம் காண வேண்டியது அரசாங்கத்தின் கடமையாகும்.

இவற்றை இல்லாதொழிக்க பாதுகாப்பு படைகளுக்கு அதிகாரங்களை வழங்க வேண்டியது அரசாங்கத்தின் கடமையாகும். ரணில் விக்கிரமசிங்கவிற்கு இலங்கையில் மாணவர்களின் கோரிக்கைகளை கேட்டு நடத்தும் ஆர்ப்பாட்டங்களை அடக்க தொழிலாளர் போராட்டங்களை அடக்க ஒருபோதும் சட்டப்புத்தகத்தை புரட்டிப்பார்க்கமாட்டார்.

ஆனால் இவ்வாறு சர்வதேச பயங்கரவாத செயற்பாடுகளை தடுக்கையில் மாத்திரம் இவர்களுக்கு சட்டம் தடையாக இருக்கும். இவர்கள் அனைவரும் உடனடியாக தமது பதவியை துறந்து அரசாங்கத்தை விட்டு வெளியேற வேண்டும் எனத் தெரிவித்தார். (ம-3)

## சுன்னாகம் பகுதியிலுள்ள

# இரு உணவகங்களில் பாவனைக்குதவாத அரிசி!

(யாழ்ப்பாணம்)

இலங்கை சட்டதிட்டங்களுக்கு அமைவாக பாவனைக்கு உதவாத ஒரு தொகுதி அரிசிப்பொதிகள் சுன்னாகம் பகுதியில் உள்ள இரு உணவகங்களில் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளன.

யாழ் பொலிஸாருக்கு கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில் சுன்னாகம் பொலிஸ் நிலையத்துக்கு அண்மையில் உள்ள உணவகத்துக்கும், கே.கே.எஸ் வீதியில் உள்ள உணவகத்துக்கும் அதிரடியாக பொலிஸார் சென்று தேடுதல் நடவடிக்கையை மேற்கொ ண்டனர்.

அப்போது பிரியாணி தயாரிப்பதற்கு ஆயத்தமாகியிருந்த அரிசியை பரிசோதித்த பொலிஸார், உற்பத்தி மற்றும் பாவனை முடிவு திகதி பதிக்கப்படாத மற்றும் இலங்கை சட்டதிட்டங்களுக்கு அமைவாக பாவனைக்கு உதவாத 25 கிலோ எடையுடைய 9 பொதிகள் இரு உணவகங்களிலும் மீட்கப்பட்டுள்ளன.

குறித்த சம்பவத்தை பார்த்திருந்த வாடிக்கையாளர்கள் குறித்த உணவகங்களில் வாங்கிய உணவை திருப்பிக் கொடுத்து விட்டு சென்றனர்.

யாழ்ப்பாணத்தில் உள்ள ஏனைய கடைகளிலும் குறித்த அரிசி வகை இருக்கும் என தெரிவித்த பொலிஸார் மேலதிக தேடுதல் நடவடிக்கையையும் மேற்கொள்ளவுள்ளனர். (ம-9)


சுபிரி வாசனா
திகதி 2019/04/29
சீட்டிழுப்பு இலக்கம் 1422
எழுத்து 24 | வெற்றி இலக்கம் 07 23 40 66 | 08 24
தேசிய லொத்தர் சபை

மெகா பவர்
திகதி 29/04/2019
சீட்டிழுப்பு இலக்கம் 373
C 26 10 22 39 54
தேசிய லொத்தர் சபை

மஹஜன சம்பத
திகதி 2019/04/29
சீட்டிழுப்பு இலக்கம் 3906
ஆங்கில எழுத்து M | வெல்லப்பட்ட இலக்கங்கள் 5 1 3 7 7 3
தேசிய லொத்தர் சபை

கொவிசெத
திகதி 2019.04.29
சீட்டிழுப்பு இலக்கம் 2104
ஆங்கில எழுத்து W | வெல்லப்பட்ட இலக்கங்கள் 32 46 66 68
தேசிய லொத்தர் சபை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பயங்கரவாதத்...

இன்று இடம்பெறவுள்ள அமைச்சரவை கூட்டத்தில் நியமிக்கப்படும் என ஜனாதிபதி தெரிவித்தார்.

அத்தோடு சுற்றுலாத்துறையின் மேம்பாட்டிற்காக சலுகை அடிப்படையில் நிதியு தவிகளை வழங்குதல் உள்ளிட்ட உதவிகள் தொடர்பாக இன்று இடம்பெறவுள்ள அமைச்சரவை கூட்டத்தில் கலந்துரையாடவுள்ளதாக ஜனாதிபதி குறிப்பிட்டார்.

சுற்றுலாத்துறை மற்றும் ஹோட்டல் துறை சார்ந்த வர்த்தகர்களுடன் நேற்று முற்பகல் ஜனாதிபதி செயலகத்தில் இடம்பெற்ற சந்திப்பின்போதே ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன இதனைத் தெரிவித்தார். இதன்போது தொடர்ந்தும் கருத்துத் தெரிவித்த ஜனாதிபதி,

பயங்கரவாதத்தை விரைவில் தோற்கடிப்பதற்கான உறுதியான ஆற்றல் காணப்படுவதாக இதன்போது வலியுறுத்தினார். பயங்கரவாதத்தை ஒழிப்பதற்கான தேடுதல்கள் தற்போது நாடளாவிய ரீதியில் மிக வெற்றிகரமாக முன்னெடுக்கப்பட்டு வருவதோடு, நாட்டின் பாதுகாப்புத் துறை மீதுதான் பூரண நம்பிக்கை கொண்டிருப்பதாகவும் பயங்கரவாதத்திற்கு எதிரான நடவடிக்கைகள் எந்தவித பின்னடைவுகளுமின்றி தொடர்ச்சியாக முன்னெடுக்கப்படுமெனவும் ஜனாதிபதி தெரிவித்தார். இதனால் எவரும் அநாவசியமாக அச்சப்படத் தேவையில்லை என்பதோடு நேற்று முதல் நாட்டின் சகல செயற்பாடுகளும் இயல்பு நிலைக்கு திரும்பியுள்ளதாகவும் ஜனாதிபதி குறிப்பிட்டார்.

வர்த்தகத்துறை சார்ந்த இடங்களுக்கு பாதுகாப்புத் தேவையாயின் அதனை வழங்குவதற்கு, முன்னெடுப்பதற்கு அரசாங்கம் தயாராகவுள்ளதாக குறிப்பிட்ட ஜனாதிபதி இந்த நிலைமையில் இருந்து மீண்டும் தனது வர்த்தகத்தை இயல்பு நிலைக்கு கொண்டு வருவதற்காக வர்த்தக துறை சார்ந்தோருக்கு தேவையான அனைத்து வசதிகளும் ஒத்துழைப்புகளும் குறைவின்றி பெற்றுக்கொடுக்கப்படுமென்றும் அவர் குறிப்பிட்டார்.

அது தொடர்பான வேண்டுகோள்களை தனிப்பட்ட ரீதியிலேனும் தன்னை சந்தித்து முன்வைக்க முடியும் எனத் தெரிவித்த ஜனாதிபதி, இச்செயற்பாடுகள் மீண்டும் இயல்பு நிலைக்கு திரும்பும் வரை இரண்டு வாரங்களுக்கு ஒரு முறையாவது வர்த்தக சமூகத்தை சந்தித்து கலந்துரையாட எதிர்பார்ப்பதாகவும் தெரிவித்தார்.

நாட்டின் தேசிய பொருளாதாரத்தை பலப்படுத்துவதற்கு சுற்றுலாத்துறையினால் கிடைக்கும் விசேட உதவிகளை இதன்போது பாராட்டிய ஜனாதிபதி இந்த துரதிர்ஷ்டவசமான நிகழ்வினால் எதிர்நோக்க நேர்ந்துள்ள சிக்கலான நிலைமை தொடர்பில் சகல வர்த்தக துறையினருக்கும் வருத்தம் தெரிவித்தார்.

தொடர்ந்தும் கருத்துத் தெரிவித்த ஜனாதிபதி, நாடு எதிர்நோக்க நேர்ந்துள்ள இந்த துன்பியல் சம்பவம் தொடர்பாக ஒருவருக்கொருவர் குறைகூறிக்கொண்டிருப்பதை விடுத்து அனைவரும் ஒன்றிணைந்து நாட்டை மீளக் கட்டியெழுப்பி நாட்டில் சமாதானத்தை பாதுகாப்பதற்கு அர்ப்பணிப்புடன் செயற்பட வேண்டும் என தெரிவித்தார்.

நாட்டில் ஏற்பட்டுள்ள அசௌகரியமான நிலையை சமநிலைப்படுத்தி சுற்றுலாத் துறையையும் ஹோட்டல் துறை சார்ந்த வர்த்தகத்தையும் மீண்டும் பலப்படுத்துவதற்காக மேற்கொள்ளப்பட வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பான தமது ஆலோசனைகளையும் கருத்துக்களையும் வர்த்தக சமூகத்தினர் இதன்போது முன்வைத்தனர்.

வர்த்தகர் ஹெறி ஜயவர்த்தன கருத்துத் தெரிவிக்கையில், சர்வதேச இயக்கமான இந்த பயங்கரவாத குழுவினரை மிக வெற்றிகரமாக எதிர்கொண்டு விரைவாக மீள் எழுந்துள்ள ஒரே நாடு இலங்கையாகும் எனக் குறிப்பிட்டார்.

அதற்கான கௌரவம் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவையும் எமது இராணுவத்தினரை யுமே சாருமென தெரிவித்த ஹெறி ஜயவர்த் தன, எதிர்வரும் சில நாட்களுக்குள் இந்த பய ங்கரவாதம் இலங்கையிலிருந்து முற்றாக ஒழிக்கப்பட்டு, நாடு இயல்பு நிலைக்கு திரும்பும் என எதிர்பார்ப்பதாக தெரிவித்தார்.

பயங்கரவாத சவால்களுக்கு மத்தியில் ஜனாதிபதி செயற்பட்ட விதம் தொடர்பில் பாராட்டுத் தெரிவித்த ஹெறி ஜயவர்த்தன, பயங்கரவாதத்திற்கெதிராக ஜனாதிபதி மேற்கொண்ட நேரடியான நடவடிக்கைகளையும் பிரகடனங்களையும் நன்றியுடன் நினைவுகூறியதோடு அவையே தற்போதைய தேவையாகும் எனவும் தெரிவித்தார்.

இலங்கை ஹோட்டல் சங்கத்தின் தலைவர் சனத் உக்வத்த, வர்த்தகர் தம்மிக பெரேரா உள்ளிட்டோர் சிலர் வர்த்தக சமூகத்தினர் சார்பில் கருத்துத் தெரிவித்த அதே வேளை, இந்த இக்கட்டான சூழ்நிலையை மீளக்கட்டியெழுப்புவதற்கான சக்தியாக செயற்படுதல் தொடர்பாக அனைவரும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு தமது நன்றிகளை தெரிவித்தனர்.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, அமைச்சர்கள் ஜோன் அமரதுங்க, பாட்டலி சம்பிக்க ரணவக்க, அர்ஜுன ரணதுங்க, மலிக் சமரவிக்ரம, இரான் விக்ரமரத்ன, ரஞ்சித் அலுவிகாரே உள்ளிட்ட பல பாராளுமன்ற உறுப்பினர்களும் ஜனாதிபதியின் செயலாளர் உதய ஆர்.செனெவிரத்ன, தேசிய பொருளாதார சபையின் பொதுச் செயலாளர், பேராசிரியர் லலித் சமரகோன் மற்றும் அமைச்சின் செயலாளர்கள் உள்ளிட்ட அரச அதிகாரிகளும் வர்த்தக சபையின் பிரதிநிதிகள் உள்ளிட்ட வர்த்தக சமூகத்தினரும் இச்சந்திப்பில் கலந்துகொண்டனர். (ம-3)

## மண்கும்பானில்...

விசேட அதிரடிப்படை, பொலிஸார் சுற்றிவளைத்து தேடுதல் நடத்தினர். சோதனையின் போது இராணுவத்தினர் பாவிக்கும் குண்டு துளைக்காத கவசம், அமெரிக்க கொமாண்டோ படையினர் பயன்படுத்தும் நீர்கலன் பை, ரி 56 தோட்டாக்கள் 2 மற்றும் பட்டாசுகள் கைப்பற்றப்பட்டன.

இதையடுத்து மண்கும்பான் ஜும்மா பள்ளிவாசல் தலைவர் விசாரணைக்காக அழைத்துச் செல்லப்பட்டு, விசாரணையின் பின் கைதானார். (ம-3-9)

## இலங்கையில்...

பேஸ்புக் உள்ளிட்ட நிறுவனங்கள் தீர்மானித்துள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. இதனால் இலங்கையில் சமூக வலைத்தளங்கள் முழுமையாக இல்லாமல் போகும் நிலை ஏற்பட்டுள்ளது என்று இலங்கை தொழில்நுட்ப முகவர் நிலையம் தெரிவித்துள்ளது.

தற்போது நடைமுறையிலுள்ள பேஸ்புக் உட்பட சமூக வலைத்தளங்களின் தடையை இலங்கை அரசு நீக்காவிடின் இந்த நிலைமை ஏற்படும் என்றும் முகவர் நிலையம் அறிக்கை வெளியிட்டுள்ளது. (ம-3)

## தௌஹீத் ஜமாத்...

வரை இடம்பெற்ற இராணுவத்தின் சுற்றிவளைப்பில் மன்னார் எருக்கலம்பிட்டி பகுதியில் 12 சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

நேற்றுக் காலை தொடக்கம் மன்னார் மாவட்டம் முழுவதும் முப்படையினரின் சோதனை நடவடிக்கைகள் மற்றும் ரோந்து நடவடிக்கைகள் இடம்பெற்ற நிலையில் முஸ்லிம் மக்கள் செறிந்து வாழும் எருக்கலம்பிட்டி பகுதியில் மேற்கொள்ளப்பட்ட சோதனை நடவடிக்கையின் போது தடை செய்யப்பட்ட தௌஹித் ஜமாத் அமைப்பின் முக்கியஸ்தர்கள், அங்கத்தவர்கள் என்ற அடிப்படையில் 12 சந்தேக நபர்கள் இராணுவத்தினரால் அதிரடியாக கைது செய்யப்பட்டுள்ளனர்.

குறித்த சந்தேக நபர்கள் இராணுவத்தின் ஊடாக நேற்று மன்னார் பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளனர். தொடர்ச்சியான பாதுகாப்பு கடமை காரணமாக குறித்த சந்தேக நபர்கள் அனைவரும் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ளனர்

இவர்கள் தொடர்பான விசாரணைகள் மற்றும் மேலதிக தகவல்களை பெறும் நடவடிக்கைகள் மற்றும் தடை செய்யப்பட்ட அமைப்புடனான இவர்களுடைய தொடர்பு பற்றிய விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ம-285)

## தென்மராட்சியில்...

பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். பொலிஸார் உழவு இயந்திரம் ஒன்றை கொண்டு சென்றதாக தெரிவிக்கப்பட்டது. கடந்த வாரம் கச்சாய் வீதியில் நிதர்சன் என்பவரை வெட்டிக் காயப்படுத்தியவர்களே நேற்று தாக்குதல் நடத்தியுள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டது

இந்த தாக்குதலில் வீட்டு உபகரணங்களும் 6 மோட்டார் சைக்கிள்கள் உட்பட 25 லட்சம் ரூபாய் பெறுமதியான சொத்துக்கள் சேதமாக்கப்பட்டதெனவும் தெரிவித்தனர். இது தொடர்பாக மேலதிக விசாரணைகளை கொடிகாமம் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ம-30-114)

## பதில் பொலிஸ்மா...

அதிபராக சி.டி.விக்ரமரத்ன நியமிக்கப்பட்டுள்ளார்.

பொலிஸ்மா அதிபர் பதவி விலக வேண்டுமென ஜனாதிபதி கேட்டுக் கொண்டபோதும், அவர் பதவி விலகியிருக்கவில்லை. பதவிவிலகுவார் என பகிரங்கமாக அறிவித்தும், பூஜித ஜயசுந்தர தனது பதவியிலிருந்து விலகவில்லை.

இந்தநிலையிலேயே நேற்று காலை அதிரடி நடவடிக்கையாக, பொலிஸ்மா அதிபர் பூஜித ஜயசுந்தரவை கட்டாய விடுப்பில் அனுப்பி விட்டு, பதில் பொலிஸ்மா அதிபராக மூத்த பிரதிப்பொலிஸ்மா அதிப்ர் சி.டி.விக்ரமரத்ன நியமிக்கப்பட்டுள்ளார். (ம-3)

## முஸ்லிம் உணவ...

உணவகத்தில் நேற்று ஆயுதங்கள் மீட்கப்பட்டுள்ளது.

வவுனியா குற்றத்தடுப்பு பிரிவு பொலிஸாருக்கு கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில் வவுனியா குற்றத்தடுப்பு பொலிஸார், புளியங்குளம் விசேட அதிரடிப்படையினர், இராணுவத்தினர் இணைந்து நேற்று மாலை விசேட சோதனை நடவடிக்கையினை முன்னெடுத்தனர்.

இதன்போது குறித்த முஸ்லிம் உணவகத்தின் விடுதி மற்றும் மலசலகூடத்தினை சோதனையிட்ட சமயத்தில் மலசலகூட தாவார கூடத்தில் மண்ணில் புதைக்கப்பட்டிருந்த நிலையில் இரண்டு கைக்குண்டு, மூன்று மிதிவெடி, பதினைந்து தோட்டாக்கள், இரண்டு ஆர்பிஜி குண்டுகள் என்பன கைப்பற்றப்பட்டுள்ளன.

கைப்பற்றப்பட்ட பொருட்களை கனகராயன் குளம் பொலிஸ் நிலையத்திற்கு எடுத்துச்செல்வதற்குரிய நடவடிக்கையினை பொலிஸார் முன்னேடுத்து வருவதுடன் குறித்த நிலையத்தின் உரிமையாளரை கைது செய்ய நடவடிக்கை மேற்கொண்டு வருகின்றனர்.

குறித்த உணவகம் தொடர்பாக அண்மைகாலமாக பல்வேறு சர்ச்சைகள் நிலவி வந்தமை குறிப்பிடத்தக்கது. (ம-250-286)

SPOKEN ENGLISH
நன்றாக English பேசவேணுமா?
இங்க வாங்க
100% Guaranteed
CTHI T.P 077 104 1923, 021 314 6171
உப்புமடம் சந்தி, K.K.S வீதி
கோண்டாவில், யாழ்ப்பாணம்

கட்டடம் வாடகைக்கு
மானிப்பாய் வீதி ஆறுகால்மடம் பிரதான வீதியருகே வாகனத்தரிப்பிடத்துடன் கூடிய களஞ்சியமாகவும், கடையாகவும் பாவிக்கக்கூடிய கட்டடம் (70 அடி நீளம், 30 அடி அகலம்) ஒன்றும் எதிரே கடையாக பாவிக்கக் கூடிய கட்டிடம் ஒன்றும் வாடகைக்கு உண்டு. தொடர்பு : 077 283 5005, 076 085 5501
(8662)

விரைவு பொதிகள் சேவை
விசேட விலை குறைப்பு
UK – 550 /=Kg
கனடா – 900 /=Kg
ஜேர்மனி – 700 /=Kg
நெதர்லாந்து – 700 /=Kg
(நிபந்தனைகளுக்குட்பட்டது)
DELIVERY IN 3-5 DAYS
0768226240
மானிப்பாய் • யாழ்ப்பாணம் • கிளிநொச்சி • சாவகச்சேரி • நெல்லியடி • பருத்தித்துறை • வல்வெட்டித்துறை
V2 TRAVELS
(C-6164)

வங்கியில் அடகு வைத்த நகைகளை மீட்க முடியவில்லையா?
நாம் மீட்டுத் தருகின்றோம்
றாஜ் நகை மாடம்
யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை, உடுப்பிட்டி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார், திருகோணமலை ஆகிய பகுதிகளில்
வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தை தந்து வாங்கப்படும்.
தொடர்பு: றாஜ் - 077 679 6623
(8614)

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603
021 567 1532

பங்குச்சந்தை முதலீடுகளுக்கான முழுமையான அறிவு
Share Market Workshop அடிப்படை முதலீட்டு உத்திகள்
CSE கொழும்பு பங்குப்பரிவர்த்தனை
மே 4 ஆம் திகதி சனிக்கிழமை காலை 9.00 மணி – மாலை 4.00 மணிவரை
கொழும்பு பங்குப்பரிவர்த்தனை, யாழ் – கிளையில்.
தொடர்புகளுக்கு: 021 222 1455 / 077 782 2014
பதிவுக்கட்டணம் ரூபா: 1000/=
(வ-6231)

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 30.04.2019 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org